பக்கங்கள்: இருபத்தாறு

Registered as a Newspaper

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9:வள்ளுவர் ஆண்டு 2030 கார்த்திகை 18 சனிக்கிழமை (04-12-1999) SANJEAVY.-Regenerative Tamil Weekly சிகரம்:27

# யுத்தத்தை நிறுத்தக் கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம்

## 40 சமாதான அமைப்புகள் வெள்ளியன்று நடத்த முஸ்தீபு

கொழும்பு, டிசெம்பர் 4

**உடனடியாக யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து 40 சமாதான் அமைப்புக்கள் எதிர்வரும் பத்தாம் திகதி தலைநகர் கொழும்பில் லிப்டன் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவிருக்கின்றன.**

காணாமற்போன படையினரின் உறவினர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் பங்குபற்றுவர் எனத் தாங்கள் எதிர்பார்ப்பதாக அந்த அமைப்பின் தலைவர் நாணயக்கார தெரிவித்தார்.

யுத்தத்தை நிறுத்தி சமாதான சூழ்நிலையை உருவாக்க தாம் எடுக்கும் முயற்சி குறித்து அவர் தகவல் வெளியிட்டார்.

"சமாதானச் சூழ்நிலையை ஏற்படுத்துவது தொடர்பாகப்பேசச் சந்தர்ப்பம் வழங்குமாறுகோரி விடுதலைப்புலிகளுக்கு கடிதம் அனுப்பியிருந்தோம்.

"விடுதலைப்புலிகளின் தலைவர்களான தமிழ்ச்செல்வன், கரிகாலன் ஆகியோர் எமக்கு எழுதிய பதிலில் அதற்குச் சம்மதம் தெரிவித்திருந்தனர்.

"தற்போதைய சூழ்நிலையில் அங்கு செல்லமுடியாதுள்ளது. ஜனாதிபதித்தேர்தல் முடிந்தபின்னா செல்வோம்" - என்று அவர் குறிப்பிட்டார்.

## புலிகள் கோரிக்கை

கொழும்பு,டிசெ.4

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான - விமானப் படையின் - விமான சேவையில் பயணம் செய்யவேண்டாமென்று விடுதலைப்புலிகள் 'புலிகளின்குரல்' வானொலி மூலம் மக்களைக் கேட்டுள்ளனர்.

படையினரின் முகாம்கள், முன்னரங்க நிலைகள் போன்றவற்றிலிருந்து தள்ளியிருக்குமாறு கோரும் எச்சரிக்கைகளையும் புலிகள் மீண்டும் மீண்டும் விடுத்துவருகின்றனர் என்று அரசு சார்புப்பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது. (உ)

## பாதை திறப்பது குறித்து இன்னும் முடிவில்லை!

வவுனியா,டிசெ.4

வன்னியில் இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசத்துக்கும் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்துக்கும் இடையில் போக்குவரத்துப் பாதையொன்றை திறப்பது தொடர்பாக ஆராய்வதற்காக அநுராதபுரத்தில் நேற்று கூட்டப்பட்ட உயர்மட்டக் கூட்டத்தில் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

அநுராதபுரம் அரச செயலகத்தில் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் புதிய பாதை ஒன்றை திறப்பது தொடர்பாக ஆராயப்பட்ட போதும் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்தப் பாதை திறப்பது தொடர்பாக கொழும்பிலுள்ள உயர்மட்டத்துடன் கலந்துரையாடியே முடிவு எடுக்க வேண்டியுள்ளது என்று ஆளுநர் அங்கு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றிய கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சில அத்தியாவசிய மருந்துகளை இங்கு எடுத்துவர அனுமதி மறுப்பு

### யாழ். ஆஸ்பத்திரி சேவை பாதிப்புறும் அபாயம்

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அத்தியாவசிய தேவையாகவுள்ள சில மருந்து வகைகளை கொழும்பில் இருந்து கொண்டுவருவதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துள்ளமையால் யாழ்.போதனா வைத்தியசாலையில் மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சத்திரசிகிச்சைக்கூடத்திற்குரிய சில மருந்துகள், எக்ஸ்றே பிலிம்கள், அவற்றுக்கான கலவை மருந்துகள், ஒட்சிசன் சிலிண்டர்கள், பல் சிகிச்சைக்குரிய மருந்துகள் போன்றவை யாழ்ப்பாணம் எடுத்துவர அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மேற்படி மருந்து பொருள்களை தருவிக்கும் விடயத்தில் தடைஏற்பட்டுள்ளதால் யாழ்.போதனாவைத்தியசாலையில் அவசர மற்றும் சத்திர சிகிச்சைகள் பாதிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி மறுக்கப்பட்டமை தொடர்பாக யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாகம் சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளதுடன் யாழ்.சிவில் நிர்வாக அதிகாரிகளுடனும் தொடர்புகொண்டுள்ளதாக தெரியவந்தது. (உ-5)

## ஜீ.சீ.ஈ. (சா.த.) பரீட்சை

## வன்னிக்கு வினாத்தாள் அனுப்புவது இழுபறியில்!

நாளை மறுதினம் ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. (சாதாரணதர) பரீட்சைக்கான வினாத்தாள்களை வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கு எடுத்துச்செல்வதில்தொடர்ந்து தடங்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவுக்கு எடுத்துவரப்பட்டுள்ள இந்த வினாத்தாள்களை மன்னார் ஊடாக - கடல்வழியாக - அங்கு அனுப்ப முன்னர் ஏற்பாடாகி இருந்தது.

இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கும், இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்கும் இடையில் பாதை ஒன்றைத் திறக்கவேண்டும் என்றும் -

அந்தப் பாதையூடாக வினாத்தாள்களை எடுத்துவரவேண்டும் என்றும் -

வன்னியில் உள்ள தரப்பினர் நிபந்தனை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிபந்தனையை படைத்தரப்பு ஏற்காத காரணத்தால் வினாத்தாள்களை அனுப்ப முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகள் இருதரப்பினருடனும் கலந்துரையாடிவருவதாக தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கொழும்பில் 24மணி நேரத்தில் 1,500 பேர் சுற்றிவளைத்துக் கைது!

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நேற்று முன்தினம் மாலை முதல் நேற்று மாலைவரை மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின்போது ஆயிரத்து 500பேர் விசாரணைக்காக கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு புறக்கோட்டை, வாழைத்தோட்டம், குணசிங்கபுர, செட்டித்தெரு ஆகிய பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு ஆயிரத்து 254பேர் கைது செய்யப்பட்டதாகவும்-

விசாரணைகளின் பின்னர் ஏழுபேர் தவிர்ந்த ஏனையோர் விடுவிக்கப்பட்டனர் எனவும் - பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று மாலை ஆமர் வீதியில் இடம்பெற்ற தேடுதலில் சுமார் 300 தமிழர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர் என தெரியவந்தது. (உ-3)

## காணாமற் போனோர் விவகாரம்: நாளை உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம்,டிசெ.4

குடாநாட்டில் கைதாகிக் காணாமற்போனவர்களில் 355 பேரைத் தேடித்தர முடியாதவர்கள் எனத் தெரிவித்து அவர்களது உறவினர்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கடிதம் அனுப்பியிருப்பதைக் கண்டித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் முன்பாக நாளை காலை 8.30 மணிமுதல் உண்ணாவிரதம் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கைதாகிக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தப்போராட்டத்தில் குடாநாட்டில் இயங்கும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்குபற்றவிருக்கின்றனர்.

செம்மணியில் புதைகுழி ஒன்றில் இருந்து எலும்புக்கூடுகளாக மீட்கப்பட்ட ரவி, ரமேஷ் ஆகியோரின் பெற்றோருக்கும் பாதுகாப்புஅமைச்சுச் செயலாளர் தேடித்தர முடியாதவர்கள் எனத் தெரிவித்துக் கடிதம் அனுப்பியுள்ளதாகவும் -

இதன் காரணமாக அவரின் கடிதத்தில் நம்பகத்தன்மை இல்லாமல் இருப்பதாகவும் - சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிவிப்பு:

## பேரினவாதக் கட்சிகளை ஆதரிக்குமாறு கோரும் தார்மீக உரிமை எமக்கில்லை

### வாக்குக் கொள்ளை போகும் ஆபத்து உள்ளது என்றும் எச்சரிக்கின்றார்

கொழும்பு,டிசெ.4

பேரினவாதக்கட்சிகள் எவற்றுக்கும் வாக்களிக்கும்படி தமிழ்மக்களைக் கோரும் தார்மீக உரிமை எமக்கில்லை. அதேசமயம் வாக்களிக்காமல் இருப்பதனால் வாக்குகள் கொள்ளையடிக்கப்படும் அபாயமும் உள்ளது என்பதைக் கருத்தில்கொண்டு தமிழ் மக்கள் நிதானமாக சிந்தித்து செயற்படவேண்டும்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பங்கு குறித்து தமது முன்னணியின் சார்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை சுதந்திரமடைந்த பின் மாறிமாறி ஆட்சிக்கு வந்த பேரினவாத அரசியல் கட்சிகளான ஐ.தே.கட்சியும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தமது குறுகிய அரசியல் இலாபங்களுக்காக பாவித்துவந்தன என்பதே வரலாறு. ஐ.தே.கட்சியின் தீர்வினை சுதந்திரக் கட்சி எதிர்ப்பதும், அதன் தீர்வினை ஐ.தே.க. எதிர்ப்பதுமாகவே. இன்றுவரையான சிறீலங்கா அரசியல் உள்ளது.

ஆனால் 1994இல் சந்திரிகா இப்படியான அரசியல் கலாசாரத்தில் இருந்து சற்று மாறுபட்டு, "இனப் பிரச்சினை என்பது அரசியல் பிரச்சினை, இதற்கு யுத்தம் முடிவல்ல; இப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வே காணப்படவேண்டும்" எனத் தெளிவாக குறிப்பிட்டதன் காரணத்தாலேயே எந்தவித முன் நிபந்தனையுமின்றி 94இல் எமது கட்சி ஜனாதிபதித் தேர்தலில் அவரை ஆதரித்தது; அவரின் வெற்றிக்காக தமிழ் மக்கள் மத்தியில் நாம் முழு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச கண்காணிப்பாளர்கள் தொகுதிகள் தோறும் தேவை

### சந்திரிகாவைக் கோருகின்றார் ரணில்

கொழும்பு,டிசெ.4

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மோசடிகள் மற்றும் வன்முறைகள் இடம்பெறுவதைத் தவிர்க்க வேண்டுமானால் தேர்தல் தொகுதிகள் தோறும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த வருட முற்பகுதியில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களின்போது முன்னர் என்றுமில்லாதவாறு தேர்தல் மோசடிகள் இடம்பெற்றன. அதேவேளை அவை குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும் நான் பலமுறை கோரியிருந்தேன். ஆனால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

அதேபோல எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை சுதந்திரமானதும் நீதியானதுமாக நடத்துவது குறித்து இதுவரை தாங்கள் எடுத்துள்ள நடவடிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

## குருபரன் கல்வி நிறுவனம்

(புத்தூர்)

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த
மாணவர்களான

ஜெ. அபர்ணா    க. பிரதாப்
ம. சிந்துஜா    க. பிரதீப்
கு. சுகன்யா

ஆகியோரை வாழ்த்துகின்றோம்.

* புதிய கல்வியாண்டு 2000 க்கான
புதிய வகுப்புக்கள் யாவும்
( தரம் 3 – O/L, A/L கலை, வர்த்தகம் )

**ஆரம்பம்:- 05-12-99**
ஞாயிறு காலை 9.00

- நிர்வாகி

(71509)

---

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி
### சி. கணபதிப்பிள்ளை
அவர்களின்

## நூற்றாண்டு விழா

இடம் – யாழ். பல்கலைக்கழகம்
கைலாசபதி கலையரங்கு

காலம் – 04-12-1999 (இன்று) சனிக்கிழமை
முற்பகல் 9.00 மணி

ஊர்வலம், வாழ்த்துரைகள், முத்திரை வெளியீடு, நினைவுப் பேருரை, மரபுப் போட்டிகளில் வெற்றியீட்டி யவர்களுக்குப் பதக்கஞ் சூட்டுதல், விசேடமலர் வெளியீடு என்பன நடைபெறவுள்ளன.

* அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் *

அ. பஞ்சாட்சரம்
காரியதரிசி
பண்டிதமணி நூ. வெ. சபை.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(71508)

---

## பாராட்டி வாழ்த்துகிறோம்

1999-05-01 அன்று ஓய்வு பெற்ற
எமது ஆசிரியர்

**திரு.மு.விஸ்வநாதர்** அவர்களை

பல்லாண்டு காலம் கல்லூரி சிறக்க
எல்லோரும் வாழ்த்தச் சேவை பல செய்த
நல்லோனே வல்லோனே வாழ்க வாழ்க
என வாழ்த்துகிறோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யாழ். கனகரத்தினம் ம. ம. வி.

(71519)

---

## என்றும் நீங்கா எம் நினைவில்

ஆசிரியன் (உபாத்தியாயன்) என்ற சொல்லுக்கு
இலக்கணமாகத் திகழ்ந்த

அமரர்
### சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம்
(எஸ். பொன்னர்)

என்றும் எம் நினைவில்! அன்னாரின் ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பழைய மாணவர் சங்கம்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
207, கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்.

(C/10081)

---

## 31 ஆம் நாள்
## ஸ்கந்தாவின் இதயஅஞ்சலி

அமரர்
### சி. பொன்னம்பலம் (ஆதவன்)
(சித்திர ஆசிரியர்)

எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்த உத்தமரின் பிரிவால் துயருறுகிறோம். 22 ஆண்டுகள் எம் கல்லூரியில் நல்லாசிரியராக் கடமையாற்றிய பெருமகனாரின் ஆத்ம சாந்திக்காக எம் கல்லூரிச் சமூகம் பிரார்த்தித்து வணங்குகிறது.

அதிபர்,
ஆசிரியர் கழகம்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

கந்தரோடை,
சுன்னாகம்.

(7[illegible])

---

## கொடிகாமம் இளைஞரைக் காணோம்

யாழ்ப்பாணம்,டிசெ.4

கொடிகாமம் பகுதியில் கடந்த 30ஆம் திகதி தொடக்கம் இளைஞர் ஒருவர் காணாமல் போய்விட்டதாக உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தயாகரன் (வயது 20) என்பவரே காணாமற்போனவராவார்.

குறிப்பிட்டதினத்தில் காலை 11 மணிக்கு சாவகச்சேரிக்கு சென்று வருவதாகக் கூறிச் சென்றவர் பின்னர் வீடு திரும்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## சிகரெட் தட்டுப்பாடு நீங்கியது

யாழ்ப்பாணம்,டிசெ.4

குடாநாட்டில் நிலவிவந்த சிகரெட் தட்டுப்பாடு நீங்கிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போதியளவு சிகரெட் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளது என்றும்-

அதன் காரணமாக தட்டுப்பாடு நீங்கியுள்ளது என்றும்-

குடாநாட்டுக்கான சிகரெட் முகவர் தெரிவித்துள்ளார். (உ-3)

## கௌரவிப்பு விழா

கைதடி,டிசெ.4

கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் ப.செல்லத்துரை சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டதை கௌரவித்து கைதடி மக்களினால் நடத்தப்படும் கௌரவிப்பு விழா நாளை (ஞாயிறு) காலை 9.00 மணிக்கு கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய கலையரங்கில் நடைபெறவுள்ளது.

சி.வே.சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும் இந்தவிழாவில் முதன்மை விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சி.வி. கிருஷ்ணசாமி, சாவகச்சேரி மக்கள் வங்கி பிரதி முகாமையாளர் க.சண்முகலிங்கம், சாவகச்சேரி கோட்டக்கல்விப்பணிப்பாளர் நா.சத்தியநாதன், யாழ். மத்தியகல்லூரி அதிபர் க.இராசதுரை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-5-74)

## இளைஞன் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.4

ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவரது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த எட்வேட் ராஜா வசந்தரூபன் என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

இவரது கைது தொடர்பாக படையினரால் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது. (3-9)

---

## ராஜா
(யாழ்ப்பாணம்)
சரத்குமார் ~ சுகன்யா
மற்றும் பலர்
நடித்த
### மகாபிரபு
10.30, 2.00, 5.00

(சி-10032)

---

## லிபேட்டி
(அச்சுவேலி)
முரளி - ரோஜா
நடித்த
### ஊட்டி
காட்சிகள் 10.30, 2.30
T.P No. 070 - 212223
070 - 212678
ஞாயிறு முதல்
மனம் விரும்புதே உன்னை

(71461)

---

## நாகம்ஸ்
(சுன்னாகம்)
இன்று முதல்
ரஜனி, ரோஜா,
ராதாரவி, சுஜாதா
நடித்த
### உழைப்பாளி
காட்சிகள் - 11.00-2.30
(புதிய நேரம்)

(71479)

---

## விற்றுத் தீர்த்தல்

பாட்டா DSI, றண்பா, சீபா, கீற்றோ சோடி இந்தியன் சாண்டில் சிலிப்பர் மற்றும் வெள்ளை, கறுப்பு சூ வகைகள் யாவும் கொழும்பு விலையுடன் மேலதிகம்

ரூபா 10 மட்டும்

## கணபதி சூ பலஸ்

159, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(C/10082)

---

## 31ஆவது
## நினைவுநாள் அஞ்சலி



வட அல்வை
### வைத்திய கலாநிதி
### (ஜோசப்) பொ. சின்னத்துரை

பாருக்குள் பிறப்புருவாய் 1928-06-06
கர்த்தருக்குள் நித்திரையாய் 1999-11-04

**நினைவு நாள்: 1999-12-04**

சராசரி மனித வாழ்வியலில் சங்கமிக்கும் மனித ஜீவன்கள் காலத்தின் கட்டளையால் இப்புவியில் மரணிப்பதனூடாக எம்மத்தியிலிருந்து நிரந்தர விடுவிப்போடு இறையோடு சங்கமிக்கின்ற இயல்புநிலையில் அன்னாரின் பிரிவு எம்மத்தியில் ஒரு வெற்றிடத்தை விட்டுச்சென்றாலும் அப்புனித ஜீவனின் ஆத்மா சாந்தியடைவதாக!

என்றும் நினைவுடன்
மனைவி, மகன்,
உறவினர்கள்.

ஆலங்கட்டை,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(71513)

---

## மரண அறிவித்தல்கள்

### சிவஸ்ரீ சதாபாலகிருஷ்ணக்குருக்கள் பத்மஸ்ரீ

புங்குடுதீவு கிராஞ்சியம்பதி கந்தசாமி கோயில் பிரதமகுரு சதாபாலகிருஷ்ணக்குருக்கள் - சோமேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் பத்மஸ்ரீ 17-11-99 புதன்கிழமை வன்னேரிக்குளத்தில் காலமானார்.

அன்னார் சதாபாலகிருஷ்ணக்குருக்கள் சோமேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் ஸ்ரீபாலமுரளி, ஸ்ரீராகுலன், ஸ்ரீவித்யா, ஸ்ரீவிவேத் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவசுப்பிரமணியக்குருக்கள்- புஸ்பவதியின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வன்னேரிக்குளத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:-
சிவ. சிவகுமாரசர்மா
(அண்ணா)

84, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர்.

71507

### பமிலா சத்தியாவதி சிவஞானம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கொலங்கலட்டி வீமன்காமம் பாடசாலை ஆங்கில ஆசிரியை பமிலா சத்தியாவதி சிவஞானம் 25/11/99இல் கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சிவஞானத்தின் அன்பு மனைவியும் அருள்பிரகாசம் தம்பதிகளின் அன்பு மகளும் றஞ்சன் (ஆஸ்திரேலியா) அவர்களின் அன்புச் சகோதரியும் மதிவாணனின் (சந்திரகாசன் - லண்டன்) அருமைத்தாயாரும் திருமதி நாகமணியின் மருமகளும் விமலாதேவி, யோகம்மா (பிரான்ஸ்), சிவபாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை 25/11/99 அன்று தென்னிந்திய திருச்சபையினரால் நடத்தப்பட்டு பூதவுடல் உடுவில் சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
தாயார்.

உடுவில்.

(71525)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரில் அங்கவீனமடைந்த

# முன்னாள் படையினரின் அமைப்பு புலிகளுடன் பேசுவதற்கு முயற்சி

கொழும்பு,டிசெ.4

போரில் அங்கவீனமடைந்த முன்னாள் படையினரின் அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்குச் சென்று விடுதலைப்புலிகள் அமைப்பினருடன் கலந்துரையாட முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பில் உள்ள அங்கவீனமடைந்த பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவும்-

விடுதலைப்புலிகளின் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தவும் -

தாம் அங்கு செல்லவிருப்பதாக அந்த அமைப்பின் தலைவர் அசோகா ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் காவலில் உள்ள படையினரை விடுவிப்பது குறித்தும் -

யுத்தத்தை நிறுத்துவதற்கான சாத்தியங்கள் குறித்தும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக அவர் மேலும் சொன்னார்.

வன்னி செல்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கும்பட்சத்தில் விடுதலைப்புலிகளின் அனுமதியைப் பெறுவதில் பிரச்சினை இருக்காது என்று அவர் கூறினார். (ஐ-3-4)

**BITSMANS**

கல்விநிறுவனம், மானிப்பாய்.

கல்வியாண்டு 2000


தரம் 4 முதல் 11 வரை
சகல பாடங்களும் எமது வழமையான
'SUPERGRADE'ஆசிரிய குழுவினால் கற்பிக்கப்படுகின்றன.

ஆரம்பம்:- 05-12-99 ஞாயிறு 9.00 A.M.
(விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவுசெய்யவும்)
(7/455)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

## அம்பலவாணர் இராசசேகரம்

(பூதர்வளவு, அச்செழு)

வையத்துள் 11 - 06 - 1941

வானுலகுள் 05 - 11 - 1999

**திதி - அபரபக்க திரியோதசி - 05-12-99**

ஊரார் போற்றும் உத்தம சீலராய், பாசத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் இருந்து எங்கள் அனைவரையும் வழி நடத்திய அன்புத்தெய்வமே உங்கள் ஆத்மாசாந்தி பெற அச்செழு சித்திவிநாயகரையும் கொக்கிருந்தபதி சிவகாமி அம்பாளையும் வீரபத்திரக்கடவுளையும் நரசிங்க வைரவரையும் வேண்டுகின்றோம்.

எமது பாசமிகு கணவரும் ஏனையோரின் சகோதரனும் மைத்துனருமாகிய அம்பலவாணர் இராசசேகரம் இறைவனடி எய்திய செய்தி அறிந்து அனுதாபச்செய்தி அனுப்பியோருக்கும் தொலைபேசிமூலம் ஆறுதல் கூறியோருக்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் சுகவீனமுற்றிருந்த வேளையில் உதவிபுரிந்த வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு-

அன்னாரின் ஆத்மசாந்திக்காக அவரின் இல்லத்தில் நாளை (05-12-99) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் குடும்பசமேதராக கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்,
**இ. மனோன்மணி** (மனைவி),
**அ. அருள்நேசவாசன்** (சகோதரன்).
**மற்றும் சகோதர, சகோதரிகளும்,**
**மைத்துனர்களும் மைத்துனிகளும்,**
**குடும்பத்தினரும்.**

பூதர்வளவு,
அச்செழு.

(71441)

அச்சுவேலியில்...

# அறிவகம்

## கல்வி நிலையம்

இதுவரை காலமும் ஆவரங்காலில் இயங்கி வந்த I.A.S கல்வி நிலையம் இப்போது

அச்சுவேலியில் அறிவகம் என்ற பெயரில் கல்விச் சேவையை வழங்கவுள்ளது.

**புதிய கல்வியாண்டு - 2000**

தரம் - 7 முதல் 11 வரையான வகுப்புக்கள்

**ஆரம்பம் - 05 - 12 - 1999**

(ஞாயிறு முற்பகல் 9.00 மணி)

* வழமையான ஆசிரியர் குழு

- நிர்வாகி.

### பெண் விடுவிப்பு


யாழ்ப்பாணம்,டிசெ.4

படையினரால் கைது செய்யப்பட்ட பெண் ஒருவர் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு படையினராலும் மேற்படி பெண்ணின் உறவினர்களினாலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த பரமேஸ்வரி திருநாவுக்கரசு (வயது 47) என்பவரே கடந்த 25ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு பின்னர் 512 ஆவது படைப்பிரிவினரால் விடுவிக்கப்பட்டவர் ஆவார். (3-8-10)


### விவரம் சேகரிப்பு

வலயக் கல்வி அலுவலகங்களிலும் பாடசாலைகளிலும் சேவையாற்றும் சமயாசமய ஊழியர்களின் விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு சகல வலயக் கல்வி அலுவலகங்களையும் கோரியுள்ளது. (3-51)





100% நீடித்துழைக்கும்

12-04-2000 இல் எமது ஸ்தாபனத்தின்
(நியூரோன் எலக்ரிக்கல்ஸ்)
49 ஆவது ஆண்டு பூர்த்தியாவதையிட்டு
எமது ஸ்தாபனத்தை வளர்த்த
சக ஊழியர்கள், வாடிக்கையாளர்கள்
நண்பர்கள் அனைவருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவிக்கின்றோம்




100% பிரகாசம்

சர்வதேச தரம் வாய்ந்ததும், நீடித்துழைப்பதும், எங்கும் இலகுவில் கிடைக்கக் கூடியதுமான




**பிலிப்ஸ்**

மின் விளக்குகளை

**(Philips Lighting Products)**

மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்பனை செய்வதற்கு எமது வடமாகாண ஏக விநியோகஸ்தர்களாக


**நியூரோன் எலக்ரிக்கல்ஸ்**
141/143, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.**

**ஹேலீஸ் இலக்ரோனிக்ஸ் லிமிட்டெட்**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம் 03 - 11 - 1941





உதயம் 18 - 08 - 1983

அமரர்
**கனகசபை சண்முகசுந்தரம்**
(உரிமையாளர், சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்)

அமரர்
**சண்முகசுந்தரம் சிவரூபன்**
(மாணவன், யா/வைத்தீஸ்வரா கல்லூரி)

**அஸ்தமனம் - 23.11.1995**

**திதி - 07.12.1999**

**சீரோடும் சிறப்போடும் ஊர்போற்ற வாழ்ந்த உமை**
**ஈருயிராய் இணைத்தெடுக்க இயமனவன் இங்கு வந்து**
**ஈரிரண்டு ஆண்டுகள் உருண்டோடி முடிந்தாலும் - உங்கள்**
**பேரென்றும் எம்மனதில் நிலைத்திருக்கும் என்றென்றும்**

**குடும்பத்தினர்.**

சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்,
70/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P - 021 - 2763

122/1, ஆனைப்பந்தி லேன்,
யாழ்ப்பாணம்.

(71470)

## சபிண்டீகரண அழைப்பு

தோற்றம் 26 - 01 - 1952



மறைவு 26 - 10 - 1999

திருமதி
**பத்மலோஜினி சிவசண்முகநாதன்**

**கடந்த 26.10.1999இல் சிவபதமெய்திய எமது குடும்பத் தலைவி திருமதி பத்மலோஜினி சிவசண்முகநாதன அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (05.12.1999) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**தனிப்பட்ட அழைப்பாக இதனை ஏற்றுக்கொள்ளவும்.**

**நா. சிவசண்முகநாதன்**
(மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழக கிளை)

நல்லூர் வீதி,
ஆனைக்கோட்டை.

(71473)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNOPS

இதழ் :7

## ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியூடான ஐக்கிய நாடுகள் திட்ட சேவைகள் அலுவலகம்

## யாழ்ப்பாணத்தில் மிதிவெடி அகற்றல் செயற்பாடு



ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) நிதியுதவியுடன் UNOPS/JRRP இனால் கடந்த நான்கு மாதங்களிற்கும் மேலாக யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் Mine Tech நிறுவனத்தை ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்தி, அந்நிறுவனத்தின் 10 பேர் கொண்ட சிம்பாப்வே நிபுணர் குழுவினால் மிதிவெடி அகற்றும் செயற்திட்டம் நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே.

இதன்படி குறிப்பிட்ட காலத்திற்குள் இத்திட்டத்தை செயற்படுத்தி முடிப்பதற்காக அடுத்த ஆண்டு தொடக்கம் மிதிவெடி அகற்றும் செயற்திட்டம் விரிவுபடுத்தப் படவுள்ளது. இதனால் ஒரே சமயத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் மிதிவெடி அகற்றும் செயற்பாடுகள் நடைபெறுவது சாத்தியமாகும்.

தற்போது வட்மராட்சி, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.



இவர்கள் யாழ்ப்பாணத்தில் மிதிவெடி உள்ள இடங்களை இனங்கண்டு ஆய்வு செய்து, மிதிவெடி செயற்பாட்டு வழிகாட்டல் குழுவிடம் சமர்ப்பிக்கின்றனர். இக்குழுவே மிதிவெடியகற்றல் பிரதேசங்களை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்கிறது. இவ்ஆய்வுகள், தகவல்கள் யாவும் கணனிமயப்படுத்தப்பட்டு அதற்குரிய வரை படங்கள் தயாரிக்கப் பட்டு, இவ்வரை படத்தின் உதவியுடனேயே மிதிவெடி யகற்றும் நிபுணர்கள் மிதிவெடியகற்றுவதில் ஈடுபடுகின்றனர்.

அத்துடன் தற்போது அவர்கள் யாழ்ப்பாணத்தில் மிதிவெடியினால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களையும் திரட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

*மிதிவெடியகற்றல் பிரதேசங்களில் இதுவரை கண்டு பிடிக்கப் பட்டு அழிக்கப்பட்ட வெடி பொருட்களின் விபரங்கள்*

| வெடி பொருட்களின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|
| P4 மிதிவெடி (P4 anti-personnel mines) | 540 |
| வகை 72 மிதிவெடி (Type 72 anti-personnel mines) | 27 |
| ஜொனி மிதிவெடி (Jony anti-personnel mines) | 10 |
| கிளைமோர் (Claymore anti-personnel mines) | 01 |
| 120 மி.மீ மோட்டார் (120mm Mortar) | 15 |
| 60 மி.மீ மோட்டார் (60mm Mortar) | 10 |
| 81 மி.மீ மோட்டார் (81mm Mortar) | 06 |
| ஆர்.பி.ஜி 7 (RPG 7) | 03 |
| எச்.இ சார்ஜஸ் (HE Charges) | 02 |
| 105 மி.மீ செல் (105mm Shell) | 01 |
| 120 மி.மீ ஹெஷ் (120mm Hesh) | 01 |
| 120 மி.மீ எ.ஃப்.எஸ் கீற் (120mm FS HEAT) | 01 |
| மோட்டார் பியூஸ் (Mortar Fuse) | 01 |
| 40மி.மீ கிர்னைட் (40mm Grenade) | 01 |
| அருள் கிர்னைட் (Arul Grenade) | 01 |

### மருத்துவ உத்தியோகத்தர்கள்

மிதிவெடி அகற்றும் குழுவினரின் மருத்துவ தேவைகளுக்காக தற்போது அவர்களால் யாழ்ப்பாணத்திலிருந்து மருத்துவ உத்தியோகத்தர்கள் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சிம்பாப்வே நிபுணரினால் மிதிவெடி அகற்றுதலோடு சம்பந்தப் பட்ட மருத்துவ உதவிகள் தொடர்பான பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிறைவடைந்தவுடன் அடுத்த ஆண்டு தொடக்கம் மிதிவெடி அகற்றல் நடைபெறும் பல்வேறு பிரதேசங்களில் இவர்கள் வேவையில் ஈடுபடுத்தப்படுவர்.

### யாழ் கச்சேரியில் சமூக மிதிவெடி ஆய்வாளர்களின் செயற்பாடு



மிதிவெடி சம்பந்தமான சமூக ஆய்வினை மேற்கொள்ளும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 11 பேர் கொண்ட UNOPS/JRRP இன் சமூக மிதிவெடி ஆய்வாளர்கள் குழு யாழ்ப்பாணம் கச்சேரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் கடந்த சில மாதங்களாக செயற்பட்டு வருகின்றனர். மிதிவெடியகற்றல் செயற்பாட்டிற்கு இவர்களது சேவையே அடித்தளமானது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அரசினால் அனுமதி கிடைக்கப் பெற்ற இடங்களில் இவர்கள் வெளிக்கள வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், தெல்லிப்பளை, உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் தமது 80% பணியை நிறைவேற்றியுள்ள இவர்கள்



### அளவெட்டி அருணோதயாக் கல்லூரி சுற்றாடலில் மிதிவெடி அகற்றல் செயற்பாடு




அளவெட்டி அருணோதயாக் கல்லூரிச் சுற்றாடலில் கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்று வந்த மிதிவெடி அகற்றும் பணி நிறைவடைந்துள்ளது. இங்கு இதுவரை 130 இற்கும் மேற்பட்ட வெவ்வேறு வகையான மிதிவெடிகள் கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

### அச்சுவேலி கோழிப் பண்ணையில் கோழிக்குஞ்சு உற்பத்தி

அச்சுவேலியில் UNOPS/JRRP இன் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட கோழிப் பண்ணையில், கனடா நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட நல்லின கோழிக்குஞ்சுகள் வளர்ந்து தற்போது முட்டையிட ஆரம்பித்துள்ளன. தரமான முட்டைகள் பெறப்படுவதைத் தொடர்ந்து கோழிக்குஞ்சு பொரிக்கும் இயந்திரத்தில் (Incubator) முதன்முறையாக 2300 முட்டைகள் அடைவைக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் கோழிக்குஞ்சுகள் ஒருநாள் குஞ்சுகளாக கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களினூடாக மக்களுக்கு குறைந்த விலையில் வழங்கப்படும்.

### யாழ் போதனா வைத்தியசாலைக்கான உதவிகள்



யாழ் போதனா வைத்தியசாலையில் UNOPS/JRRP இனால் அமைக்கப்பட்டு வரும், இரண்டு மாடிகட்டடத்தில் குழந்தைகள் வாட் தற்போது செயற்படத் தொடங்கியுள்ளது.

இவ்வாட்டில் சிகிச்சை பெறும் குழந்தைகளுக்காக MSF மருத்துவ நிபுணர்களின் சிபார்சிற்கமைய சில விளையாட்டு உபகரணங்கள் UNOPS/JRRP இனால் வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### மணமகள் தேவை

சைவ போசனம், கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த, நோர்வேயில் நிரந்தர வதிவிடம்பெற்ற, 1966ஆம் ஆண்டு8இல் செவ்வாயுடைய மணமகனுக்கு மணமகள்தேவை. தொடர்பு:- க.குமரகுரு பண்ணாகம், சுழிபுரம். (71244)

### வீடு வாடகைக்கு

பருத்தித்துறை - யாழ்.வீதியில் மாலுசந்திக்கு அண்மையில்சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. குடியிருக்கவோ அல்லது ரெயிலர் கடை, கொமினிக்கேசன் போன்ற தேவைகளுக்கு உகந்தது. விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 975, மே/பா உதயன், கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். (71350)

### வீடு விற்பனைக்கு

மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்துக்கு அண்மையில் வீடும் (05அறைகள் Terrazzo தளமிடப்பட்டது) நீர்த்தாங்கியுடன் கூடியதுமான 16 பரப்புக்காணியும் வீடும் முழுமையாக அல்லது வீடும் 6 பரப்புக் காணி பகுதியாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு ஸ்ரீ கதிர் காமநாதன், ஆங்கில மொழிக் கற்பித்தல் பிரிவு - யாழ். பல்கலைக்கழகம் அல்லது கேணியடிஒழுங்கை, மீசாலை மேற்கு, மீசாலை. (71378)


### சித்தி விநாயகர் சோதிடம்

சாதகம் எழுத, பொருத்தம் பார்க்க, விவாகதாமதம், கிரகதோசத்துக்கு பரிகாரம், தேவையான யந்திரங்களுக்கு நாடுங்கள்: கொழும்பில் 22வருடசோதிட அனுபவம் பெற்ற விஸ்வபிரம்மஸ்ரீ மா.தங்கவேல், 9,டச்சுவீதி,சாவகச்சேரி.

### விற்பனைக்கு

4 1/2 மாதம் நிரம்பிய கைலைன் பிறவுண்கோழி, முட்டையிடும் ஊர்க் கோழிகள், கினிக்கோழிகள், வான் கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- கிருஷ்ணகுமார், விதானை வளவு, மானிப்பாய். (71444)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 21 - 09 - 1974

உதிர்வு 15 - 12 - 1998

அமரர்

**நாகமணி நவக்குமார்**

திதி - 04-12-1999

குடும்பத்தின் ஒளிவிளக்காய், பாசத்தின் உறைவிடமான எங்கள் அன்புத் தெய்வமே! பல்கலையும் கற்றுப் பாரினிலே புகழோடு வாழ்வாய் என்று காத்திருக்க பாதி வயதினிலே காலன் உமைக் கவர்ந்திட்டான். ஆனாலும் உமது புகழ் உலகமெல்லாம் போற்றுமையா!

உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

அம்மா, அப்பா,
சகோதரர், குடும்பத்தினர்,
உறவினர்கள்.

சண்டிலிப்பாய். (71464)

## குமரன் கல்வி நிலையம்

நவாலி வடக்கு.

ஆண்டு 3~11 வரை

ஆரம்பம் - 05-12-1999

பிற்பகல் 3.00 மணி

| | | |
|---|---|---|
| கணிதம் | - | S. பால்தாஸ் |
| | | W. சத்தியசீலன் |
| விஞ்ஞானம் | - | P. நந்தீஷ் |
| | | S. S. இந்திரன் |
| தமிழ் | - | V. விமலன் |
| | - | S. P. மாறன் |
| ஆங்கிலம் | - | K. சோமசுந்தரம் |
| | - | A. ஈஸ்வரன் |
| | - | பொன். சௌந்திரி |
| சமூகக்கல்வி, வரலாறு, புவியியல் | } | S. சந்திரராஜா, S. மோகன் |
| சமயம் | - | S. ஈஸ்வரி |

(71396) - நிர்வாகி

## FOR SALE

HOME LIBRARY

(a) Complete volumes of the legislative Enactments of Ceylon and Allied, Law book, Books on Fiction, Politics, Religion, Sex, Psychic, Palmistry, Past Magazines and other subjects.

16/2, 'Gnana Vasam', Police Lane, Chavakachcheri.

(C/10007)


## நில்மா

நறுமணச் சொட்டு நீலம்

ஜப்பானிய கட்டமைப்புக்கு அமைய சர்வதேச தரத்திற்கேற்ப நவீன முறையில் தயாரிக்கப்பட்ட நறுமணம் கொண்ட சொட்டு நீலம் நில்மா.

இது ஆடைகளில் காணப்படும் பழுப்பு நிறத்தை விரட்டியடித்து ஒளிவீசும் பிரகாசமான வெண்மையை தருவதுடன் ஆடைகளுக்கு மிருதுவான தன்மையைத்தந்து ஆடைகளின் பாவனையை நீடித்துத் தருகிறது.

ஒரு லீட்டர் நீருக்கு நில்மா 4/5 துளிகள் வீதம் இட்டு கலக்கிய பின் சலவை செய்து பிழிந்த நிலையில் உள்ள ஆடைகளை நில்மா நீரில் ஒவ்வொன்றாக இட்டு உங்களுக்கு தேவையான வெண்மைக்குக்கேற்ப அலசிய பின் நன்றாக பிழிந்து நிழலில் காயவிடவும்.

இப்போது முற்றும் புதியவை போன்ற தோற்றமுடைய ஒளி வீசும் பிரகாசமான வெண்ணிற ஆடைகள் உங்கள் கைகளில்.






சந்தைப்படுத்துவோர்
ஏஜே டிரேடிங் கொம்பனி
95,ஜெயந்த வீரசேகர மாவத்தை
கொழும்பு 10 தொலைபேசி: 458699


இணையற்ற தூய அன்புக்கு அம்மா, ஒளிமயமான வெண்மைக்கு நில்மா.

யாழ்.ஏக விநியோகஸ்தர்கள்

**CITY AGENCY**
No. 158, STANLEY ROAD
JAFFNA.
T.P :- 021-2202 / 021-2991 / 021-2911

**S.V.M**
No. 154, HOSPITAL ROAD
JAFFNA.
T.P :- 021-2055 / 021-2100


## 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



அமரர்

**சின்னையா மாசிலாமணி**

தாயின் மடியில் 19 - 03 - 1937

இறைவன் திருவடியில் 04 - 11 - 1999

அன்புத்தந்தையே, ஆருயிர் தெய்வமே, எம்மை எல்லாம் தவிக்கவிட்டு அம்மா சென்று இரு ஆண்டுகள் கடந்தவுடன் அம்மா சென்ற வழியே சென்றீரே! எனக்கு அப்பாவுமாய், அம்மாவுமாய் அரவணைத்து நின்றீரே! அரவணைக்க யாருமின்றி அனாதரவாய் என்னை விட்டு பிரிந்து சென்றீரே! நான் தனிமையிலே கலங்கி நிற்க தங்கள் உடன்பிறப்புக்கள் கதறியழ, உறவினர்கள் புலம்பியழ காலன் தங்கள் உயிரை கபடமாய் கவர்ந்து சென்றானே! ஒரேயொரு அருமைமகன் என அன்போடு என்னை கண்ணில் மணி போல வளர்த்தீரே! ஆயுள் உள்ளவரை உங்கள் அன்பை நான் மறவேன்!

அருமை அப்பாவே,

உங்கள் ஆத்மா நித்திய சாந்தியடைய தினம் தினம் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

எனது அன்புத் தந்தையின் இறுதிப் பயணத்தில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியோருக்கும் பல வழிகளிலும் உதவிபுரிந்தோருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்து இன்று நடைபெறும் வீட்டுக்கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்து ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அன்புமகன்
மா. சிவகுமார்

கடவைப்புலம்
சுன்னாகம்.

(C/10053)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BARATHY
சித்தன்கேணி
## புதிய வகுப்புகள்
11, 10, 9, 8, 7, 6

ஆரம்பம்:– 05–12–1999 ஞாயிறு காலை 8. 30

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | - | திரு தேவா |
| | | திரு பாலச்சந்திரன் |
| கணிதம் | - | திரு எஸ்.சிவரூபன் |
| | | திரு சிவா |
| தமிழ் | - | திரு சின்னத்தம்பி |
| | | திரு தவரட்ணம் |
| சமூகக்கல்வி | - | திரு ஜெகன் |
| | | திரு சிவபாலன் |
| ஆங்கிலம் | - | திரு வாகீசர் |
| | | திரு அருமைநாயகம் |
| வர்த்தகம் | - | திரு லோகேஸ்வரன் |
| சமயம் | - | திரு T.N.தரன் |
| விவசாயம் | - | பிரபல ஆசிரியர் |

குறிப்பு: மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் சித்தன்கேணியில் வேறு எந்தக் கல்வி நிறுவனத்திலும் கற்பிக்கமாட்டார்கள்.


## பாவனைக்குதவாத பொருள்கள் அழிப்பு

வலி.கிழக்கு,டிசெ.4

அச்சுவேலிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் பொதுமக்களின் பாவனைக்குதவாத பொருள்கள் விற்பனை செய்வது பொது சுகாதாரப் பரிசோதகரால் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் அவை அழிக்கப்பட்டன.

பாவனைக்குதவாத பொருள்கள், காலாவதியாக பொருள்கள், கலப்படம் செய்யப்பட்ட பொருள்களே விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

(3-180)


# அறிவித்தல்

102சீ, டாம் வீதி, கொழும்பு 13இல் அமைந்த 'ஈஸ்வர பகவான் அன் கம்பனி'

முல்லைத்தீவில் தாக்கி அழிக்கப்பட்ட 'பிறின்ஸ் ஒவ் காஸ்' கப்பலில்

எமது நிறுவனத்துக்கூடாகப் பொருள்களை ஏற்றி அனுப் பியவர்கள் உங்கள் நட்ட ஈட்டுக்கான விவரங்களையும் அதற்குரிய ஆவணங்களையும் 10.12.1999க்கு முன்னதாக

102 சீ, டாம் வீதியில் இருக்கும் எமது நிறுவனத்திலோ 100, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள எமது நிறுவனத்திலோ அவற்றை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

முகாமையாளர்,
ஈஸ்வர பகவான் அன் கம்பனி.

(71489)


## உதைபந்தாட்டம்

சிறுவர், முதியோர், ஊனமுற்றோர் நலன் காக்கும் நிதிக்காக வலி.வடக்கு பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் உதைபந்தாட்டக் காட்சிப்போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இன்றுமாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* பருத்தித்துறை லீக் எதிர் யாழ்ப்பாணம் லீக்
* ஞானமுருகன் வி.க. எதிர் சென் பீற்றர்ஸ் வி.க.

(3-4)

## இரு பெண்களுக்கு 35ஆயிரம் அபராதம்

கசிப்பு தயாரிப்பதற்கான கோடா வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இருபெண்களுக்கு யாழ்.மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் 35ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

மானிப்பாய் வீதியைச் சேர்ந்த பிரஸ் தாப இரு பெண்களும் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதுடன் கைப்பற்றப்பட்ட 130லீற்றர் கோடாவும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

(3-10)

## பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறியின் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த வாரம் வெளியாகியுள்ளதாக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.


# சீயோன் தேவாலயம்
## 40 ஆவது ஆண்டு நிறைவு

யாழ். கந்தர்மடத்தில்
ஒரு வீட்டுச் சபையாக மார்கழி 1959 இல் ஆரம்பிக்கப்பட்ட

இச்சபையானது தேவகிருபையால் இன்றும் வடமாகாணத்தில் இயங்கி, மக்களுக்கு சேவையாற்றி வருகிறது.

சகல மகிமையும் தேவன் ஒருவருக்கே உரித்தாகட்டும்.

'அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம்.' சக.4:10

இயேசு கூறினார்:-

'இதோ சீக்கிரமாய் வருகிறேன்
அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு
நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது.' வெளி.22:12.

போதகரும் சபையாரும்,
24, இராமையா செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(71446)



# COLOMBO INN
## கொழும்பு இன் (விடுதி)

இங்கு சகலவிதமான வசதிகளுடன் கூடிய அறைகளும் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்பு வசதிகளும் உணவுச்சாலையும் உள்ளன.

கொழும்பில் வந்து தங்குவதற்கு வசதிகள் தேவைப்படுவோர் எங்கள் முகவரியைக் கொடுத்து வரவும். சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
முகாமையாளர்,
கொழும்பு இன் (லொட்ஜ்),
15, சங்கமித்த மாவத்த,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு – 13.

எங்கள் தொலைத் தொடர்பு இலக்கங்கள்: 01-334914
01-454450

(ஆமர் வீதிச்சந்திக்கும் கிங்ஸ்லி(KINGSLEY) தியேட்டருக்கும் அண்மையில்)

(C/10066)



# தபால் மூலம் ஆங்கிலம் கற்பித்தல்

ஆங்கில ஆசிரியர்கள், G.C.E. O/L, A/L மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் ஆங்கிலம் கற்கும் பொழுது சில கஷ்டமான பகுதிகளைச் (DIFFICULT - AREAS) திறம்பட விளங்கிக் கொள்ள சிறப்பாக விளக்கம் செய்து தபால் மூலம் எழுதி அனுப்பப்படும்.

உதாரணமாக ~ இலக்கணத்தில்:

NOUN, PRONOUN, ADJECTIVE, VERB - HELPING VERBS, REGULAR, IRREGULAR VERBS, IMPERFECT VERBS, PARTICIPLES, GERUNDS, INFINITIVE, TENSES - TRANSITIVE, INTRANSITIVE VERBS, ACTIVE, PASSIVE VOICE, ADVERB, PREPOSITION, CONJUNCTION, INTERJECTION, DIRECT - INDIRECT SPEECH, PHRASAL VERBS, RELATIVES, CONNECTORS, CONDITIONALS - WRITING ESSAYS, LETTERS, PRECIS COMPREHENSION - THE ART OF CONSTRUCTING SENTENCES DIALOGUES, SYNONYMS, ANTONYMS, PARSING OF SENTENCES ANALYSIS, SYNTHESIS PHRASES, CLAUSES.

உங்களுக்கு விளங்காத பகுதிகளை எழுதவும். நீங்கள் தொடர்ந்தும் படிக்கலாம். கிழமைக்கு ஒருமுறை மறுமொழிகள், உதாரணங்களுடன் எழுதி அனுப்பப்படும்.

மாதாந்த கட்டணம் ரூபா 50/= Postage and Stationery Rs. 25/=
Monthly Rs.75/= MONEY ORDER OR POSTAL ORDER.

தொடர்பு:-

R. THEIVENTHIRAM,
ENGLISH - TEACHER, MURUGA VASAM,
VADDUKODDAI.

(71439)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை–1999இல் சித்தியடைந்த

செல்வி செல்வராசா சாருஹா-147புள்ளிகள்

பெற்ற எமது பெறமகளைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அனைத்து மாணவர்களையும் சித்தி பெற அயராது ஊக்குவித்து கற்பித்த ஆசிரியர்களையும் திருக்குடும்பக் கன்னியர் மடத் தலைவியையும் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு. திருமதி கருணாரத்தினம்
(சித்தி, சித்தப்பா)

மாம்பழம் சந்தி,
நாவலர் வீதி,
அரியாலை.

(C/10064)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் தேவஸ்தான இந்து இளைஞர் மன்றத்தின் அலுவலகத் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் அலுவலகத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்துவைப்பதையும் மன்றத் தலைவர் வ.பிரதாப், சமூகஜோதி கா.கணேசதாசன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (ஜ-17)

*படம் : அரியாலை செய்தியாளர்.*

# புலோலி இளைஞன் கொலை; மூவருக்கு பிணை அனுமதி

நெல்லியடி,டிசெ.4

கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் கோவில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட இளைஞனின் மரணம் தொடர்பாக, சந்தேகத்தின் பேரில் பொலீஸாரினால் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட மூவரையும் 75 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல பருத்தித்துறை மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா அனுமதி அளித்தார்.

புலோலி தெற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பத்மநாதன் (வயது 17) என்ற இளைஞனின் மரணம் தொடர்பாக இவரது உறவினர், சட்டத்தரணி சிவா பாலேந்திரா ஊடாக மனு ஒன்றை பருத்தித்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர்.

இம்மனுவில் குறிப்பிட்டபடி இதே இடத்தைச் சேர்ந்தவர்களான சின்னத்துரை சந்திரகுமார் (வயது 30) மார்க்கண்டு சண்முகலிங்கம் (வயது 36) நமசிவாயம் கணேசலிங்கம் (வயது 38) ஆகிய மூவரையும் பருத்தித்துறை பொலீஸார் நேற்றுக்காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இவ்வழக்கில் எதிராளிகள் சார்பில் சட்டத்தரணி க.பரமராஜாவும், வழக்காளிகள் சார்பில் சட்டத்தரணி சிவா பாலேந்திராவும் ஆஜரானார்கள்.

குறித்த சந்தேக நபர்களை தலா 25 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல உத்தரவிட்ட பருத்தித்துறை மாவட்ட நீதிவான், மேலும் மற்றொரு சந்தேக நபரான தற்பொழுது கொழும்பில் வதியும் விஸ்வலிங்கம் பார்த்தீபன் (வயது 20) என்பவரை அவர் தங்கியுள்ள முகவரியில் வைத்து அப்பகுதிப் பொலீஸாரினால் வாக்குமூலம் பெற்று நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பருத்தித்துறை பொலீஸாருக்கு உத்தரவிட்ட நீதிவான், குறித்த மூன்று சந்தேகநபர்களும் யாழ் குடாநாட்டைவிட்டு வெளியேறுவதற்கு அனுமதி வழங்கக்கூடாது என்ற பணிப்புரையையும் அப்பகுதி கிராமசேவை அலுவலருக்கு விடுத்துள்ளதுடன், வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஜ-109)

# அஞ்சல் வாக்களிப்பு முறை பற்றி அதிகாரிகளுக்கு விளக்கமளிப்பு

வலி.தென்மேற்கு,டிசெ.4

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு யாழ். செயலக தெரிவத்தாட்சி அலுவலகம் திணைக்களத் தலைவர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்றினை யாழ். செயலக மண்டபத்தில் நடத்தியது.

அஞ்சல் மூலம் வாக்களிக்கும் போது திணைக்களத் தலைவர் அல்லது செயலாளர் எவ்வாறு அத்தாட்சிப்படுத்தும் அலுவலராக செயற்படவேண்டும் என்பது பற்றி யாழ்.செயலக அதிகாரி சி.நடராஜா விளக்கமளித்தார்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 82க்கும் மேற்பட்ட திணைக்களத் தலைவர்கள், செயலாளர்கள் இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டனர்.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் பயிற்சிக்கு தலைமை வகித்தார்.

இதேவேளை -

வருகை தந்திருந்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அஞ்சல் வாக்கு சம்பந்தமான விளக்கக் குறிப்புகளும் வழங்கப்பட்டன. (ஜ-185)

### தேர்தலை ஒட்டி 21ஆம் திகதிவரை

# ஊழியருக்கு லீவு வழங்குவதை கட்டுப்படுத்துமாறு உத்தரவு

கொழும்பு,டிசெ.4

பொதுச்சேவையில் கடமைபுரியும் ஊழியர்களுக்கு இம்மாதம் 21ஆம் திகதி வரை விடுமுறைகளை அனுமதிப்பதில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துமாறு பொது நிர்வாக அமைச்சு சகல அமைச்சுக்களுக்கும் மாகாண சபைகள் ஆகியவற்றின் செயலாளர்களுக்கும் திணைக்கள தலைவர்களுக்கும் அறிவித்திருக்கிறது.

தேர்தல் கடமைகளுக்காக சுமார் ஒரு லட்சம் அதிகாரிகள் தேவைப்படுகிறார்கள். இதன் காரணமாகவே விடுமுறை சம்பந்தமான முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சின் செயலாளர் மகிந்த பந்துசேன தெரிவித்துள்ளார்.

அவசர சந்தர்ப்பங்களில் தேர்தல் ஆணையாளரின் அனுமதியுடனேயே உத்தியோகத்தர்களுக்கு லீவுகள் வழங்கப்படவேண்டும் என்றும் இந்த அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-4)

### வீடு சேதத்துக்கான நஷ்டஈடு:

# 93 குடும்பங்களுக்கு 2ஆம் கட்ட கொடுப்பனவு

வலி.கிழக்கு,டிசெ.4

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வன்செயல் காரணமாக வீடுகள் சேதமுற்றோருக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவு 25 ஆயிரம் ரூபாவின் இரண்டாம் கட்டக்கொடுப்பனவான 15 ஆயிரம் ரூபா மேலும் 93 பேருக்கு வழங்கப்படவுள்ளது.

சிறுப்பிட்டி கிராமசேவையாளர் (ஜே - 271) பிரிவில் 44 பேருக்கும் - அச்செழு கிராமசேவையாளர் (ஜே - 279) பிரிவில் 49 பேருக்குமே கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவைப் பெறுபவர்கள் கிராம உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் வங்கியில் பணத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும் என பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஜ-180)

# இன்று நடப்பவை

அரியாலை,டிசெ.4

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் இன்று சனிக்கிழமை சங்கத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் நடைபெறும். (ஜ-17)

* * *

கொழும்புத்துறை,டிசெ.4

யாழ்.புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் ஒளிவிழா இன்று சனிக்கிழமை காலை 9.00மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி.பி.எவ். சின்னத்துரை தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் அருளுரையை ஆசீர் பேராலயத்தின் பங்குத்தந்தை அருட்திரு. அ.சி.கிறிஸ்தோபர் அடிகள் நிகழ்த்துவார். (ஜ-30)

* * *

வடமராட்சி,டிசெ.4

கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரி பரிசளிப்புவிழா இன்று சனிக்கிழமை அதிபர் வே.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் நா.சிவபாலன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி அமிர்தாஞ்சலி சிவபாலன் பரிசில்களை வழங்குவார். (ஜ-73)

* * *

கைதடி,டிசெ.4

கைதடி மேற்கு பராசக்தி பாலர் பகல் இல்ல வருடாந்தப் பரிசளிப்பும் கலைவிழாவும் இன்று சனிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய மண்டபத்தில், பாலர் பகல் இல்ல அதிபர் திருமதி சுபத்திரா தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்குவார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி உதவிக் கல்விப்பணிப்பாளர் நா.சத்தியநாதனும் தென்மராட்சி சிறுவர் நன்னடத்தைப் பிரிவு பொறுப்பதிகாரி வே.கந்தசாமியும் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய அதிபர் வே.பாலசுப்பிரமணியமும் கைதடி மேற்கு கிராம உத்தியோகத்தர் சு. செல்வராசாவும் கலந்து சிறப்பிப்பர்.

பாலர் கலைநிகழ்வுகள் இடம் பெறும். (ஜ-74)

* * *

புன்னாலைக்கட்டுவன்,டிசெ.4

யாழ். மாவட்ட இணைந்த சேவைகள் ஒன்றியத்தின் ஒன்று கூடலும் பதவி உயர்வு பெற்றவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு யாழ்ப்பாணம் கல்விவலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (க-133)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.4

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பெற்றோர்தின விழாவும் 'கற்பகம்' சஞ்சிகை வெளியீடும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். கல்விவலய உதவிக் கல்விப்பணிப்பாளர் க.கனகசிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் ச.புஸ்பநாதன், சமூக இணைப்பாளர் திருமதி பொ.இராஜேஸ்வரன் ஆகியோரும் பங்குபற்றுவர். (இ-3-51)

## விசேட விற்பனை நிலையம்

அரியாலை,டிசெ.4

யாழ். நகரில் கே.கே.எஸ். வீதியில் அமைந்திருக்கும் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வர்த்தக நிலையப்பகுதியில் மொத்த, சில்லறை, விசேட விற்பனை நிலையம் ஒன்று நேற்றுக்காலை திறந்துவைக்கப்பட்டது.

சங்கத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் இந்த விற்பனை நிலையத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்து வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த விற்பனை நிலையத்தில் பாவனையாளர்கள் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை -

யாழ். நகர் சிறாம்பியடி லேனில் அமைந்திருக்கும் சங்கத்தின் விசேட விற்பனை நிலையம் இந்தப் புதிய விற்பனை நிலையத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளது. (ஜ-17)

# பண்டிதமணி ஞாபகார்த்த முத்திரை இன்று வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.4

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் நூறாவது பிறந்ததின விழா நிறைவை ஒட்டி பண்டிதமணி நூற்றாண்டு வெளியீட்டுச் சபையினர் இன்று சனிக்கிழமை பண்டிதமணியின் ஞாபகார்த்த முத்திரை ஒன்றினை வெளியிடவுள்ளனர். இவ்விழா இன்று காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபைத் தலைவர் பண்டிதை பொன்.பாக்கியம் தலைமையில் நடைபெறும்.

இன்றைய தினம் யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட பூசைகளைத் தொடர்ந்து மங்கள இசையுடன் பண்டிதமணியின் உருவப்படம் ஆலயத்தில் இருந்து விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக எடுத்துவரப்படும்.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் செ.பாலச்சந்திரன், யாழ்ப்பாணம் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் சி.தர்மராஜன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவர். அருளிசை அரசு தாவடியூர் ஆர்.திருஞானசம்பந்தனின் திருமுறை ஓதலுடன் விழா ஆரம்பமாகும்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராஜா வரவேற்புரை நிகழ்த்துவார். பண்டிதமணியின் உருவப்படத்துக்கு மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் மலர் மாலை அணிவிப்பார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். அரச அதிபர் க.சண்முகநாதன், மாவை ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ து.சண்முகநாதக்குருக்கள் , தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் மேதகு கலாநிதி எஸ்.ஜெபநேசன், சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் வாழ்த்துரைகளையும் வழங்குவர்.

தொடர்ந்து பண்டிதமணி அவர்களின் நூற்றாண்டு நிறைவு முத்திரையினை வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் க.சிவஞானசுந்தரம் வெளியிட்டுவைப்பார்.

முதலாவது முத்திரையினை பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைச் செயலாளர் ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் பெற்றுக்கொள்வார்.

யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் துறைப்பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் நூற்றாண்டு நிறைவுப் பேருரையாற்றுவார். 'முத்திரையிற் பண்டிதமணி' மலர் வெளியீட்டுரையினை கலாநிதி கவிஞர் இ.முருகையன் நிகழ்த்துவார்.

நினைவு முத்திரை 3ரூபா 50சதம் பெறுமதியானதாகும். (க-152)

# சின்னஞ்சூட்டு வைபவம்

யாழ்ப்பாணம்,டிசெ.4

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இன்ரறக்ட் கழகத்தின் வருடாந்த சின்னஞ்சூட்டு விழாவும் பொது அறிவு இறுதிப்போட்டியும் கழகத்தலைவர் ம.பிரவீனன் தலைமையில் நடைபெற்றன.

றோட்டறிக் கழகத்தின் தலைவர் க.ஸ்ரீபதி இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றினார்.

கழக இதழான 'மலையருவி'யை றோட்டறிக் கழக முன்னாள் தலைவர் அ.பஞ்சலிங்கம் வெளியிட்டுவைத்தார். பரிசளிப்பு வைபவமும் இடம் பெற்றது.


மீண்டும் உங்களை நாடி....

உளநலத்துறையும் மருத்துவபீட மாணவர் ஒன்றியமும்

இணைந்து வழங்கும்

குழந்தை ம.சண்முகலிங்கத்தின்

வேள்வித் தீ

எதிர்வரும் 18 ஆம் 19 ஆம் திகதிகளில்

இடம் – கைலாசபதி கலையரங்கம்

ரிக்கெட்டுக்கள் - 30/-, 50/- மட்டும்

கிடைக்குமிடம்:-

(1) பாதுகாப்புப் பிரிவு
யாழ். மருத்துவப்பீடம் (வாயிலில்)

(2) நுண்கலைத்துறை
கலைப்பீடம்.

நிரு ரீயூசன் சென்ரர்

(கோண்டாவில்)

கல்வியாண்டு 2000

தரம் 4 முதல் 11 வரை

ஆரம்பம் - 05.12.99

ஞாயிறு 6 மணி

(71488)

INSTITUTE OF BRIGHT SCHOLAR

I. B. S கல்வி நிறுவனம்

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அருகில்

தரம் 1 தொடக்கம் 11 வரை

* தரம் 6-11 வரையிலான வகுப்புக்கள் இப்பொழுது நடைபெறுகின்றன.

* தரம் 4-5 புலமைப்பரிசில் விசேட வகுப்புக்கள்

ஆரம்பம் 10-12-99 3.00 P.M

* கணனிப்பயிற்சிகள் (இலவசம்)

தரம் 6 முதல் 0/L வரை

ஜனவரி - 15

(71504) - நிர்வாகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி அரங்கு

குடாநாட்டு மக்கள் இன்று அனுபவிக்கும் பிரச்சினைகளில் மின்சாரப் பிரச்சினையும் முக்கியமானதாக உருவெடுத்துள்ளது.

மின்சார விநியோகம் சீராக இல்லாத காரணத்தால் பொது மக்கள் தமது பணிகளை மேற்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் -

அடுத்த வாரம் ஆரம்பமாக இருக்கும் ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெரிதும் பாதிப்படைவதாகவும் - மக்கள் முறைப்பாடு செய்கின்றார்கள்.

காங்கேசன்துறையில் உள்ள 'கூல் எயர்' மூலம் கிடைக்கும் 8.5 மெகாவாட்ஸ் மின்சாரமும் சுன்னாகம் மின் நிலையம் மூலம் பெறப்படும் 3.5 மெகா வாட்ஸ் மின்சாரமும் குடாநாட்டில் முழுமையாக வழங்க போதியதாக இல்லை என்று கூறப்படுகின்றது.

இதன் காரணமாக மின்சாரம் கூடுதலாகப் பாவிக்கும் நேரங்களில் அதாவது பிற்பகல் 6.00 மணி முதல் இரவு 10.00மணி வரையும் காலை 5.00 மணி முதல் 6.00 மணி வரையும் மின்வெட்டு அமுல் செய்யப் படுகின்றது.

தற்போது கிடைக்கும் மின்சாரம் போதியளவு இல்லாத காரணத்தால் ஒன்றுவிட்ட ஒருநாள் என்ற அடிப்படையில் மின்விநியோகம் துண்டிக்கப் படுகின்றது.

வடமராட்சிக்கு ஒருநாளும் பருத்தித்துறை வீதியில் அரியாலைவரை மற்றொருநாளும் என்ற வகையில் 'கூல்எயர்' மின்சாரம் வெட்டப்படுகின்றது.

அதேபோன்று சுன்னாகம் மின்சார நிலையம் மூலம் மின் வழங்கப்படும் யாழ்ப்பாணம் - கே.கே.எஸ் வீதியிலும் ஒன்றைவிட்டு ஒருநாள் மின்சாரம் வெட்டப்படுகின்றது.

இந்தக் கால அட்டவணைக்கு மாறாகவும் திடீர் திடீரென மின்விநியோம் துண்டிக்கப்படுகின்றது. ஏனைய நாள்களும் மின்சாரம் வெட்டப்படுகின்றதாம்.

"கரண்ட் எப்போது வரும், எப்போது போகும் என்பது தெரியாது. வந்தால் கண்டுகொள்ள வேண்டியதுதான்" - என்று ஆதங்கத்தோடு கூறுகின்றார் ஒரு வீட்டுக்காரர்.

மின்சார சபையோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டாலும் சரிவரப் பதில் கிடைப்பதில்லை என்று பொருமினார் மற்றொரு பாவனையாளர்.

அடிக்கடி ஏற்படும் மின் வெட்டுக்குக் காரணம் என்ன? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விளக்கினால் நல்லது.

*　　　　*　　　　*

கார்த்திகை விளக்கீடு ஒரு சமயத்திருநாள். அன்று வீடுகளில் தீபங்கள் ஏற்றப்படுவது வழக்கம். வீட்டு வாசல்களில் வாழைக்குற்றியில் தேங்காய்ப் பாதியை வைத்து அதற்குள் எண்ணெய் ஊற்றி எரிப்பார்கள் நீண்ட நேரம் ஒளி வீசி எரியும் என்பதால் இந்தத் தேங்காய்ப் பாதிகளைச் சிலர் விளையாட்டுக்காக எடுத்துச் செல்வதுண்டு. அவ்வாறு செய்வது தகாது என்று பெரியோர்கள் இளைஞர்களுக்கு அறிவுரை கூறுவர்.

ஆனால், கார்த்திகைத் தீபம் என்பதன் புனிதத்தையே அழிக்கும் விதத்தில் சைக்கிள் ரயர்களை வீதியில்போட்டு எரிப்பதைக் கடந்த சில வருடங்களாக இளைஞர் குழுக்கள் செய்துவந்தன. அவ்வாறு செய்து தீபத்திருநாளின் மகிமையை குறைக்கவேண்டாம் என்று சமயாபிமானிகள் பத்திரிகை மூலம் கேட்டுக்கொண்டதும் உண்டு.

நகரப் பகுதியில் இம்முறை வீதிகளில் ரயர் எரிக்கும் சம்பவங்கள் அநேகமாக இல்லாதிருந்தன எனலாம். எனினும் ஈவினைப்பிரதேசத்தின் ஒரு குறிச்சியில் இளைஞர் கூட்டம் ஒன்று தடுக்கவோ தண்டிக்கவோ எவருமின்றி வீடுகளில் வைக்கப்பட்டிருந்த பொருள்களைத் தீயிட்டுக் கொளுத்தி அடாவடித்தனம் புரிந்திருக்கிறது!

குறிப்பிட்ட பகுதியில் 15 பேர் கொண்ட இளைஞர் கூட்டம் ஒன்று வீடுகளில் குவித்துவைக்கப்பட்டிருந்த பனை ஓலைக் குவியல்களுக்கு நெருப்பு வைத்ததாகவும் வீட்டு வேலி ஒன்றுக்கும் தீயிட்டதாகவும் அறிய வந்துள்ளது. பனை ஓலைக்குவியல்களுக்குத் தீ வைத்தவர்கள், அவற்றுக்குள் துப்பாக்கிச் சன்னங்களைப் போட்டார்கள் என்றும் அவை சத்தத்துடன் வெடித்த போது அயலில் உள்ள மக்கள் ஏதோ, என்னவோ என்று பீதியடைந்ததாகவும் அப்பகுதியில் பெரும் பதற்றம் உண்டாகியதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

இளைஞர்களின் இந்த காவாலித்தனம் சமயத் திருநாள்களின் நோக்கத்தைக் கெடுத்து, அதற்கு மாசு உண்டாக்குவது மட்டுமன்றி, சமூகத்திலும் பல பாதகமான விளைவுகளை உண்டாக்கும். இத்தகைய இளைஞர்களை அடக்குவதற்கு அந்தந்தப் பகுதிகளில் வசிப்போர் துணிந்து ஒன்றுசேர வேண்டும். இல்லையேல் அவர்களின் கொட்டத்தை அடக்குவது இயலாத காரியமாகிவிடும்.

*　　　　*　　　　*

இது வலயம் இரண்டைச் சேர்ந்த பாடசாலை ஒன்றில் நடந்த விவகாரம். நாளை மறுதினம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜீ.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவிருந்த மேற்படி பாடசாலையைச் சேர்ந்த சில மாணவர்களுக்கு அப்பாடசாலை அதிபர் பரீட்சை அனுமதிப்படிவத்தைக் கொடுக்க மறுத்துள்ளார். அஞ்சல் அடையாள அட்டை பெறுவதற்குரிய விண்ணப்பப் படிவத்தில் பாடசாலை மாணவர்கள் என்பதை உறுதிப்படுத்தவும் அவர் மறுத்துவிட்டார்.

மேற்படி மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக சமுகமளிப்பதில்லை. பாடசாலையில் பரீட்சைகளில் மிகவும் குறைவான புள்ளிகளைப் பெறும் இவர்கள் ஜீ.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடையாது விட்டால் பாடசாலைக்கு அவமானம். - என்பனவே தமது நடவடிக்கையை நியாயப் படுத்த அதிபர் முன்வைக்கும் காரணங்கள்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட ஏழை மாணவன் ஒருவன் பரீட்சை எழுதும் ஆவலில், தனக்காகப் பரிந்துரைப்பதற்கென தனது உறவினராகிய இளைஞர் ஒருவரை பாடசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளார். குறிப்பிட்ட இளைஞர் பாடசாலை அதிபரை அணுகி காலை வணக்கம் என்ற இன்சொற்களுடன் தான் வந்தமைக்கான காரணத்தை அடக்கமாகத் தெரிவித்திருக்கிறார். ஆனால் அதிபரோ "இவ்வளவு காலமாக எங்கே கிடந்தனீங்கள்? பெற்றோர் எங்கே" என்று எரிந்து விழுந்துள்ளார். பின்னர் மாணவர் வரவுப்பதிவை எடுத்துக்காட்டி அம்மாணவனை பரீட்சைக்கு அனுமதிக்க முடியாதெனவும் இவர்கள் பரீட்சையில் சித்தியடையத் தவறினால் பாடசாலைக்கு இழுக்கு எனவும் கூறியுள்ளார்.

இளைஞர் தமது உறவினரான மாணவனின் நிலையை விளக்கி பரீட்சை எழுதாது விட்டால் மாணவனின் மனநிலை பாதிப்படையும் என்பதையும் எதிர்காலம் பாதிக்கப்படும் என்பதனையும் கருத்திற்கொண்டாவது கருணையுடன் உதவுமாறு கேட்டான். மாணவனின் கல்விப் பின்னடைவை ஆண்டு 9 இலிருந்தே சீர்செய்திருந்தால் இவ்வாறான நிலை ஏற்பட்டிருக்காதெனவும் எடுத்துச் சொன்னார்.

அதிபர் உக்கிரமடைந்து "சட்டம் பேசுகிறாயா போடா வெளியே" என்று ஏசியதோடு பாடசாலை ஊழியரிடம் அவ்விளைஞரை வெளியே துரத்தியடிக்குமாறும் ஏவிவிட்டுள்ளார். மானத்துக்கு அஞ்சி இளைஞன் திரும்பிவிட்டான்.

மாணவர்களின் வரவு ஒழுங்கீனத்தைக் காரணமாகக் காட்டும் அதிபரின் கருத்தை ஏற்றுக்கொண்டாலும் இது குறித்து இவர் முன்னெச்சரிக்கை செய்திருக்கலாமே. குறிப்பிட்ட மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் பாடசாலைக்கு அவமானம் தேடித்தரும் எனும் கருத்துச் சரியானதா? பாடசாலையின் கௌரவத்திற்காக மாணவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக்கப்பட வேண்டுமா? பாடசாலையை முற்றுமுழுதாக நம்பித் தமது பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர்களுக்கு ஏனைய மாணவர்களின் பெறுபேறு உத்தியோகபூர்வமாகத் தெரியப்படுத்தப்படுவதில்லையே.

—மின்னல்

## ஐ.நா. கடனுதவி

வலிமேற்கு,டிசெ.4

ஐ.நா. அபிவிருத்தி நிறுவனத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் சுழற்சி முறையில் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 54 பேருக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப் படவுள்ளது.

கிராம உத்தியோகத்தர்கள் மூலம் வழங்கப்படவுள்ள இந்தக் கடன் சுய தொழில் செய்பவர்களுக்கே வழங்கப்படும். விவசாயம், மேசன், தச்சு வேலை, கால்நடை வளர்ப்பு போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ளோர் இக்கடனைப் பெறமுடியும்.

நலிவுற்ற பெண்கள் 13 பேருக்கு கால்நடை வளர்ப்புக்கு ஒரு லட்சத்து 2 ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும் -

விவசாயிகள் 29 பேருக்கு ஒரு லட்சத்து 45 ஆயிரம் ரூபாவும் -

மேசன், தச்சு வேலை செய்யும் 12 பேருக்கு ஒரு லட்சத்து 5 ஆயிரம் ரூபாவும் -

கடனாக வழங்கப்படவுள்ளது.

(ஐ-175)

## கண்காணிக்கப் பணிப்பு

வலிமேற்கு,டிசெ.4

நிவாரணத்துக்கு விநியோகிக்கப்படும் அரிசி மற்றும் சகலப்பொருள்களும் தரமானதாகவும் குறிப்பிட்ட அளவுகளிலும் ஒழுங்காக ப.நோ.கூ. சங்கங்களினால் மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றனவா என்பதை கிராம உத்தியோகத்தர்கள் சென்று பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.சண்முகநாதன் பிரதேச செயலாளர்களுக்கு இவ்வாறு பணித்துள்ளார்.

இது தொடர்பாக அரசாங்க அதிபர் சகல பிரதேசசெயலாளர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

சுற்றறிக்கையில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல ப.நோ.கூ.ச. கிளைகளுக்கும் கிராம உத்தியோகத்தர் ஒவ்வொருவரை நியமிக்குமாறு குறிப்பிட்டுள்ளது. (ஐ-175)

## பரீட்சை நிலையம் இடமாற்றம்

வேலணை துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தில் அமையவிருந்த ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான பரீட்சை நிலையம் வேலணை வங்களாவடிச்சந்தியில் இயங்கும் சைவப்பிரகாச வித்தியாலயத்துக்கு (சரஸ்வதி வித்தியாலயம்) இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (3-7)

## பரிசளிப்பு விழா

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் த.அழகரத்தினம் தலைமையில் நடைபெறும்.


இந்த நிகழ்வில் யாழ்மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை நிறைவேற்றுப் பொறியியலாளர் இ.நடராசா பிரதம விருந்தினராகவும் கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (3)

## ஆலயத்தில் திருட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.4

சுதுமலை அம்மன் தேவஸ்தானத்தின் மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் அம்மன் சிலையில் அணியப்பட்டிருந்த நகைகள் திருடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அம்மன் சிலையில் அணியப்பட்டிருந்த அட்டியல், சங்கிலி, தலைநகை ஆகியனவே திருடப்பட்டுள்ளன. (உ-3)



வை.எம்.சீ.ஏ அனுசரணையுடன் யாழ். ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினரால் அண்மையில் முச்சக்கர வண்டிகள் அன்பளிப்புச்செய்யப்பட்டன. ஊனமுற்ற யுவதி ஒருவர் முச்சக்கர வண்டியை பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

சங்கத்தின் செயலாளர் மற்றும் உறுப்பினர்களும் காணப்படுகின்றனர் (ஐ)


## இலங்கை மின்சார சபை

### மின்பாவனையாளர்களுக்கான முக்கிய அறிவித்தல்

தற்பொழுது யாழ். குடாநாட்டிற்கு மின்சாரம் வழங்கும் மின் பிறப்பாக்கிகள் பழுதுற்றும், மின்சாரம் வழங்கும் நேரங்களில் இடையிடையே மின் தடைகள் ஏற்படுகின்ற காரணத்தினாலும் மறுஅறிவித்தல் வரை மாலை 6.30 தொடக்கம் 9.30 வரை கீழ்வரும் திகதியில் இருந்து ஒன்றுவிட்டு ஒரு நாளுக்கு பின்வரும் பிரதேசங்களில் மின்வெட்டு அமுலில் இருக்கும் என்பதனை அறியத் தருகின்றேன்.

**நேற்றிலிருந்து ஒன்று விட்டு ஒரு நாள் மின் வெட்டு அமுலாகும் பிரதேசங்கள்.**

- ஊரெழு
- அச்சுவேலி
- அச்செழு
- கல்வியங்காடு
- அரியாலை.
- புன்னாலைக்கட்டுவன்
- வடமராட்சி
- இருபாலை
- நல்லூர்

**இன்று (1999.12.04) முதல் ஒன்று விட்டு ஒரு நாள் மின்வெட்டு அமுலாகும் பிரதேசங்கள்.**

- உரும்பிராய்
- கோண்டாவில்
- இராமலிங்கம்
- மருத்துவபீடம்
- இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பகுதி
- திருநெல்வேலி
- யாழ்ப்பாணம்(மாநகரசபைக்குள் உட்பட்ட பகுதி)

**'இலங்கை மின்சார சபை சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்'**

**இலங்கை மின்சார சபை.**

**மின் பொறியியலாளர்,**
**யாழ் பிரதேச அலுவலகம்,**
**இலங்கை மின்சாரசபை,**
**சுன்னாகம்.** (சி/10084)



உ

## தசாககிரகயக்ஞ அழைப்பு

**அன்புடையீர்,**

நிகழும் பிரமாதி வருடம் கார்த்திகைத் திங்கள் 9 ஆம் நாள் (25-11-99) வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது தந்தையார்

**பொ. சோமசுந்தரக்குருக்கள் (கரைப்பிரான் ஐயா)**

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | | | |
|---|---|---|---|
| **04-12-99** | **சனி** | **காலை10.30 மணி** | **தசாகம்** |
| **05-12-99** | **ஞாயிறு** | ” | **ஏகோதிஷ்டம்** |
| | | | **மாசிகம்** |
| **06-12-99** | **திங்கள்** | ” | **சபிண்டீகரணம்** |
| **07-12-99** | **செவ்வாய்** | ” | **கிரகயக்ஞம்** |

மேற்படி கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**

கரைப்பிரான்,
ஆனைக்கோட்டை. (71522)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆஸ்பத்திரி வீதி கடையில் அடுத்தடுத்துத் திருட்டு

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மூக்குக் கண்ணாடி கடையொன்று தொடர்ந்து இருநாள்கள் உடைக்கப்பட்டு மூன்று லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை இரவு இக்கடையின் கூரையைப்பிரித்து உள்ளே நுழைந்தவர்கள் அங்கிருந்த மூக்கு கண்ணாடிகள் மற்றும் லென்ஸ் வகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

மீண்டும் நேற்றுமுன்தினமிரவும் இக்கடை உடைக்கப்பட்டு அங்கிருந்த தொலைக்காட்சிப் பெட்டி உட்பட பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

(உ-5)

## பேரினவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையான பிரசாரத்தில் ஈடுபட்டோம். தமிழ்மக்களும் மிகப் பெருமளவில் அவருக்கு வாக்களித்து 62வீதமான வாக்குகளைப்பெற்ற முதல் ஜனாதிபதியாகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

தேர்தல் சமயத்தில் இவர்களால் உறுதி கூறப்பட்ட சமாதானமும், பேச்சு வார்த்தையும் மூன்று மாதத்துக்கே நீடித்தது என்பது இவர்கள் இராணுவத் தீர்வொன்றின்மீது கொண்ட அபார நம்பிக்கையையே வெளிக்காட்டுகிறது. தமிழ் மக்களை விடுவிப்பதுக்கான யுத்தமென்றும், சமாதானத்துக்கான யுத்தமென்றும் அரசினால் குறிப்பிடப்படும் இந்த யுத்தமானது, கடந்த ஐந்து வருடத்தில் தமிழ் மக்களை பேரழிவுக்குள்ளாக்கியுள்ளது; இலட்சக்கணக்கில் மக்கள் அகதிகளாக்கப் பட்டனர். கோயில்கள், தேவாலயங்கள், பாடசாலைகள், சந்தைகள் குண்டு வீசித் தாக்கப்பட்டன; நூற்றுக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்பட்டு காணாமல்போனார்கள்; வழக்கு விசாரணையின்றி நூற்றுக்கணக்கான மக்கள் சிறைச்சாலைகளில் வாடுகின்றார்கள். யுத்தம் என்பது சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடின்றி ஆயிரக்கணக்கானோரை அழித்துவருகின்றது. கொழும்பில் கைதுசெய்யப்படாத தமிழ் மக்களே மிக அரிது என்ற சூழலே நிலவுகிறது.

மறுபுறத்தில் பெரும்பான்மையான தமிழ் கட்சிகள் அவரின் அரசியல் தீர்வுத்திட்ட முயற்சிகளுக்கு ஆதரவாக இருந்துகூட, கடந்த ஐந்து வருட காலத்தில் நாடாளுமன்றத்தில் கூட இத்தீர்வுத் திட்டத்தினை அவரால் சமர்ப்பிக்க முடியவில்லை என்பது யதார்த்தமானது.

இவையாவும் சிங்கள அரசியல் சக்திகளால், தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை திருப்திப்படுத்தும் ஒரு தீர்வினை இலங்கைக்குள் சுயமாகவே முன்னெடுத்துச் செல்லும் ஆற்றல் இல்லை என்பதையே தெளிவுபடுத்துகின்றன. ஆகவேதான் தமிழ் மக்கள் வலுவானதோர் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தினை நாடிநிற்கின்றனர். எமது கட்சியும் ஆரம்பத்தில் இருந்து இதே கருத்தினையே தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

இதனடிப்படையில் மூன்றாம்தரப்பு மத்தியஸ்தம் ஒன்றுக்கு வலுசேர்க்கு முகமாக சகல தமிழ்க்கட்சிகளும் இணைந்து ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துவதன் மூலம் தமிழ் மக்களது வாக்குகள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கான ஓர் ஒப்புதலாக அமையுமென்பதுடன் சிங்கள அரசையும், சர்வதேச சமூகத்தையும் சிந்திக்க வைக்குமென நாம் கருதினோம். ஆனால் ஈ.பி.டி.பி., தமிழர் விடுதலைக் கூட்டணி போன்றவை இம்முயற்சியை எதிர்த்தன. இக்கருத்துடன் இணைந்துகொண்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அதிலிருந்து பின்வாங்கியது. இந்நிலையாலும், வடக்கு - கிழக்கிலும் பிரத்தியேகமாக வன்னியில் ஏற்பட்ட மாறுதல்களாலும் பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கான எமது முயற்சி கைகூடவில்லை.

எதிர்காலத்தில் மூன்றாந்தரப்பு ஒன்றின் மத்தியஸ்தத்துடன் நிரந்தரத் தீர்வு ஒன்றைக்காண இதயசுத்தியுடன் முயற்சிக்கும் எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் எமது கட்சி முழுமையான ஆதரவை வழங்கும் - என்றுள்ளது.

(உ-3)

# சர்வமதக் குருமார் சந்திப்பு

ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிட இருக்கும் வேட்பாளர்களை சர்வமதக் குருமார் எதிர்வரும் 9ஆம் திகதி சந்திக்கவிருக்கின்றனர்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெறவுள்ளது.

சமாதான சூழ்நிலையை ஏற்படுத்த முனைய வேண்டுமென்றும் -ஜனநாயக ரீதியிலான தேர்தல் நடக்க உதவ வேண்டும் என்றும் - சர்வமதகுருமார் வேட்பாளர்களைக் கோரவிருக்கின்றனர்.

## சர்வதேசக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைகள் கவலைக்குரியதாகவே அமைந்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள 22 தேர்தல் கண்காணிப்பாளர்களை உலகநாடுகளில் இருந்து அழைப்பது என பதில் தேர்தல் ஆணையாளர் எடுத்துள்ள முடிவு உடனடியாக வாபஸ் பெறப்படவேண்டும். ஒரு கண்காணிப்பாளரால் குறைந்தது 400 வாக்களிப்பு நிலையங்களையே கண்காணிப்பது முடியாத காரியம் என்பதை கவனத்தில்கொண்டு சகல தேர்தல் தொகுதிகளுக்கும் தனித்தனியே ஒவ்வொரு கண்காணிப்பாளரையாவது நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - இப்படி ரணில் கேட்டுள்ளார்.

## பாதை திறப்பது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பர்கள் அங்குள்ள நிலைமைகளை ஆளுநருக்கு விளக்கினர்.

வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இடம்பெயர்ந்துள்ள ஐயாயிரம் குடும்பங்களுக்கு இரு வாரங்களுக்கான உலர் உணவு நிவாரணம் வழங்கும்படியும் -

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் விளையும் அரிசி மற்றும் தானியங்களை கொள்வனவு செய்து நிவாரணம் வழங்கும்படியும்-

ஆளுநர் சம்பந்தப்பட்ட அரச அதிபர்களுக்கு உத்தரவிட்டார். (உ-3)


# எடிசன் அக்கடமி

411, K.K.S. றோட், யாழ்ப்பாணம். | 18, வைமன் றோட், நல்லூர்.

**புதிய கல்வியாண்டு வகுப்புகள் - 2000**
**தரம் 6 முதல் O/L வரை**

| | |
|---|---|
| கணிதம் | - திரு.B.P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | திரு. இரா.செல்வவடிவேல்<br>திரு. P. சிவானந்தராஜா |
| வரலாறு | - உங்கள் ஆசிரியர், கதிர்காமத்தம்பி |
| சமூகக்கல்வி | - திரு. S. ஜெயா, தவகுலசிங்கம் |
| தமிழ் | - திரு. S. கதிர்காமத்தம்பி, பண்டிதர் |
| ஆங்கிலம் | - திரு. C. சந்திரமௌலி, S.A. கேசரி |
| சுகாதாரம் | - திரு P. சிவானந்தராஜா, பகீரதன். |
| வர்த்தகம் | - திரு. T. அரவிந்தன், E. ஜீவா |

**ஆரம்பம்: 05-12-99 ஞாயிறு**
**முற்பகல் 9.00 மணி**

(சி-10071)

# புலமைப் பரிசில் திட்டம் - 2000

JAFFNA TECHNICAL INSTITUTE SRILANKA

T. P. No :- 3335

**கணனிக் கல்விக்கு 1000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கவுள்ளோம்.**

இதற்கான விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

* பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
* மகாத்மா புத்தகசாலை, திருநெல்வேலி.
* ஞானம் புத்தக நிலையம், நாச்சிமார் கோயிலடி.
* மணியம் ஸ்ரோர்ஸ், கொடிகாமம்.
* நாயகபாலன் புத்தகசாலை, மானிப்பாய்.
* ஜீவா ஸ்ரோர்ஸ், மல்லாகம்.
* மொடேர்ன் ஸ்ரோர்ஸ், நெல்லியடி.
* ஆசீர்வாதம், சாவகச்சேரி.

**20-12-1999க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.**

மேலதிக விவரங்களுக்கு நேரில்.

**-DIRECTOR.**

No. 07, Palaly Road,
Jaffna.

(71465)

# உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும்

We Serve

# இலவச மருத்துவ முகாம்

**இடம்:-** உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்
**காலம் :-** 5.12.99 ஞாயிறு
**நேரம் :-** காலை 9 மணிமுதல் 12 மணிவரை

மேற்படி முகாமில் கண் பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை, நெஞ்சு நோய்களுக்கான பரிசோதனை, பல் பரிசோதனை என்பன இலவசமாக மேற்கொள்ளப்படும்.

**கண்பரிசோதனை :-**
**லயன் எஸ்.எம்.பெர்னாண்டோ** M.J.F
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பிரபல வைத்திய நிபுணர்களும் மருத்துவபீட மாணவர்களும் இந்தப் பரிசோதனைகளை நடத்துவர்.

குறிப்பு :- இலவசமாக கண்ணாடி பெறுபவர்கள் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்கள் என்பதை அத்தாட்சிப்படுத்தும் கிராம சேவகரின் சான்றிதழைச் சமர்ப்பிக்கவேண்டும்.

**அனைவரும் வருக! பயன் பல பெறுக!!**

லயன் அ.க.த.கிருஷ்ணராஜா, செயலாளர் | லயன் இ.நடராஜா, தலைவர்

(C/10087)

INSTITUTE OF INFORMATICS STUDIES

# தமிழ், ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து வகுப்புக்கள்

மேற்படி பயிற்சிநெறிகளுக்கான புதிய பிரிவுகள்

**ஆரம்பம்: 05-12-99**
பகல் 10. 00 மணி

* மேற்படி பயிற்சி நெறிகளை பூர்த்திசெய்துகொள்ளும் மாணவர்களுக்கு MS - WORD இல் மேலதிகமாக கணனிப்பயிற்சி அளிக்கப்படும்.

இயக்குநர்,
IIS 100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C/10056)


# 31ஆம் நாள் நினைவுப் பூக்கள்

04-11-99 அன்று இறைபதம் எய்திய எமது களத்தின் போஷகரும் வலிகாமம் உதவிக் கல்விப்பணிப்பாளர்

**திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களது தந்தையாரும் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை முன்னாள் அதிபரும் ஆகிய**

## அமரர் சிவசுப்பிரமணியம்

அவர்களது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

– சோலைக்குயில் அவைக்காற்றுக் களம்,
மருதனார்மடம்.

(71530)

# மரண அறிவித்தல்கள்

## கதிரவேலு முருகேசு

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு முருகேசு 3.12.99 அன்று காலமானார். அன்னார் கனகம்மாவின் அன்புக்கணவரும், லலிதராணி, தேவபாலசுந்தரன், நகுலேஸ்வரி, சிவா, காலஞ்சென்றவரான வரதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் துரைராசசிங்கம், காலஞ்சென்ற புண்ணியமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை அவரது இல்லத்தில் இன்று (4.12.99) நண்பகல் 11மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**சிவா (மகன்)**

178/1, அரசடி றோட்,
கந்தர்மடம்.

(71531)

## கிருஷ்ணகுட்டி அக்னேஸ் (சுகிர்தம்)

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இல.30, மணிக்கூட்டு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணகுட்டி அக்னேஸ் (சுகிர்தம்) அவர்கள் 3.12.99இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணகுட்டியின் அன்புமனைவியும், உதயகுமார் (பதிவாளர், நீதிமன்றம் வவுனியா), சூரியகுமாரி, சந்திரகுமார், ஜெயக்குமார், விஜயகுமாரி, தவக்குமார், பிறேம்குமார், சுகுமார், கிருஷ்ணகுமாரி ஆகியோரின் அன்புத்தாயாரும் பார்வதி, வேலுநாதன், வளர்மதி, புஷ்பராணி, ரவீந்திரன், பவானி, இந்துமதி, விவேகானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பாக்கியசோதியின் அன்புச்சகோதரியும், ராகவனின் (றேடியற்றர்) அன்பு மைத்துனியும், ராஜா, ராணி, ராஜீவ், ரஞ்சித், காலஞ்சென்ற சர்மிளா மற்றும் தர்ஷா, பிரியதர்ஷன், காயத்ரி, ஜெயதீஷ், ஜெயத்ரி, லக்ஷி, ரஜீந்திரன், ரஜீந்திரி, பிரவீணா, சுஜாமதி, சுரேணுஜன், மதுலுஜன், நேருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (5.12.99) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கி. சந்திரகுமார், வேலுநாதன்**
(நாதன் மதுபானசாலை)

இல.30, மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(71529)

## நாகமணி சின்னம்மா

126A, கண்டிவீதியைச் சேர்ந்த திருமதி நாகமணி சின்னம்மா அவர்கள் 1.12.99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணியின் அன்பு மனைவியும் தனபாக்கியம், காலஞ்சென்ற இரத்தினவேல் (பிரதம கணக்காளர், பொலீஸ் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகரத்தினம் (கணக்காளர், கொழும்பு), பத்மாவதி(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியகலாசாலை) ஆகியோரின் மாமியாரும் சபேசன், சுதர்சன், செந்தூரன், செவ்வந்தி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2.12.99 இல் கொழும்பில் நடைபெற்றன.

தகவல்:
**இ.செந்தூரன்**
(பேரன்)

22, புறூடி லேன்,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(71533)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04-12-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# பண்டிதமணியின் சொற்பொழிவை கேட்டுப் போற்றிய தமிழக அறிஞர்!

ஐம்பதாம் ஆண்டு காலப்பகுதியில் பத்திரிகைத்துறையில் இரட்டையர்களாய்ப் பிரகாசித்த கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தியும் ஓவியர் மாலியும் தமது பத்திரிகைகளுக்கு வேண்டிய விஷயங்களைச் சேகரிக்கும் முகமாக இங்கு வந்தார்கள். இருவரையும் யாழ்ப்பாணம் மெத்த மகிழ்வுடன் வரவேற்றது.

மாலி அவர்கள் சிறந்த சித்திரக்காரர். ஒருவரைப் பார்த்த உடனேயே அவரது உருவத்தை அப்படியே தத்ரூபமாக வரையக்கூடியவர். ஒருவர் மேடையிற் பேசுகின்றார் என்றால் - பாடுகின்றார் என்றால் - பேசிமுடிய, பாடிமுடிய அவரது அங்க அசைவுகளுடன் சித்திரித்து ஓவியம் படைத்து விடுவார் மாலி.

கல்கியும் மாலியும் இங்கே வந்தசமயம் இங்கே பிரபலம் பெற்றிருந்தவர்களான பண்டிதமணி, சு.நடேசபிள்ளை முதலியவர்களைச் சந்தித்து யாழ்ப்பாணத்துக்கும் தமிழகத்துக்குமான தொடர்புகளைப் பரிமாறிக்கொண்டார்கள்.

பண்டிதமணி,நடேசபிள்ளை உட்பட தாம் சந்தித்தவர்களை உடனுக்குடன் சித்திரமாக வரைந்தார் மாலி.

யாழ்ப்பாணத்தில் கல்கி, மாலி இருவரையும் வரவேற்று உபசாரக் கூட்டங்கள் நடந்தன. அப்படியொரு வரவேற்புப் பருத்தித்துறையிலும் நடந்தது.

வரவேற்றுபுப் பாவை எழுதிக்கொடுத்தவர் அப்பொழுது தும்பளையில் இளைஞராக இருந்த பண்டிதர் க.சச்சிதானந்தன் (மாவை சச்சிதானந்தன்). பாடல் பொறிக்கப்பட்ட உபசாரப் பத்திரத்தை மிகவும் பேணி எடுத்துச்சென்றார் கல்கி.

அக்காலத்தில் தமிழகக் கல்வி அமைச்சராக இருந்த அவிநாசிலிங்கம் செட்டியார் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முதுகெலும்பாகவும் செயற்பட்டார். இவரது முயற்சியாலும் கல்கி போன்றவர்களின் ஒத்துழைப்பினாலும் 1951இல் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் (இப்பொழுது யாழ் பல்கலைக்கழகம்) தமிழ்விழா கோலாகலமாக நடந்தது. இலங்கை, இந்திய அறிஞர்கள் இந்த விழாவில் திரளாகக் கலந்துகொண்டார்கள்.

அவ்விழாவில் தமிழ் பற்றிப் பண்டிதர் சி.கணபதிப்பிள்ளை உரையாற்றினார். பேச்சு உச்சமாக அமைந்தது. அவரை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை என்று குறிப்பிட்டு தினகரன் ஆசிரியர் ஞாயிறு தினகரன் பத்திரிகையில் தமிழ்ச்சாறு என்ற தலைப்பில் எழுதினார். பண்டிதமணி என்ற செய்தி, கல்கியிலும் மற்றும் அனைத்து இலங்கைப் பத்திரிகைகளிலும் வெளிவந்தது. பண்டிதர் சி.க., 'பண்டிதமணி சி.க.' என அழைக்கப்பட்டார்.

## கொத்தமங்கலம் சுப்பு

கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு ஒருமுறை இலங்கைக்கு வந்தார். குரும்பசிட்டியில் ஈழகேசரி நா.பொன்னையா அவர்களது இல்லத்துக்கும் விஜயஞ்செய்தார். எதிர்பாராதவிதமாக அங்கு சென்றிருந்த பண்டிதமணியை அறிமுகஞ்செய்து வைத்த பத்திராதிபர் பொன்னையா "இரண்டு வசனங்கள் பேசுங்கள் பண்டிதர்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

## ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்

கொத்தமங்கலம் சுப்புவின் பழைய பாடல்களில் ஒன்றைப் பண்டிதமணி தமக்கே இயல்பான தொனியிற் படித்து வியாக்கியானமுஞ் செய்தார். "அட! நான் பாடிய பாடலுக்கு இப்படியும் ஒரு விமரிசனமா?" என்று மிகவும் குதூகலம் அடைந்தார் சுப்பு.

வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களது புராண உரையைக்கேட்டுக்கொண்டிருந்த வன்றொண்டஞ் செட்டியார் (மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் மாணவர்) ஆராமையின் ஆற்றாமையால் பொன்னம்பலபிள்ளை அவர்களைக் கட்டித்தழுவி மகிழ்ந்தது போலப் பண்டிதமணி அவர்களைக் கட்டித்தழுவி மகிழ்ந்தார் கொத்தமங்கலம் சுப்பு.

## கி.வா.ஜ.

இலங்கை அறிஞர்களது - விசேடமாக யாழ்ப்பாணத்தவர்களது - கல்விச் சேவையை [illegible] உ.வே. சாமிநாதையர் தெளிவாகக் கூறவில்லை என்ற ஒரு குறை உண்டு. பண்டிதமணியும் இது விடயத்தில் ஐயரவர்களைக் கண்டித்து எழுதியதுண்டு. எனினும் உ.வே.சாமிநாதையரது மாணவரும் கலைமகள் ஆசிரியருமான கி.வா.ஜகந்நாதன் பண்டிதமணியிடத்துப் பெருமதிப்புக் கொண்டிருந்தார். கி.வா.ஜ. ஐயரவர்கள் யாழ்ப்பாணம் வரும்போதெல்லாம் பண்டிதமணியைச் சந்திக்கத் தவறுவதேயில்லை.

பண்டிதமணியின் திருநெல்வேலி இல்லத்துக்கு வந்துசேர்ந்ததும் "கண்டு கொண்டுபோக வந்தேன்" என்பார் கி.வா.ஜ. (கண்டு - கற்கண்டு). தம்மைச் சந்திக்கவருபவர்களுக்கு முதலிலே கற்கண்டு கொடுப்பார் பண்டிதமணி. நீண்டநேரம்



பண்டிதமணி
சி.கணபதிப்பிள்ளை

சம்பாஷணை நடக்கும். அவர்களது சம்பாஷணையே 'கண்டு' போல இனிக்கும். கி.வா.ஜ.வினது வேண்டுகோளுக்கு இணங்கிப் பண்டிதமணி கலைமகளில் எழுதியதும் உண்டு.

நீர்வேலி சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்களின் பெருமுயற்சியால் கி.வா.ஜ.வினது மணிவிழா வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத்தில் நன்கு நடைபெற்றது. மணிவிழாவுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தவரும் பண்டிதமணியே.

## சோமசுந்தரப் புலவர்

சோமசுந்தரப்புலவர் அவர்களது அன்பு மனைவியார் பெயர் சின்னம்மையார். அம்மையாரின் கையைக் குறித்து புலவர் அவர்கள் அருமையாகப் பாடியிருக்கின்றார்கள்.

"தாரமாய்த் தாயானாள் கை" என்பது அப்பாடல். அந்தப் பாடலைப் படித்து மகிழ்ந்தவரான பண்டிதமணி அம்மையாரின் கையைப்போற்றிப் பாடிய வாயால், கண்ணுக்கும் பாடவேண்டும் என்றார்.

பண்டிதமணி வேண்டுகோளை ஏற்றுச் சின்னம்மையாரின் கண்ணுக்கும் ஒருபாட்டு பாடியனார் நவாலியூர்ப் புலவர் அவர்கள்.

புலவரது 'இலங்கை வளம்' என்ற கவிதை நூலுக்குப் பண்டிதமணி அளித்த அணிந்துரையில் -

> "இலங்கைவளம் கேளாதசெவியென்ன செவியே
> இரும்பாலே செம்பாலே செய்திட்ட செவியே"

- என்று குறிப்பிட்டிருக்கின்றார். பண்டிதமணியினது கூரிய மதிநுட்பத்தினையும், அவர் செய்த பணிகளையும் பல சந்தர்ப்பங்களில் பாராட்டிப் பாடி இருக்கின்றார் புலவர். பண்டிதமணி "கற்றார் விழையுங் கற்பகதரு" என்றும் "வண்டமிழ் இதமறி பண்டிதமணி" என்றும் பாராட்டி இருக்கின்றார் ஐயர்.

## சைவாசிரிய கலாசாலை

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஒன்று சேர்ந்து [illegible]பணிபுரியும் அரிய வாய்ப்பினை மூன்று பெரியவர்கள் பெற்றார்கள். மயிலிட்டி சி.சுவாமிநாதன், அளவெட்டி பொ.கைலாசபதி, மட்டுவில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை மூவருமே அந்தப் பெரியவர்கள். சாதிமானும் நீதிமானும் கல்விமானுமான சுவாமிநாதன் அதிபராகவும் மௌன தவமுனிவரான கைலாசபதி உபஅதிபராகவும் பண்டிதமணி தமிழ்த்துறைத் தலைவராகவும் இணைந்து பணியாற்றிய காலம் சைவாசிரிய கலாசாலையின் சரித்திரத்தில் பொற்காலம் எனலாம்.

சுவாமிநாதன் பண்டிதமணி சேவையைப் பாராட்டி பொன்னாடைபோர்த்திக் கௌரவித்தார். கைலாசபதி பண்டிதமணி மீது தமது தூய பார்வையை செலுத்தினார். அதிபர் சுவாமிநாதன், உப அதிபர் கைலாசபதி ஆகியோர்களது கூட்டரவினால் பண்டிதமணி சைவத் தமிழ்ப்பணிகளில் உறுதியானதொரு பெருநிலையை அடைந்தார். சைவாசிரிய கலாசாலையில் இப்படியொரு நிலையை ஏற்படுத்தி வைத்தவரான இந்துபோட் சுப்பிரமணியம் இராசரத்தினம் "நாவலருக்குப்பின் நமக்கோர் காவலர்" என்ற சிறப்புக்கும் உரியவரானார்.

## தஷகாண்ட உரை

பண்டிதமணி பல நூற்றுக்கணக்கான கட்டுரைகளை எழுதினார். நூல்கள் பல செய்தார். அவரது தஷகாண்ட உரைநூல் வெளியீடு பேராதனைப்பல்கலைக்கழக கலை மண்டபத்தில் இடம் பெற்றபோது அங்கு உரையாற்றிய பேராசிரியர் அட்டிகல "நமது நாட்டில் ஒருகாலத்தில் 'பூஜாவளி' என்ற நூல் சிறப்பாக வெளியீடு செய்யப்பட்டது. அதேபோலத் தகுதிவாய்ந்த 'தஷகாண்ட உரை' நூல் இப்பொழுது விமரிசையாக வெளியிடப்படுகின்றது. இந்நூலை எழுதிய மூதறிஞர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை மிகவும் பாராட்டுக்கு உரியவர்" என்றார். பௌதீகவியல் போராசிரியர் ஆ.வி.மயில்வாகனம், மருத்துவத்துறை பேராசிரியர் அ.சின்னத்தம்பி, கணிதத்துறையைச் சார்ந்த பேராசிரியர் பே.கனகசபாபதி முதலானவர்கள் தஷகாண்ட உரைநூல் வெளிவருவதற்கு மிகவும் உழைத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## முத்திரையிற் பண்டிதமணி

சைவ சமய மகோத்தாரணர், வசன நடை கைவந்த வல்லாளர் என்றெல்லாம் புகழப்பட்டவரான நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானை நினைவுகூரும் வகையில் 29.10.1971 இல் அரசு முத்திரையை வெளியீடு செய்தது. அரசியல் வானில் பிரகாசித்தவர்களான சேர். பொன்னம்பலம் இராமநாதன், சேர்.பொன்னம்பலம் அருணாசலம், சேர்.வை.துரைச்சாமி ஆகியோருக்கும் தொடர்ந்து ஆனந்தக் குமாரசாமி, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, பேராசிரியர் துணை வேந்தர் சு.வித்தியானந்தன் உள்ளிட்ட தமிழ் அறிஞர்களுக்கும் நினைவு முத்திரைகள் அரசினால் வெளியிடப்பட்டன.

பிறந்த நாட்டுப் பெரியவர்களினாலும் ஏனையோராலும் நன்கு பாராட்டப்பட்டவரான இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களது நூறாவது பிறந்ததின நினைவையொட்டித் தபால் திணைக்களம் இன்று சிறப்பு முத்திரை ஒன்றை வெளியீடு செய்கிறது. உலகமக்கள் முத்திரையிற் பண்டிதமணி உருவத்தை தரிசிக்கும் பாக்கியம் இன்று ஏற்பட்டுள்ளது. இந்நாள் தமிழ் உலகுக்கு ஒரு நன்னாள்.

*

### பண்டிதமணி நினைவாக இன்று முத்திரை வெளியீடு

**அமரர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் நூறாவது ஆண்டு நிறைவையொட்டி தபால் திணைக்களம் இன்று அவரது உருவப் படம் பொறித்த சிறப்பு முத்திரை ஒன்றை வெளியிடுகின்றது. அதையொட்டி பண்டிதமணியுடன் பழகியவர்கள் குறித்து ஒரு நினைவுக்கட்டுரை பிரசுரமாகின்றது. (ஆ-ர்)**

## கருத்துக் கலசம்

மேழரா

### உலகம் உயர...

**உண்மையையும் இன்னா செய்யாமையையும் முற்றிலும் போற்றிக் கடைப்பிடிக்காத வரையில் பற்று இன்றிப் பணி செய்தல் என்பது முடியாத காரியமாகும**

*-காந்தி மகான் -*

பகவத்கீதையில் உள்ள உண்மைக் கருத்துக்களை வாழ்க்கையில் நடத்திக்காட்டுவதற்குத் தாமும் தமது நண்பர்களும் எடுத்த முயற்சிகள் குறித்து மகாத்மாகாந்தி ஓரிடத்தில் விவரித்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பகவத்கீதையில் உள்ள உபதேசங்களை வாழ்க்கையில் கைக்கொண்டு நடக்கும் முயற்சியில் அடிக்கடி தாம் தோல்வி அடைந்ததாக காந்திஅடிகள் சொன்னார். ஆனால் வெற்றிகாணும் போதெல்லாம் இதயத்தில் பேரொளி உண்டாயிற்றாம்.

உண்மை அழிவில்லாதது. சில சந்தர்ப்பங்களில் அது மறைந்திருந்தாலும் கூட நிச்சயமாக அது வெளிவந்தே ஆகும். இதனை உணராதவர்களாக மக்களில் பலரும் உண்மையை மறைக்க முயல்கிறார்கள். உண்மையே எப்போதும் உயர்வுதரும். உண்மை பேசாதிருப்பது அல்லது உண்மையாக நடந்து கொள்ளாதிருப்பது ஒருபுறமிருக்க, அதனை மறைக்க முயல்வது பின்னர் பல கொடிய பாதகமான விளைவுகளைத்தரும்.

மனிதன் வேடம் போடுவதில் வல்லவன். நாடகத்தில் மட்டுமல்ல, வாழ்க்கையிலும்தான். அதனால் பொய்யை மெய்யாக - உண்மையாக - காட்டுவதில் கைதேர்ந்தவனாயுள்ளான். இந்தக் காலத்தில் உண்மையை மறைப்பவர்களும் வேடம்போடுபவர்களுமே மிக அனேகர். அந்தப் பொய்மையாளர்களை பாடுபவர்கள் - போற்றுபவர்கள் - அவர் பக்கம் நிற்போரும் அநேகம்.

ஒரு தனிமனிதன் உண்மை பேசாத போது, மறைக்கும் போதும் பாரதூரமான விளைவுகள் உண்டாகின்றன. இப்போது சமூகத்தை முழுமையாக எடுத்துக்கொண்டால், உண்மைக்கு மதிப்பளிப்போர் குறைவாகவே உள்ளனர்.

மிகக் குறிப்பாக மக்களை ஆட்சி செய்யும் அல்லது வழிநடத்தும் அரசியலாளர்களே உண்மைக்கு மதிப்பளிக்காமையைக் காண்கிறோம். தமது சொந்த நன்மைகள் கருதியும், தாம்செய்யும் தவறுகளை மறைக்கவும் அவர்கள் உண்மையை ஒளித்து வைக்கிறார்கள்.

அரசியல்வாதிகள் என்போர் மக்களுக்காக உழைப்பவர்களாக அன்றி சகல வகைகளிலும் தமக்கு வளம் சேர்ப்பவர்களாகவே மாறிவிட்டார்கள். ஆகையால் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றை மட்டுமன்றி உண்மை,நேர்மையையும் தொலைத்தவர்களாகவே அவர்கள் செயற்படுகின்றனர். மக்களுக்கு பணி செய்யவென்று வருவோரிடம் இப்போது சுயபற்றே செறிந்து காணப்படுகிறது.

தனிமனிதன், சமூகம், தலைவன் என்று எவரிடமும் எங்கும் உண்மைத் தன்மையைக் காண முடியவில்லை. பொய்மையும் வேடமிடுதலுமே மலிந்துள்ளன. இதனால் மனிதனின் பெறுமானம் தேய்ந்து செல்கிறது. இதனைத் தடுப்பது, தவிர்ப்பது யார்? உண்மை ஒளிர்ந்து உலகம் உயர வழி பிறவாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா குறித்த விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு; இனப்பிரச்சினைத் தீர்வில் புதிய திருப்பத்தைத் தருமா?

## தேர்தலில் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதற்கும் சமிக்ஞை

புத்தாயிரம் ஆண்டு தொடர்பான பல நிகழ்வுகள் கொண்டாட்டங்கள் என்று மேற்கு நாடுகள் பலவும் ஆரவாரப்படத் தொடங்கிவிட்டன. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று கிழக்கு நாடுகளும் புதிய இரண்டாயிரமாம் ஆண்டினை முன்வைத்துப் பல நிகழ்வுகளுக்கும் கொண்டாட்டங்களுக்கும் ஆயத்தம் செய்யத் தொடங்கி உள்ளன.

இருபதாம் நூற்றாண்டு அடுத்த வருடத்தில் முடிவுற்று 2001 ஆம் ஆண்டிலேயே இருபத்தொராம் நூற்றாண்டு ஆரம்பமாகிறது என்பது கணித வியலாளர்கள், சோதிடர்களின் கணிப்பு. எந்த விடயத்திலும் இரண்டு தரப்புகளும் கருத்து முரண்பாடுகளும் இருப்பது போலவே புத்தாயிரம் ஆண்டைக் கொண்டாடுவதிலும் இரண்டு தரப்புகள்!

தரப்புகளைப் பார்க்காமல் பெரும்பாலானோர்



அடுத்த வருடத்தையே புத்தாயிரம் ஆண்டின் ஆரம்பம் எனக் கொண்டு விழாக்கள் கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடுகள் செய்துவருகின்றனர். இலங்கையிலும் 2000ஆம் ஆண்டில் பல சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

அத்தகைய நிகழ்வுகளில் இலங்கையின் புதிய ஜனாதிபதி பதவி ஏற்பதும் முதன்மை பெறவுள்ளது. புத்தாயிரம் ஆண்டில் தமது பதவியைப் புதுக்கிக்கொள்ளவேண்டும் என நினைத்தே ஜனாதிபதி உரிய காலத்துக்குமுந்தி தேர்தலை இவ்வருடத்தில் வைத்திருக்கவேண்டும் என்கிறார் விடயம் விளங்கிய ஒருவர்!

சரி, புத்தாயிரம் ஆண்டோ அல்லது இந்த நூற்றாண்டின் இறுதி ஆண்டோ இப்போதைய ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றால்தானே சந்திரிகாவின் புதுக்குதலும் கணக்கும் சரி வரும் என்று சந்தேகம் எழுப்புகிறார் ஸ்ரீமான் பொது ஜனம்!

ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா மீண்டும் தெரிவு செய்யப்படுவதில் ஸ்ரீமான் பொதுஜனம் சந்தேகப்படுவதில் உண்மை உண்டோ இல்லையோ என்பதல்ல சமாசாரம். ஜனாதிபதித் தேர்தலில் கடும்போட்டி நிலவும் என்பது ஏற்கனவே தெரிந்த ஒன்றுதான். ஆனால் இப்போது தெற்கில் நடைபெறும் தேர்தல் பிரசாரங்களை நோக்கும் போது ஆளுங்கட்சிக்கே அவ்வாறு ஓர் அச்சம் தோன்றியுள்ளதோ என்று எண்ண வைக்கிறது.

ஆளுங்கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை அவதானித்தால், அரசாங்கம் இதுவரை சாதித்தது என்ன, இனிமேல் என்னென்னவற்றைச் செய்யப்போகின்றது என்பன குறித்து மக்களுக்கு - வாக்காளருக்குச் - சொல்வதை விட, ஐக்கியதேசியக்கட்சியின் கடந்தகால நடவடிக்கைகளையும், ரணில் விக்கிரமசிங்காவையுமே அதிகம் விமர்சிக்கிறார்கள்; தாக்கிப் பேசுகிறார்கள். அதுவும் ரணிலையும் விடுதலைப்புலிகளையும் சம்பந்தப்படுத்திப் பேசுகிறார்கள். ரணில் பதவிக்கு வந்தால் வடக்கு - கிழக்கை விடுதலைப்புலிகளுக்கு கொடுப்பார்; தமிழீழம் கொடுப்பார் என்றெல்லாம் முழங்குகிறார்கள்.

தமிழீழம், விடுதலைப்புலிகள் என்ற பதங்கள் சிங்கள வாக்காளர்களுக்கு ஒவ்வாமை (Aler-gic) உள்ளவை. அவற்றைப் பயன்படுத்தினால்

### உள்ளும் புறமும்
குறுமுனி

ரணிலுக்கு விழக்கூடிய வாக்குகளை தாம் கவர்ந்திழுக்கலாம் என்ற அடிப்படையிலேயே இந்தப் பிரசாரமுறை கையாளப்படுகின்றது.

ஆளுங்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு தமது வேட்பாளரான சந்திரிகா வெல்வார் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லையெனில், எதிரணியைத் தூற்றுவதிலேயே அதிக கவனம் செலுத்தவேண்டிய தேவை இல்லையல்லவா? ஆனால் தாம் மட்டுமன்றி, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறிய மாற்றுக்குழுப் பிரமுகர்களையும் தமக்குத் துணைக்கு அழைக்கின்றனர் ஆளுங்கட்சியினர்.

தெற்கின் தேர்தல் பிரசாரம் எப்படி அமைந்தாலும், சிறுபான்மை இன மக்களான தமிழ், முஸ்லிம் வாக்காளர்களின் புள்ளடிகளே இருவரில் எவர் புதிய ஜனாதிபதி என்பதனை நிர்ணயிக்கப்போகின்றன என்பதில் மாற்றமிருக்காது என்கிறார்கள் அவதானிகள்.

கிழக்கைப் பொறுத்தவரையில் முஸ்லிம் வாக்காளர்கள் தேர்தலில் பங்கு கொள்வதில் வழமையான ஆர்வத்துடன் உள்ளனர். ஆளுங்கட்சியைப் போலவே எதிர்க்கட்சிக்கும் கணிசமான வாக்குகள் கிடைக்கும் எனச் சொல்லப்படுகிறது. முஸ்லிம் காங்கிரஸின் போக்கில் வெறுப்புக் கொண்டவர்களின் வாக்குகளும் எதிரணிக்குச் சேரும் எனவும் சொல்லப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மற்றும் தென் பிரதேசங்களில் வாழும் தமிழர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்வதா, அவ்வாறாயின் யாருக்கு வாக்களிப்பது என்பதனை முடிவுசெய்வதற்கு தலைவர் பிரபாகரனின் மாவீரர்தின உரை ஏதோ ஒரு வகையில் தொட்டுக் காட்டும் என எதிர்பார்த்தார்கள். எனினும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து மாவீரர் தின உரையில் நேரடியாக எதுவும் சொல்லப்படவில்லை.

ஆனால் மாவீரர் தின உரையில், சந்திரிகா பதவி இழப்பதையே தாம் விரும்புவதாகப் பிரபாகரன் மறைமுகமாகக் கூறியுள்ளார் என்று அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சந்திரிகாவின் ஆட்சி தமிழர்களுக்கு ஒரு சாபக்கேடு - என்றும்

சுதந்திர இலங்கையில் நடைபெறும் மிகக் கொடிய இன அடக்குமுறை வரலாற்றில் சந்திரிகாவின் ஆட்சியே மிகவும் அடக்குமுறை மிக்க கொடூர ஆட்சி - என்றும் பிரபாகரன் கூறியுள்ளமை, சந்திரிகா பதவி இழக்கவேண்டும் என்ற அவரது விருப்பத்தையே பிரதிபலிப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஜனாதிபதித் தேர்தல் குறித்து நேரடியாகக் கூறவில்லையெனினும் லண்டனில் நடைபெற்ற மாவீரர்தினக் கூட்டத்தில் உரையாற்றிய அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தேர்தல் குறித்துத் தொட்டுக்காட்டியுள்ளார்.

லண்டனில் நடைபெற்ற மாவீரர் நாள் கூட்டத்தில் பிரிட்டனில் உள்ள பல பாகங்களிலும் வாழும் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் திரண்டிருந்தனர் என்று செய்தி ஊடகங்கள் தெரிவித்தன. ஆனால் சுமார் 8,000 மக்கள் மாவீரர்தினக் கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்ததாக அதில் கலந்துகொண்ட ஒருவர் தகவல் தந்தார்.

### ஒரே நாளில் பல லட்சம்

இந்தக் கூட்டத்தில் தலைவர் பிரபாகரனின் படங்கள் மற்றும் ஒலி, ஒளிநாடாக்கள், விடுதலைப்புலிகளின் இலச்சினைப் பதக்கங்கள் என்பன விற்கப்பட்டதாகவும் சபையினர் முண்டி



யடித்துக்கொண்டு வாங்கினர் என்றும் அவர் சொன்னார். இந்த விற்பனைகள் மூலம் இலங்கை நாணயப் பெறுமதிக்கு பல லட்சம் ரூபா சேர்ந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

வன்னிப் போரில் விடுதலைப்புலிகள் பெரு வெற்றி அடைந்துள்ளநிலையில், பொதுவாகவே புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களிடம் உற்சாகமும் மகிழ்ச்சியும் பிறந்துள்ளதைக்காணக் கூடியதாக உள்ளதென அவதானிகள் தெரிவிக்கின்றனர். விடுதலைப்புலிகளின் செயற்பாட்டில் இங்குள்ளவர்களுக்கு அதிக நம்பிக்கை பிறந்திருப்பதாக அவதானிகள் சொல்கின்றனர். கூட்டத்தில் கலந்துகொண்ட பெண் ஒருவர் தனது தாலிக்கொடியைக் கழற்றி கூட்ட அமைப்பாளரிடம் ஒப்படைத்த சம்பவமும் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகப் பேசுகையில் அன்ரன் பாலசிங்கம் சொன்னது:

ஐந்து வருட ஆட்சியை முடித்துக்கொண்டு சந்திரிகா தேர்தல் நடத்துகிறார். தேர்தலுக்காக சந்திரிகாவும் ரணில் விக்கிரமசிங்காவும் அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். புலிகளுடன் பேசுவோம்; தமிழ்மக்களுக்கு அதைச் செய்வோம்; இதைச் செய்வோம் என்று இரண்டு பேரும் சொல்கிறார்கள் ·-

இந்தத் தேர்தலில் எங்கள் இயக்கத்தின் நிலைப்பாடு என்னவென்று பலர் என்னிடம் வந்து கேட்டார்கள். விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு இதுதான் -

சிறிலங்காவின் அரசியல் அமைப்பில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. சிறிலங்காவின் அரசமைப்பு அது அதிகாரம் உள்ள ஜனாதிபதியின் ஆட்சியோ அன்றி, நாடாளுமன்றமோ அங்கு மாறி மாறி ஆட்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆட்சிகளாலோ அல்லது அதிகார பீடங்களாலோ எங்களுக்கு ஒரு விடிவும் வந்துவிடாது. அப்படியிருக்கும்போது நாம் ஏன் இது



குறித்து அலட்டிக்கொள்ளவேண்டும்?

ஏன், நாங்கள் அது குறித்து மக்களுக்குச் சொல்ல வேண்டும்? அவருக்கு வாக்குப் போடுங்கள்; இவருக்கு வாக்குப்போடாதீர்கள் என்று ஏன் நாம் சொல்ல வேண்டும்? நாங்கள் காலங்காலமாக சிறிலங்காவின் தேர்தல்களைத் தூக்கி எறிந்து நிராகரித்துக்கொண்டுவருகிறோம். எங்களுக்கு இதனால் எவ்வித பயனும்இல்லை. எப்படியிருந்தும் என்ன செய்யவேண்டும் என்பது எங்களின் மக்களுக்குத் தெரியும். -

எங்களுடைய கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் தேர்தல் நடைபெறாது. சிலவேளை, யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் அரசாங்கம் தேர்தல்களை நடத்தக்கூடும். மட்டக்களப்பிலும் நகரத்தில் மட்டுமே தேர்தல்கள் நடைபெறும். மட்டக்களப்பு மாவட்டத்தின் 85 சதவீதம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. நகரப்பகுதியில் மட்டுமே இராணுவம் நிலை கொண்டுள்ளது. சரி, அங்கேதான் தேர்தலை நடத்தப் போகிறார் சந்திரிகா-

தேர்தலில் என்ன செய்ய வேண்டும் என்று மக்களே தீர்மானிக்கட்டும். அது மக்களுடைய சுதந்திரம். தமது வாக்குகளை ரணிலுக்குப் போடுவதானால் போடட்டும் சந்திரிகாவுக்கும் போடுவதானால் போடட்டும் -

ஆனால் மக்களுக்கு ஒன்றை மட்டும் சொல்வோம். "இந்த அம்மா பதவிக்கு வந்தாவெண்டால் புதுயுகத்திலை பிரச்சினை இன்னும் கூட இருக்கும்"-

இங்கே ஒரு பகிடியும் உண்டு. அது என்னவென்றால் ரணில் விக்கிரமசிங்கா அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்கிறார்.அவற்றை வைத்துக்கொண்டு அவருக்கும் எங்களுக்குமிடையில் ஏதோ இரகசிய ஒப்பந்தம் உண்டென்று சந்திரிகா நினைக்கிறார். ஆனால் அவ்வாறு எந்தவித ஒப்பந்தமும் இல்லை. - இவ்வாறு சொன்னார் அன்ரன் பாலசிங்கம்.

பிரபாகரனின் மாவீரர் தின உரையில் சந்திரிகா பதவி இழப்பதையே விரும்புவதாக மறைமுகமாகக் கூறியிருப்பதை -

சந்திரிகா பதவிக்கு வரக்கூடாது, வெல்லக் கூடாது என்பதே விடுதலைப்புலிகளின் விருப்பம். அவர் பதவிக்கு வந்தால் பிரச்சினைகள் மேலும் பெருகும் என்றவாறு அன்ரன் பாலசிங்கம் லண்டன் மாவீரர் தினக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்.

அந்த அடிப்படையில் மக்கள் என்ன செய்வார்கள் என்பது தமக்குத் தெரியும் என்று அவர் சொல்வது -

ஆளுங்கட்சிக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்கமாட்டார்கள் என்பதனையே குறிக்கிறது எனலாம்.

* * *

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தமது லண்டன் உரையில் பல விடயங்களைத் தெளிவுபடுத்தி உள்ளார். அவற்றில் இந்தியாவுடனான உறவு குறித்த அம்சமும் அடங்குகிறது.

இந்திய அமைதிப்படை வடக்கு-கிழக்கில் நிலைகொண்டிருந்தது; விடுதலைப்புலிகளுடன் போர் நடத்தியது. சுமார் ஆயிரம் இராணுவத்தினரை இழந்தது. பிரேமதாசாவின் பதவிக் காலத்தில் இங்கிருந்து வெளியேறுமாறு கேட்கப்பட்டது. ராஜீவ்காந்தி மனிதக் குண்டுக்கு இரையானது ஆகிய நிகழ்வுகளின் பின்னர் விடுதலைப் புலிகள் கொண்டிருந்த நிலைப்பாட்டுக்கும் -

### வெவ்வேறு புறநிலைகள்

இப்போதுள்ள நிலைப்பாட்டுக்கும் நிறையவும் வித்தியாசம் உண்டு. அதனை அன்ரன் பாலசிங்கம் லண்டனில் மாவீரர் தினத்தில் ஆற்றிய உரையிலிருந்து எவரும் தெரிந்துகொள்ளலாம்.

இந்தியாவுடனான உறவு குறித்து அவர் கூறியதை இங்கு விவரமாகத் தருகிறோம்.

எங்களுக்கு முக்கியமான ஆள்கள் யார் என்று சொன்னால் இந்தியாதான். இந்தியாவைப் பற்றித்தான் நாங்கள் அக்கறைப்படவேண்டும். இந்தியாவுக்கும் எங்களுக்கும் ஒரு நீண்ட தொடர்பு இருக்கிறது. அந்தத் தொடர்பில் முரண்பாடுகள் வந்தன; மோதல்கள் ஏற்பட்டன; பின்னர் யுத்தம்கூட வெடித்தது. ஆனால் இந்தியா என்றும் எங்களது நேச சக்தியே.

ராஜீவ் காந்தியுடைய இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சியில் அவர்கள் வகுத்த தவறான வெளிவிவகாரக் கொள்கையால்தான் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் உருவாகின. அந்தத் தவறை அவர்களே இப்போது உணர்ந்து கொள்கிறார்கள். நாங்கள் ஏன் ஐயா இந்தியாவுடன் சென்று மோதப்போகிறோம்? அவ்வாறு செய்வதற்கு எங்களுக்கு என்ன பைத்தியமா? அவர்கள் தானே எங்களுடன் வந்து மோதினார்கள்.

நாங்கள் எமது மக்களின் சுதந்திரத்துக்காகப் போராடுகிறோம். எங்கள் மக்கள் காலங்காலமாக இந்தியாவைக் கடவுளாகப் போற்றிவந்தவர்கள். அந்த மக்களை இந்தியப் படைகள் வந்து துன்புறுத்தி, அடிமைப்படுத்தி, கொடுமைப்படுத்திக் கொன்று அழித்தன. அது இந்தியா விட்ட தவறுதானே!

சரி, அவை பழைய தவறுகளாகவே இருக்கட்டும். அவற்றை இப்போது நாங்கள் மறந்து விடுவோம்.

இப்போது இந்தியாவில் புதியஅரசு (பி.ஜே.பி அரசு) பதவிக்கு வந்திருக்கிறது. அந்த அரசில் எங்களுக்குச் சாதகமான கட்சிகளும் அங்கம் வகிக்கின்றன. தமிழ் நாட்டிலும் இப்போது ஒரு சாதகமான சூழ்நிலை உருவாகி உள்ளது. அதாவது எங்கள் மக்களின் போராட்டத்தின் மீது அனுதாபம் கொண்ட அரசியல் இயக்கங்கள் இந்தியாவில் உள்ளன. இப்போது பதவியில் உள்ள அரசும் எங்கள் மக்கள் மீது அனுதாபம் கொண்ட அரசாங்கம்தான். எடுத்த எடுப்பிலேயே



சிங்கள அரசுகளை ஆதரிக்கிற நிலையில் இப்போது இந்தியா இல்லை.

ஆனால் எங்களின் போராட்டம் சம்பந்தமாக இந்தியாவுக்கு சில சந்தேகங்கள் உண்டு; அச்சங்களும் உள்ளன. இந்தச் சந்தேகங்களையும் அச்சங்களையும் போக்குவதற்கான முயற்சிகளில் நாங்கள் இப்போது ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம்.

புலிகள் இயக்கம் இந்திய அரசியலில் தலையிடுமா என்பது அந்தச் சந்தேகங்களில் ஒன்று. நாங்கள் இந்திய உள்நாட்டு அரசியலில் எந்தக் காரணத்துக்காகவும் தலையிடமாட்டோம். அதற்கான தேவையும் எங்களுக்கு இல்லை. மேலும் இந்தியாவின் தேசிய நலனுக்கோ, அதன் அரசியல் புவியியல் நலன்களுக்கோ மாறாக நாங்கள் ஒருநாளும் செயற்படப்போவதில்லை. இது விடுதலைப்புலிகள் தரும் உத்தரவாதம். எங்களுடைய இந்த நிலைப்பாட்டைத் தலைவர் பிரபாகரன் சார்பில் விளக்குமாறு எனக்குச் சொல்லப்பட்டுள்ளது.

அடுத்த சந்தேகம் தமிழ் தேசிய வாதம் பற்றியது. அதாவது தமிழ்நாட்டில் தமிழ்த் தேசிய வாதம் பரவி அங்கு ஒரு தனித் தமிழரசு உருவாகும் என்ற பயமே அதுவாகும். அதுவும் அர்த்தமற்ற ஒரு பயம்.

நாங்கள் தனி அரசு கோரி நடத்தும் போராட்டத்துக்கான புறநிலைகளைப் பார்ப்பது முக்கியம். எங்கள் மக்கள் பெரியதோர் இனக் கொலையை எதிர்கொண்டு நிற்கிறார்கள். ஒரு பெரிய கொடுமைவாய்ந்த இனவாத அரசு எங்களை ஒடுக்குவதற்கு கங்கணம் கட்டி நிற்கிறது. 50 ஆண்டுகாலமாக தமிழர்களாகிய நாங்கள்

( XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதீய ஜனதாவில் நெருக்கடி ஏற்படுத்திய கல்யாண்சிங் நீக்கம்!

உத்தரப்பிரதேச முன்னாள் முதல்வர் கல்யாண்சிங் பாரதீய ஜனதாக் கட்சியில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார். கட்சி விரோத நடவடிக்கைகளுக்காகவும் கட்சிக்கு அவப்பெயரை ஏற்படுத்தும்வகையில் நடந்துகொண்டதற்காகவும் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்புக்களில் இருந்தும் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். கடந்த செப்ரெம்பரில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலின் பின்னர் கட்சிக்குள் ஏற்பட்ட பெரிய நெருக்கடியாக இது கருதப்படுகிறது.

குற்றச்சாட்டுகளுக்கு ஏழு நாள்களுக்குள் பதில் தருமாறு கல்யாண்சிங் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். பாரதீய ஜனதாக் கட்சியின் அரசியல் குழுவின் அவசரக்கூட்டம் வாஜ்பாயின் இல்லத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டு கல்யாண்சிங்கிடம் விளக்கம் கோரப்பட்டது.


கல்யாண்சிங்

இதற்கு முதல் நாளான வெள்ளிக்கிழமை வாஜ்பாய்க்கு எதிராக கல்யாண்சிங் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்திருந்தார். கடந்த மக்களவைத் தேர்தலில் உத்தரப்பிரதேசத்தில் பாரதீயஜனதா தோல்வி அடைவதற்குக் காரணமாக இருந்தவர்களுக்கு மத்தியில் அமைச்சர் பதவி வழங்கப்பட்டிருப்பதாக அவர் குற்றஞ்சாட்டினார். விளக்கம் கேட்காமலேயே தம்மை முதல்வர் பதவியில் இருந்து நீக்கிவிட்டனர் என்றும் இதற்கு வாஜ்பாய்தான் காரணம் என்றும் அவர் கூறியிருந்தார்.

வாஜ்பாய்மீது அவர் தனிப்பட்ட முறையில் கண்டனம் தெரிவித்ததே அவர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டிய கட்டாயத்தை கட்சிக்கு ஏற்படுத்தியது. கடந்த சனிக்கிழமை வாஜ்பாயின் இல்லத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கட்சித்தலைவர் குஷபாவோ தாக்கரே மூத்த தலைவர்கள் அத்வானி, முரளி மனோகர்ஜோஷி, ஜனாகிருஷ்ணமூர்த்தி, உத்தரப்பிரதேச மாநிலத்தின் புதிய முதல்வர் ராம் பிரகாஷ் குப்தா, கட்சியின் மாநிலத் தலைவர் ராஜ்நாத்சிங் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

## கோஷ்டிச் சண்டை

உத்தரப்பிரதேச சட்டப்பேரவையில் கல்யாண்சிங்குக்கு எதிராக கோஷ்டிச் சண்டை தொடங்கியபோது, பாரதீய ஜனதா தலைமை ஆரம்பத்தில் அதனைப் பாரதூரமாகக் கருதவில்லை. வழமையான சண்டைதான் போகப்போக சரியாகிவிடும் என்று தப்புக்கணக்குப் போட்டுவிட்டது. சண்டை உச்சக் கட்டத்தில் இருந்த சமயம் மக்களவைத் தேர்தலும் வந்தது. இந்தச் சண்டைக்கான தண்டனையாக மக்களவைத் தேர்தல் முடிவு அமைந்தது.

உயர் சாதியினரின் கட்சி என்ற முத்திரை குத்தப்பட்ட பாரதீய ஜனதாவுக்கு பிற்பட்ட வகுப்பினரின் ஆதரவைப் பெற்றுத்தந்ததில் 'லோத்' என்ற பிற்பட்ட வகுப்பைச்சேர்ந்த கல்யாண்சிங்குக்கு முக்கியபங்கு உண்டு.


1998 மக்களவைத் தேர்தலில் உத்தரப்பிரதேசத்தில் பாரதீய ஜனதாக் கட்சி மாபெரும் வெற்றியீட்டியது. ஆனால் அதே கல்யாண்சிங் 1999 தேர்தல் தோல்விக்கு காரணமாகிவிட்டார். உட்கட்சிப் பூசலில் அவரது வகுப்புச் செல்வாக்குக் கூட அடிபட்டுப் போய்விட்டது.

கல்யாண்சிங் மீது நடவடிக்கை எடுக்காவிட்டால் கட்சியே பிளவுபடும் என்ற இக்கட்டான சூழ்நிலைக்கு பாரதீய ஜனதாத் தலைவர்கள் தள்ளப்பட்டனர். இத்தகைய சூழ்நிலையிலேயே கடந்த சனிக்கிழமை அரசியல் கட்சிக் கூட்டம் நடைபெற்றது.

சமாஜ்வாதிக் கட்சித் தலைவர் முலாயம்சிங்யாதவ் ஒரு பக்கம் ஊக்கம் அளித்துக்கொண்டிருக்க தலைமையுடன் இறுதிக்கட்ட மோதலுக்கு கல்யாண்சிங் தயாராகிக்கொண்டிருக்கிறார். வாஜ்பாய் பற்றி அவர் தெரிவித்த கருத்துக்கள் பாரதீயஜனதா தலைவர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. பாரதீயஜனதா கட்சியின் எதிர்காலம் பற்றி வாஜ்பாய்க்கு அக்கறை இல்லை என்றும் அயோத்திப் பிரச்சினையில் வாஜ்பாய் இராமனைக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டார் என்றும் கல்யாண்சிங் குற்றஞ்சாட்டி இருந்தார். "எனக்கு எதிரான சதி வாஜ்பாயின் உத்தரவின் பேரிலேயே நடைபெற்றது. காங்கிரஸ் பாதையிலே பாரதீய ஜனதாக்கட்சி தனிநபரை முன்னிலைப்படுத்துகிறது. இது காங்கிரஸ் கட்சியின் அழிவுக்கு வழிவகுத்ததை பாரதீய ஜனதா மறந்துவிடக்கூடாது" என்றும் கல்யாண்சிங் தெரிவித்திருந்தார்.

அத்துடன் மக்களவைத் தேர்தலில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் பாரதீய ஜனதாக் கட்சிக்கு ஏற்பட்ட தோல்விக்கு பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களை அவர் நேரடியாகக் கண்டித்து வந்தார். அயோத்தியில் இராமர்கோயில் கட்டுதல், காஷ்மீருக்கு விசேட அதிகாரங்களை வழங்கும் சரத்தை அரசமைப்பிலிருந்து நீக்குதல், சகல மக்களுக்கும் ஒரே சிவில் சட்டக்கோவையை நடைமுறைப்படுத்துதல் ஆகிய மூன்று பிரதான இந்துத்துவக் கொள்கைகளையும் கிடப்பில் போட்டதாலேயே உத்தரப்பிரதேசத்தில் தோல்வியேற்பட்டது என்று கல்யாண்சிங் பிரசாரம் செய்துவந்தார்.

கடந்த மக்களவைத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றவேண்டும் என்பதற்காகவே ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் சம்மதத்துடன் இந்த மூன்று கொள்கைகளும் பின்தள்ளப்பட்டன. மத்தியில் பாரதீய ஜனதாவின் பிடி மேலும் பலப்படவேண்டும் என்பதையே ஆர்.எஸ்.எஸ். விரும்புகிறது.




## கல்யாண்சிங் புதுக்கட்சி ஆரம்பிப்பாரா?

தற்பொழுது கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள கல்யாண்சிங் புதுக்

**உலக உலா**
**என்.பி.சீலன்**


கட்சி ஆரம்பிக்கலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கின்றன. குஜராத்தில் சங்கர்சிங் வகேலாதான் முதன்முதலாக பாரதீய ஜனதா தலைமைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியவர். அவர் தனிக்கட்சி ஆரம்பித்த போதிலும் அரசியலில் இருந்து அவரது கட்சி ஒதுக்கப்பட்டுவிட்டது.

ஆனால் உத்தரப்பிரதேசத்தில் நிலைமைவேறு. கல்யாண்சிங் தனிக்கட்சி தொடங்கினால் உத்தரப்பிரசேத்தில் பாரதீய ஜனதா மேலும் பலவீனப்படுத்தப்படும். மாயாவதியை ஓரம் கட்டிவிட்டு கூட்டணிக் கட்சியின் உதவியுடன் ஆட்சியை நிலைப்படுத்திக்கொண்ட கல்யாண்சிங் கூட்டணிக் கட்சிகளுக்கு அமைச்சர் பதவிகளை தாராளமாக வழங்கியது மூலம் தமது பதவியைத் தக்கவைத்துக்கொண்டிருந்தார். ஆனால் அந்தக் கூட்டணிக் கட்சிகள் கல்யாண்சிங்கை தற்பொழுது கைவிட்டுவிட்டன. புதிய முதலமைச்சர் ராம்பிரகாஷ் குப்தாவுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கிவருகின்றன. கல்யாண்சிங்கின் ஆதரவாளர்கள் வெளியேறும் பட்சத்தில் மாநில சட்டப்பேரவையில் பாரதீய ஜனதாக் ஆட்சி ஆட்டம் காணுமானால் பகுஜன் சமாஜ் கட்சியின் ஆதரவுடன் ஆட்சியை தக்கவைக்கும் சாத்தியக் கூறுகளை பாரதீய ஜனதாத் தலைவர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

1992 டிசெம்பர் 6ஆம் திகதி அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. பாபர் மசூதி இடிக்கப்பட்ட தினத்தில் அயோத்தியில் வழிபட்டுவிட்டு மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து தனது செல்வாக்கைப் பரீட்சித்துப்பார்க்க கல்யாண்சிங் திட்டமிட்டுவருகிறார். தற்போதைய நிலையில் அவர் தனித்து நின்றால் குஜராத்தில் தனிக்கட்சி ஆரம்பித்த வகேலாவுக்கு ஏற்பட்ட கதிதான் இவருக்கும் ஏற்படும். கட்சி அமைப்பு, ஆள்பலம் இல்லாது தாக்குப்பிடிப்பது சிரமம்.

சமாஜ்வாதித் தலைவர் முலாயம்சிங் யாதவ்வின் ஆதரவைப் பெறவேண்டுமானால் இராமர் கோஷத்தைக் காற்றில் பறக்கவிடவேண்டும். தன்னை மீறி எவரும் வளர்ந்துவிடக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருக்கும் முலாயம்சிங் யாதவ்வுடன் கூட்டுச் சேர்ந்தாலும் அது நிலைக்குமா என்பது சந்தேகமே.

முலாயம்சிங்யாதவ்வுடன் புதிய கூட்டு ஏற்படவும் உத்தரப்பிரதேசத்தில் ஆட்சி கவிழவும் கல்யாண்சிங் விவகாரம் வழிவகுக்குமானால் அது பாரதீய ஜனதாவுக்கு பெரிய தோல்வியாகவே இருக்கும்.




# இந்தோனேசியா சிதறுண்டு போகுமா?

### கிழக்குத் திமோருக்கு அடுத்தது ஆசே

கடந்த ஓகஸ்ட் மாதம் கிழக்குத் திமோரில் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பில் சுதந்திரத்திற்கு ஆதரவாக பெரும்பாலான மக்கள் வாக்களித்தனர். தற்பொழுது இந்தோனேசியாவின் மற்றொரு மாகாணம் சுதந்திரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. அதுதான் ஆசே(ACEH) மாகாணம் ஆகும். சுமாத்திராவின் வடபகுதியில் இது அமைந்துள்ளது. இதன் தலைநகரம் பண்டே ஆசே. இந்த மாகாணம் 40லட்சம் மக்களைக் கொண்டது.

1970களில் இருந்து இங்கு தனிநாட்டுப் போராட்டம் நடைபெற்றுவருகிறது. கடந்த ஓகஸ்ட் மாதம் கிழக்குத் திமோர் சுதந்திரத் தனிநாடு ஆன பின்னர் ஆசேயில் தனிநாட்டுக் கோரிக்கை வலுவடைந்தது. தற்பொழுது ஆசேயில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கு இந்தோனேசிய ஜனாதிபதி அப்துர் றஹ்மான் வாஹிட் இணக்கம் தெரிவித்துள்ளார். கிழக்குத் திமோர் விவகாரம் போன்று அல்லாது ஆசே விவகாரம் இந்தோனேசிய அரசுக்கு பெரும் தலையிடியைக் கொடுத்துவருகிறது. ஆசேயில் சர்வஜனவாக்கெடுப்பு நடத்தப்படுவது இந்தோனேசியாவின் அரசமைப்புக்கு முரணானது என்கிறார் இந்தோனேசியாவின் முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் விராண்டோ. கிழக்குத் திமோரில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களால் ஆசே தனிநாடாகும் நிலைமையை இராணுவம் அனுமதிக்குமா என்பது சந்தேகமே. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் ரஷ்யாவும் யூகோஸ்லாவியாவும் எப்படிச் சிதறுண்டுபோனதோ அதே நிலைமைதான் இந்தோனேசியாவுக்கும் ஏற்படலாம் என்று அரசியல் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

## ஏனைய மாகாணங்களும் பிரிவினை கோரலாம்

ஏற்கனவே இந்தோனேசியாவின் மற்றொரு மாகாணமான ஈரியன் ஜயாவில் பிரிவினைக் கோரிக்கை வலுத்து வருகின்றது. எண்ணெய் வளம் மிக்க மற்றொரு மாகாணமான ரியாவு, இந்தோனேசிய ஆட்சியாளர்கள் தனது வளங்களைச் சுரண்டி வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டுகிறது. இந்தோனேசிய அரசு ஒதுக்கும் நிதி அதிகரிக்கப்படவேண்டும் என்று அது கோரிக்கை விடுத்துவருகின்றது. இன்னொரு மாகாணமான மொலூக்காஸில் நடைபெறும் இனப் போராட்டம் எதிர்காலத்தில் மொலூக்காஸ் மாகாணமும் பிரிவினை கோரலாம் என்று அஞ்சப்படுகிறது.

## இந்தோனேசிய அரசின் சுரண்டல் கொள்கை

1940களின் இறுதியில் டச்சு ஆதிக்கத்தில் இருந்து இந்தோனேசியா விடுதலைபெற்றது. அன்றிலிருந்து இந்தோனேசியாவை ஆட்சிசெய்த சுகர்ணோவும் சுஹார்ட்டோவும் ஆசே மக்களுக்கு பல்வேறுவாக்குறுதிகளையும் அளித்து வந்தனர். எனினும் எதனையும் உருப்படியாக அவர்களினால் செயற்படுத்த முடியவில்லை.

ஆசேயில் பெறப்படும் இயற்கை வாயுவினால் இந்தோனேசிய அரசு வருடாந்தம் 400 கோடி டொலர் பணத்தை வருமானமாகப் பெறுகிறது. ஆனால் ஆசேக்கு இந்தோனேசிய அரசினால் ஒதுக்கப்படும் நிதி இதில் ஒரு சதவீதமும் இல்லை.

1970களில் ஆசேயில் பிரிவினைப் போராட்டம் அதிகரித்ததை அடுத்து சுஹார்ட்டோ அங்கு பெருமளவில் இராணுவத்தை அனுப்பிவைத்தார். அதன் பின்னரே ஆசேயின் இயற்கை வளங்கள் அதிகளவில் சுரண்டப்பட்டன.


**சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கு ஆதரவாக ஆசேயின் தலைநகர் பண்டா ஆசேயில் சுமார் 5லட்சம் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.**

"Free aceh guerrillas" என அழைக்கப்படும் ஆசே சுதந்திரப் போராளிகளின் போராட்டம் 1980களின் பிற்பகுதிகளில் அதிகரித்ததை அடுத்து 1989இல் இந்தோனேசிய அரசு அங்கு இராணுவச் சட்டத்தைப் பிரகடனம் செய்தது. அன்றில் இருந்து இந்தோனேசிய இராணுவம் ஆசேயில் படுகொலைகள், சித்திரவதைகளில் ஈடுபட்டுவந்தது. பெரும் அளவில் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பொதுமக்களைக் கொலைசெய்துவிட்டு அவர்களை போராளிகள் என்று இராணுவம் அறிவித்தது.

## சர்வஜன வாக்கெடுப்பு கேள்விக்குறி

தற்போதைய நிலைமையில் சர்வஜனவாக்கெடுப்பு கேள்விக் குறியாகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வஜன வாக்கெடுப்பில் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவு கிடைத்தாலும் உருப்படியான அரசியல் தலைமை எதுவும் இல்லாதது பெரும் குறையாக இருந்து வருகிறது.

ஆசே விடுதலைஇயக்கப் போராளிகள் மலைப் பகுதிகளில் மறைந்து வாழ்கின்றனர். அவர்களது வயது முதிர்ந்த தலைவரான ஹஸன்திரோ என்பவர் சுவீடனில் அஞ்ஞாதவாசம் செய்துவருகிறார். அவர் 16ஆம் நூற்றாண்டின் சுல்தான் ஆட்சியையே இன்னும் கனவுகண்டுகொண்டிருக்கிறார்.

மற்றும் மாணவர்கள், இயக்கங்கள், முஸ்லிம் மதத் தலைமைப்பீடங்கள் போராளிகளுடன் இணைப்பின்றி தனித்தனியாகவே செயற்பட்டு வருகின்றன. சுதந்திரம் கிடைத்தாலும் தலைமை இல்லாதது ஆசேக்கு பெரும் பிரச்சினையை உருவாக்கப்போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறை வாழ்வுக்கு வழிவகுக்கும்

# பொறுமை எனும் பெருங்குணம்

மண்ணில் மனுக்குலம் மாண்போடும், மதிப்போடும் வாழுதற்குரிய நற்பண்புகளில் 'பொறுமை' என்றும் பெருமை தரக்கூடியது. பொறையின் சிறப்பை பல நூல்களும், புராணங்களும், காப்பியங்களும், வரலாறுகளும் எடுத்தியம்புகின்றன.

"பொறையெனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்" எனக் கற்றறிந்தோர் ஏற்றும் கலித்தொகையின் கூற்றில் இருந்து - பண்புடைய நாளில் இருந்தே பொறுமையை, அதன் தேவையை வலியுறுத்தி வருவதில் இருந்து - பொறையின் பெருமையும் அதன் அவசியமும் புலனாகிறது.

தன்னைத் தூற்றுவாரையும் கூடப் பொறுத்துப் போற்றி மன்னிப்பதே சிறந்ததென கலித்தொகை மட்டுமல்ல தொன்மையான தொல்காப்பியமும் செப்பிநிற்கிறது. அரம் போலும் கூர்மை உடையோரேனும் உயர்பண்புகளைக்கைக் கொண்டேரே மேலோர் என்பதையும், மற்றையோர் ஓரறிவினதான புல்லையும் மரத்தையும் கிளையையும் போன்றவரே என்பதையும் ஆன்றோரால் அன்றே ஆக்கிய தொல்காப்பியம் "புல்லும் மரமும் ஓரறிவினவே பிறவும் உறவே அக்கிளைப் பிறப்பே" என்றும் பொறையெனும் குணத்தை கொண்டவரே நிறைமாந்தர் எனப் பகர்ந்து நிற்கிறது. தன்னை இழிவு செய்தாரையும், பழித்தாரையும் பொறுத்துக்கொள்வதானது தன்னைத் தோண்டுபவனையும் தாங்கிநிற்கும் நிலம் போலவும், தன்னைக் குறிவைத்து வெட்டிக் குறைத்தழிப்பவனுக்கும் வீழும்வரை நிழலைக் கொடுத்துதவும் மரம்போலவும் பொறுப்பதே தலையாயது என்பதனை

"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை" எனக் குறள் கூறுகிறது.

## அன்பு, பண்பு, பணிவு பொறுமையால் பிறக்கும்

பொறுமை ஊற்றெடுக்க அன்பு சுரக்கும். இவைகளோடிணைந்து பணிவு பிறக்கும். பொறையும் அன்பும் பணிவும் ஒருவர் வாழ்வினை மேம்படுத்தும் ஏணி போன்றவை. "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" என்பதற்கமைய பணியும் பண்பு எவ்விடத்தும் சிறந்த அணிகலனாய் ஏற்று நடக்கக்கூடியவை. பெண்களுக்கும் பெருமை தருவது பொறுமையே. இதுவே சிறந்த அணிகலன்.

பஞ்சமா பாதகங்களான கொலை, களவு, கள், காமம், சினம் என்பவை மனுக்குல நெறிக்கு ஒவ்வாதன. இவைகளை நீக்கி வாழுதல் அரிது. இவற்றைக் கைக்கொள்ளாது விடுதல் நன்மை பயக்கவல்லது. இவ்வுணர்வுகளைக் கைவிட்டு, பொறுமை பேணி, ஒழுக்கத்துடன் வாழ்ந்தால் விழுப்பம்தானே வரும்; மனிதமும் பிழைக்கும்.

குற்றம் சிறிதும் இல்லாது குணம் நிறைந்து வாழ்வானையே உலகம் போற்றும்; சுற்றமும் வலிந்து சேரும். இதையே வள்ளுவரும்

"குற்றமிலாக் குடிசெய்து வாழ்வானை
சுற்றமாய் சூழுமுலகு" எனக் கூறுகின்றார்.

குணம் எனும் குன்றேறி வாழ்வோர் - மன்னிக்கத் தெரிந்த உள்ளம் கொண்டோர் - மனிதருள் மாணிக்கமாய் வையகத்தில் வளமோடு வாழ்வார் என்பதில் ஐயமில்லை. ஒருவருக்கு பெருந்துன்பம் செய்பவருக்கு எண்ணியதை நிறைவேற்றி தாம் நினைத்ததை அடைந்ததிருப்தி, அதனால் கிடைக்கக்கூடிய சந்தோஷம், அந்தக்கணம் - அந்த நாள் - மட்டுமே கிடைக்கும். ஆனால் பொறுத்துக் கொண்டார்க்கோ வாழ்வோடு இணைந்து தொடர்ந்து இன்பமே கிடைக்கும்; பெருமையும் கீர்த்தியும் கிட்டும். பொறையின் இச்சிறப்பை

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம், பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ்" எனத் தெளிவாகத் தெரிவிக்கிறது தெள்ளு தமிழ். "பொறுத்தார் புவியாள்வார், பொங்கினார் காடுறைவார்" என்றும் இன்னும் விரிந்துரைப்பர்.

## தருமரின் பொறுமை

துரியோதனன் பாண்டவர்களுக்குச் செய்த கொடுமை அளப்பரியது. கேடுகள் பலவும் செய்த வேளைகளில் எல்லாம் பொங்கி எழுந்த தம்பியரை "பொறுதி" எனப் பணித்து தருமர் நின்ற போது, வியந்து

"அரவுயர்த்தோன் கொடுமையிலும், முரசுயர்த்தோய் நின் அருளுக்கு அஞ்சினேன்" என வெஞ்சினம்கொண்டு வெகுண்டெழுந்த வீமன் அண்ணனுக்குப் பணிகிறான்.

**கந்த தியாகராசா**

அழுக்காறு, அவா, வெகுளி குடிகொண்ட பாம்புக்கொடியன் பாழானதும் -


பணிவும், பொறையும், அன்பும் கொண்ட பாண்டவர் வாகை சூடியதும் -

"அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றமாம்" என்றோதுவது பொய்யில்லை என்பது தெளிவு.

## பரதனின் பண்பொழுக்கம்

முடி துறந்து, நாடு துறந்து, சுற்றம் துறந்து, காடேகிய இராமன் கீர்த்தியை அறிந்த குகன் பணிந்து அளவற்ற அன்பு கொண்டுற்ற வேளையில் சுற்றம்சூழ குற்றமற்ற நெஞ்சினனாய், பொறையின் இருப்பிடமாய், பணிவின் உறைவிடமாய், பாசம் பொழியப் பரதன் தன் அண்ணன் இராமனின் இடம் நாடிச்செல்கிறான். தூரத்தே வரும் பரதனையும் கூட்டத்தையும் கண்ட குகன் குணம் மாறுகிறது. பொறுமை இழந்து, சினம் பொங்குகிறது. வரிசிலையெடுத்து அம்பு தொடுக்கத் தயாராகிறான். பரதன் அண்மித்து வரவர சினம் தணிகிறது; மெய்சிலிர்க்கிறது; கை சோருகிறது; உள்ளம் தவிக்கிறது.

பரதனின் தவக்கோலம் கண்டு நிலை குலைந்து வெதும்பி உள்ளம் கலங்கித் தன் அறியாமையை எண்ணி வருந்தி "ஆயிரம் இராமர் நின்கேள் ஆவரோ தெரியிலம்மா" எனத் தொழுது நிற்கிறான். பரதனின் பண்பொழுக்கமும், பொறையின் நிறைவும், அன்பின் ஆழமும் தெளிவாகிறது. ஆயிரம் இராமன் கூட பரதனின் பண்புக்கு ஒப்பில்லை என வேடுவத்தலைவன் வியக்கிறான்!



## இராமனின் கீர்த்தி

வரையெடுத்த வைர நெஞ்சன், கரையிலா வரம் பெற்றவன், கொற்றக் கொடியன், கோவேந்தன் கோபமிகுதியால் கொற்றமும் சுற்றமும் இழப்பதற்கு ஆணவமும்,அதனோடிணைந்த காம இச்சையும் காரணம் என்பதை எவரும் அறிவர். மனைவியைக் களவாடியதும் அல்லாது சிறையிலடைத்து சிறுமைசெய்தவனும் போர்தொடுத்து பெருங்கொடுமை செய்தவனுமாகிய இராவணன், தன் கண்ணெதிரே கையெல்லாம் வலி ஓய்ந்து, மெய்யெல்லாம் சோர்ந்து, முடியும், கொடியும், படையும், செருக்கும் இழந்து நிராயுதபாணியனாய் நிலமகளைப் பார்த்தவாறு நின்றபோதும்- பொறை நிறைப் பெற்றியனாய், பகைவனுக்கு அருளும் பண்புடைத் தெய்வமாய், மரபின் வழி நின்றொழுகி கொல்லாது விடுத்து "இன்று போய் நாளை வா" என்று நன்றுரைத்த இராமனின் கீர்த்தியை புகழாத நெஞ்சில்லை. இங்கு இராமன் காட்டிய பொறுமை மலையிலும் பெரிதே.

நேசக்கரத்தை நிராகரித்து, தூது சென்றானைப் பரிகசித்து, சூரன்கொண்ட கோபம் தணிந்தானில்லை; தாள் பணிந்தானில்லை. அழுக்காறை அடிபற்றி பொறுமை இழந்த கொடியோன் துய்யதோர் மறைகளாலும் துதித்திடற்கரிய செவ்வேள் முன் ஞானம பெற்று, ஞாலம போற்ற வாழுதல் விடுத்து சமராடத் துணிந்தான். ஈற்றில் சூர்க்குலம் வேரறக் களையப்பட்டழிந்தது புராணம் காட்டும் உயர் நெறியாகும்.

## இயேசுவின் கருணை

இயேசுவின் பெருமையை கண்டு பொறாமை கொண்ட யூதர்கள் பொறுத்திலர். தேவகுமாரனை சிறுமையாக்க எண்ணி முள்முடி சூட்டினர்; கசையால் அடித்து வதைத்தனர்; பாரமிகு சிலுவையைச் சுமக்கச்செய்தனர். இறுதியாகத் நெற்றியிலும், கைகளிலும், பொற்பாதங்களிலும், மார்பிலும் கூராணிகொண்டு அறைந்தனர். கல்வாரியில் குருதி கொட்டிய போதும் மறைஞானி அவ்வேளையிலும் பரிந்து எந்தாய்

"இன்னதெனலறிகிலார் தாஞ் செய்வதிவர் பிழையை மன்னியுமென்றெழிற் கனிவாய் மலர்ந்தார் நம்மருள் வள்ளல்" கனிவோடும், கருணையோடும் வேண்டிக் கொண்ட மனுக்குலத்தின் மாணிக்கத்தை இந்த மாநிலம் மறக்குமோ? பொறுமையின் திருவுருவை, திவ்வியனை தெய்வமாக உலகம் வழிபடுகிறது. இதை மேம்படுத்த "தன்னுயிர் போலவே தனக்கழி வெண்ணும் பிறனுயிர் தன்னையும் கனித்தல் மன்னுயிரெல்லாம் கடவுள் வடிவாம்" என பாரதியும் வியந்துரைக்கின்றார். பிறவுயிர்கள் மீது செலுத்தும் அன்பும், மற்றவர் செய்யும் துன்பத்தை பொறுப்பதும் சிறப்புத்தரும் ஏன்பது புலனாகிறது.

## அப்பரின் பணிவு

ஆசை, கோபம், களவு கொண்டவன் பேசத் தெரிந்த மிருகம் என்றும், அன்பு, பண்பு,கருணை கொண்டவர் மனித வடிவில் தெய்வம் என்றும் மறைநூல்கள் தெரிவிக்கின்றன.

வயதில், அறிவில், உயர் ஞானவொடுக்கத்தில் கூடிய அப்பர் பெருமான் பொறுமையோடும், பாசத்தோடும் ஞானக்குழந்தையான சம்பந்தப் பெருமானை சிவிகையில் சுமக்கிறார். அவரைக் காணும் பேரவாவினால் "அப்பரே எங்குற்றீர்?" எனத் தேட "அடியேன் இங்குற்றேன்" என் இனிமை பொங்க விடைபகருகிறார் அப்பரடிகள். என்னே அப்பரின் பணிவு! என்னே அவரின் ஞான முதிர்ச்சி!

## சீர்தரும் சிலப்பதிகாரத்தில் பொறையின் சிறப்பு

ஆய்ந்தறிய அறிவு மங்கியது; சினம் தீ வேந்தனாக்கியது; பொறை மறைந்தது; பண்பு கெட்டது; நீதியும் செத்தது. கோவலன் கொலை செய்யப்பட்டான். நீதி விழித்து கொழுந்து விட்டெரிந்தது; கொற்றவன் துடித்தான். "யானோ அரசன்? யானே கள்வன்! மன்பதை காக்கும் தென் புலம் காவல் என் முதற் பிழைத்தது கெடுக வென் ஆயுள்" என அக்கணமே உயிர் துறந்தான் என சீர்தரும் சிலப்பதிகாரம் பொறைக்குச் சிறப்பு தருகின்றது.

## புராணம் போற்றும் பொறுமை

கொற்றவனைக் கொல்லும் வழி கண்டிலன். கபட வழியை நாடி துறவு வேடதாரியாய் அரண்மனை தேடி உட்புகுந்து, மன்னன் முன் நடித்து உபசார வார்த்தை பேசி, குறுவாள் கொண்டு குத்தினான். குருதி சிந்தக் குற்றுயிராய்க் கிடந்த போதும் "இவர் நமர், இடையூறு ஏதுமின்றி எம் எல்லைக்கப்பால் விடுதி" என்று இன்னுரை பகர்ந்து கொடியவன் செய்த கொடுமையையும் மன்னித்தருளிய மன்னவன் இறையடி சேர்ந்தானெனப் புராணம் போற்றுகிறது.

## நாண நன்னயம் செய்தல்

எவ்வளவு துன்பத்தையும் செய்து அதில் நிறைவைக்காண விளையும் ஒருவனுக்குக் கொடுக்கக்கூடிய அதிஉச்ச தண்டனையாக அவன் சிந்தித்து, சிந்தித்து நாளும் பொழுதும் வெட்கப்பட்டு, தன் செயலுக்குத்தானே வருந்தும்படியாக அவனுக்கு நன்மைசெய்து விடுவதே மேல் என்பதை "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்" என வள்ளுவர் கூறிப் போந்தார்.

பொறுமைக்கு பூமியைச் சொல்வர் பெரியர். அத்தகைய பூமியைக் காட்டிலும் பொறுமையோடு வாழ்ந்து பெருமையோடு மறைந்தவரே காந்தி அடிகள். ஏகாதிபத்திய வெறிகொண்ட அந்நியன் அவர் மீது திணித்த குற்றங்கள், கூறிவைத்த குறைகள் ஏராளம். ஏளனம் பேசி சிறைப்படுத்தியபோதும், நெஞ்சுக்கு சீறிப்பாயும் குண்டுகளைக் காட்டிப் பயமூட்டியபோதும், சினம் கொண்டாரில்லை; அந்நியனுக்கு அடிபணிந்தாரில்லை. மாறாக அன்புக்கும், பண்புக்கும், ஒழுக்கத்துக்கும், நேர்மைக்கும், கைக்கொண்ட கொள்கைக்கும் பணிந்தாரே ஒழிய 'ஆறுவது சினம்' என்பதற்கொப்ப எல்லாவற்றையும் சகித்துக் கொண்டார்; பொறுத்துக்கொண்டார். வெறுத் தொதுக்கிய வெள்ளையனே மலைத்தான். மலையிலும் வைர நெஞ்சுரம் கண்டு கரமொட்டித் தொழும் அளவுக்கு பொறுமை அவருக்கு கை கொடுத்தது. அவரின் நிலைகண்டு வெள்ளையனே தடுமாறினான். அந்த அளவுக்கு அந்நியன்வர அவர் தோள்கள் தினவெடுக்கவில்லை; கை வாளேந்தவில்லை; படைக் கலன்களோடு சேனை திரட்டவில்லை. சத்தியம் உறுதுணையாக, இலட்சோப இலட்ச மக்கள் அவர் பின்னே திரண்டனர். நிராயுதபாணிகளாய் அவர்கள் நின்றதைக் கண்ட அந்நியன் அஞ்சினான். அடுக்கடுக்காக சுடும் பலவினைகளை விளைத்த போதும் அவரின் அன்புக்கும், பண்புக்கும், பணிவுக்கும், பொறுமைக்கும் ஈற்றில் அடிபணிந்தான். வெள்ளையன்னை வெட்கித் தலைகுனியும்படி செய்துவிட்ட அந்தப்பெருமகனார் கொலை வெறியனால் சுட்டுக்கொல்லப்பட்டபோது இறக்கும் தறுவாயில் "செய்வதின்ன தென்று அறியாது செய்தவன் பிழையைப் பொறுப்பது கடனே" என மன்னித்தருளிய மகாத்மா இராம நாமம் பாடி உயிர் துறந்தபோது இந்தியா மட்டுமல்ல முழு உலகுமே அழுதது. குணம் என்னும் குன்றேறி குவலயத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த பெரியாரின் வாழ்வும் வரலாறும் ஏற்றிப் போற்றத்தக்கது. வழி கொள்ளத்தக்கது.

வைதாரையும் வாழவைக்கும் மனப்பாங்கும், மன்னித்து வாழும் பக்குவமும், பணிவும் உடைய பண்பாளர் வாழ்வில் உயர்வர் என்பது திண்ணம்.

*

# விவேகானந்தர் வழங்கிய மன அமைதி

அப்போது சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவை சேர்ந்த வடக்கு கலிபோர்னியாவில் தங்கியிருந்தார். அவர் அப்போதெல்லாம் வாரத்திற்கு 10 முதல் 12 வரை ஆன்மீகச் சொற்பொழிவுகள் செய்யவேண்டியிருந்தது. அவை தவிர வேதாந்தம் கற்கும் அமெரிக்க அன்பர்களுக்கு அவர் தனியாக வகுப்புகளும் நடத்திவந்தார்.

அன்பர்கள் சிலர் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு அடிக்கடி சுவாமிஜியை சந்தித்துப் பேசுவது உண்டு.

தோமஸ் ஆலன் என்பவர் தமது மனைவியான எடித் ஆலன் சுவாமிஜியிடம் ஆசிகள் பெறவேண்டும் என்று விரும்பினார். அதை அவர் சுவாமிஜியிடமும் தெரிவித்தார். அந்தச் சமயத்தில் ஆலன் அம்மையார் உடல், மன நோய்களினால் பெரிதும் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார். தவறான மனநல மருத்துவச் சிகிச்சை பெற்றதால் அவரது நரம்புகள் வலுவிழந்திருந்தன. அதோடு அற்புதங்கள், மாயாஜாலம் செய்பவர்களின் பிடியிலும் அவர் சிக்கியிருந்தார்.

முப்பந்தைந்து வயதே நிரம்பியிருந்த ஆலன் அம்மையார் சொல்ல முடியாத மன உளைச்சலால் துடித்துக்கொண்டிருந்தார்.

மன உளைச்சல் அவரது உடலையும் மிகவும் பாதித்திருந்தது. ஆலன் அம்மையார் சுவாமிஜியைச் சென்று சந்தித்தார்.

அவரைப்பார்த்ததுமே, 'இந்த அம்மையாருக்கு உடனடியாக உதவி தேவை!' என்பதை சுவாமிஜி புரிந்துகொண்டார்.

அதனால் அவர், நாளை காலை என்னை வந்து சந்தியுங்கள்" என்று அந்த அம்மையாரிடம் கூறினார். அன்றிரவு எடித் ஆலனுக்கு உறக்கமே வரவில்லை.

'சுவாமிஜியை பார்க்கப் போகும்போது அவரிடம் என்ன பேசுவது?' என்ற எண்ணம் அவரைத் தூங்கவிடவில்லை. எத்தனையோ மாதங்களாக அவரது உள்ளத்தில் பல கேள்விகள் குடைந்து கொண்டிருந்தன. அந்தக்கேள்விகளுக்குப் பதில் சொல்லக் கூடிய சரியான நபர் வாய்க்காததால், அந்தக் கேள்விகளுக்கு அவருக்கு பதில் கிடைக்காமலேயே இருந்தது. மறுநாள் சுவாமிஜி குறிப்பிட்ட நேரத்தில் ஆலன் அம்மையார் டர்க் தெருவில் இருந்த சுவாமிஜி தங்கியிருந்த வீட்டிற்குச் சென்றார்.

வீட்டுக் கதவைத் தட்டி, அது திறந்ததும் "சுவாமிஜியை நான் பார்க்கவிரும்புகிறேன்" என்றார்.

வீட்டிலிருந்த மற்றோர் ஆங்கிலப் பெண்மணி அம்மையாரிடம், "சுவாமிஜி வெளியே செல்ல இருக்கிறார். ஆதலால் அவர் இப்போது யாரையும் சந்திக்கமுடியாது என்று நினைக்கிறேன்" என்று தெரிவித்தார்.

ஆலன் அம்மையார் சுவாமி மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார்.

அதனால் அவர் அந்தப் பெண்மணியிடம் "சுவாமிஜி என்னை நிச்சயம் பார்ப்பார் என்னை அவர்தான் இப்போது வரச்சொன்னார்" என்று அழுத்தமாகக் கூறினார். அந்தப் பெண்மணி ஆலன் அம்மையாரை உள்ளே அழைத்துச் சென்று அமரவைத்தார்.

சிறிது நேரத்திற்குள் வரவேற்பறைக்கு வந்த சுவாமிஜி, ஆலன் அம்மையார் முன் அமர்ந்தார். சுவாமிஜி ஒன்றும் பேசவில்லை. மாறாக அவர் ஆலன் அம்மையாரைப் பார்த்து ஏதோ மந்திரத்தை அமைதியாக உச்சரிக்க ஆரம்பித்தார். அந்த மந்திர உச்சரிப்பு ஆலன் அம்மையாரின் இதயத்தைத் தொட்டு அவரை அமைதிப்படுத்தியது

சில வினாடிகளுக்குப் பிறகு சுவாமிஜி, "நல்லது அம்மா" என்று மட்டும் கூறினார்.

உடனே ஆலன் அம்மையாரின் உணர்வுகளில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. அதைப் பற்றி அவர் பிற்காலத்தில், "சுவாமிஜியின் முன்பு என்னால் ஒன்றுமே பேசமுடியவில்லை. மடை திறந்த வெள்ளம்போல் என்னிடமிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து வழிந்தது" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சுவாமிஜி, ஆலன் அம்மையார் அழுவதைத் தடைசெய்யவில்லை. சுமார் அரைமணிநேரம் ஆலன் அம்மையார் அழுது தீர்த்தார். அதன் மூலம் அவரது இதய வேதனைகள் குறைந்தன.

ஆலன் அம்மையார் அழுவதை நிறுத்தியதும் சுவாமிஜி, "நாளையும் இதே நேரத்தில் இங்கு வாருங்கள்" என்று கூறி அவரை வழியனுப்பினார்.

அதைத்தொடர்ந்து ஆலன் அம்மையாரின் வாழ்க்கை அமைதியும் ஆனந்தமும் கொண்ட வாழ்க்கையாக அமைந்தது.

அவர், "சுவாமிஜியைச் சந்தித்து விட்டு நான் வெளியே வந்ததும், என் பிரச்சினையெல்லாம் தீரக்கண்டேன், நான் அவரிடம் கேட்காமலேயே என் கேள்விகளுக்கு எனக்குப் பதில்கள் கிடைத்தன. வீடு திரும்பும்போது சாதாரண கூழாங்கற்கள் கூட எனக்கு ரத்தினக்கற்கள் போல் தெரிந்தன" என்று பிற்காலத்தில் குறிப்பிட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முச்சந்தி முடிவு

"தம்பி இரண்டு வடையும் ரீயும்"

சொல்லிவிட்டு, அந்தச் சிறிய தேநீர்க்கடையை நோட்டமிடுகின்றேன். மிகப்பழைய அந்தக்கடை, முயற்சியின் உயிரோட்டமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. வியாபாரம் அமோகமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. திருவிழாக்காலம். இருப்பதற்கு இடம் போதாமல் முண்டியடித்து தேநீர் குடிப்பதில் ஒரு சுகம் போலக்கருதி மக்கள் அடிக்கடி வந்து போனார்கள். அந்த சுற்றுவட்டாரத்தில் வேறு தேநீர்க் கடைகள் இல்லாததும் ஒரு காரணம் என்றே சொல்லிக்கொள்ளலாம். இந்தக் கடையில் இருந்து சுமார் நூறு யார் தூரத்து நடவடிக்கைகளை மிகத் துல்லியமாக அவதானிக்கமுடியும். மூன்று பிரதான தார்வீதிகள் வந்து சந்தித்துக்கொள்ளும் ஒரு பரபரப்பு மிக்க சந்தியாக இருக்கிறது. குறுகிய சிறிய லேன்கள் இரண்டு எதிரெதிராக அமைந்திருந்தன. ஐந்து சந்திகள் வந்து கலந்துகொண்டாலும் அதனை முச்சந்தி என்று பெருமைகொள்வது தான் பொருத்தமாகப்படும். சந்தியில் பழங்காலத்துப் பாரதியார் சிலை ஒன்று உயரமாக இருந்தது. என்னுடைய அயல்பிரதேசம் என்றாலும் இதுவரை காலமும் அந்த பாரதியின் சிலை வடித்த முகத்தைப் பார்த்தது கிடையாது. சிலையை எதிர்த்தாற்போல சீலனுடைய பலசரக்குக்கடை. மிக அமோகமாக வியாபாரம் நடந்தகொண்டிருக்கும். கடையை அண்டி காவலரண். வரும்போது இறங்கவேண்டும். போகும்போது ஏறிப்போகலாம். எல்லாளன் சமாதிக்கு மரியாதை செலுத்துவதுபோல் இது இன்றைய தமிழனுக்கு சகஜமாகிப் போய்விட்ட ஒன்று. இதே சாட்டில் பாரதியாருக்கும் நிறைய மரியாதை கிடைத்திருக்கிறது.

வேலைக்காரப் பெடியன் வைத்த வடையை எடுத்து மெதுவாக உண்ணத் தொடங்கியபடி தெருவை வெறிக்கின்றேன். காலைத்திருவிழாவுக்கு எறும்புக்கூட்டம் மாதிரி சனவெள்ளம் திரண்டு கொண்டிருக்க அருமையாக இருந்தது. கலாசார உடைகளும் மங்கலமான கோலத்தோடு பெண்கள் கூட்டமும் அடுக்கடுக்காக அலை மோதிக்கொண்டிருந்தன. சின்னப் பெண் வித்யாவோடு அவளது நண்பி வதனியும் என்னுடைய மனுசியும் போவது மிகத்துல்லியமாகத் தெரிகிறது. எவளுக்குப் பயந்து, ஒளித்து வந்து வடைக்காகவும் தேநீருக்காகவும் உட்கார்ந்திருக்கிறேனோ அவளைக் கண்டதும் ஒரு திடீர்ப்பயம்.

"என்னப்பா வீட்டில இவ்வளவு சாப்பாடு கிடக்க, கடையிலயே தேத்தண்ணி குடிக்கவேணும்?"

சொல்லிவிட்டு ஒருமுறைப்போடு போகிறாள். மனுசிக்குத்தெரியும் எனது பொழுதுபோக்கே இந்த முச்சந்தியும் தேத்தண்ணிக்கடையும்தான் என்று. செல்லமாக அவள் சொன்ன வார்த்தைகளில் மயங்கியிருந்த நான்,"ஐயா ரீ ஆறுது" என்ற பெடியனின் குரலில் நனவுக்கு வருகிறேன்.

இத்தனை வருடகாலத்தில் நாம் இருவரும் எதற்கும் கோபித்தது கிடையாது. உண்மையில் மனுசி தங்கம் தான்.

தேநீரை ரசித்தபடி மீண்டும் தெருவுக்குள் பார்வை விழுகிறது. 'வாசு மாதிரியெல்லோ கிடக்கு...'

மிக வேகமாக யோசிக்கின்றேன். வாசு நல்ல உயரமான பெடியன். திடகாத்திரமான உடம்பு. அவன் பிறந்ததிலிருந்து தன் வீட்டில் இருந்ததை விட என்னோடுதான் அதிகம் இருந்திருக்கிறான். அவனைத் தெரியாதா எனக்கு? மூளைக்கு மறுப்புத் தெரிவித்துவிட்டு அடுத்த வடையை எடுத்துக் கொள்கிறேன்.

"தம்பி ஒரு ரீ..."

வாசுவேதான். அவனேதான். எனது கணிப்புத் தவறவில்லை. ஆனால் மெலிந்து கறுத்து வித்தியாசமாக இருக்கிறான்.

"சின்னப்பு நீங்களா?" அவனது தொனி வித்தியாசமாக இருந்தது. எப்படி இருந்தாலும் அவன் நான் வளர்த்த பிள்ளை. பெற்ற பிள்ளை இல்லாவிட்



டாலும் பெற்றபிள்ளை மாதிரி. என்னோடு மிக அன்பாக இருந்த பெடியன் அவன். மனிசி கண்டாள் மிகவும் பிரியமாக இருப்பாள். பொதுவாக வாசு என்றால் எல்லோருக்கும் பிடிக்கும். அவனது வாட்டசாட்டமான உடலில் மட்டுமல்ல களங்கமில்லாத அவனது உள்ளத்தில்தான் எனக்குக் கொள்ளை உயிர்.

"வாசு நீயேன்ரா இங்க வந்தனி?"

"ஒரு வேலை சின்னப்பு..."

"கொம்மா, கொப்பரெல்லாம்...?"

"வவுனிக்குளத்தில..."

"வதனி எங்களோடதான் இருக்கிறாள்"

திடீரென்று அவனது கண்ணில் மின்னல் பளிச்சிட்டது. இளமையில் பொதுவாக எல்லோருக்கும் தோன்றும் அந்தக் கவர்ச்சியென்றுதான் நினைக்கத் தோன்றியது. ஆனால் திடீரென்று மறைந்துபோய் சின்னதாய்ச் சிரித்தான்.

"போகேக்க வாறன் சின்னப்பு... பின்னேரம் நேரமிருக்கும் வாறன்"

அவனைக் கட்டியணைத்துக் கதறியழவேண்டும்போல இருக்கிறது. ஒன்றா? இரண்டா? பத்துவருடங்களாக அவனோடு இருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டு - அவனுடன் எமக்கான உரிமை இல்லாமல்போய் நான்கு வருடங்களுக்குப் பின்னர் - காணக்கிடைத்திருக்கும் அவனைவிட மனது வரவில்லை. கையில் இருந்த பாதி வடையை ஊட்டிவிட்டேன். திக்குமுக்காடிப்போனான்.

"டேய் நீ ஒரு கதையும் எனக்குச் சொல்லவேண்டாம். இப்பவே என்னோட வா!"

ஒரு கையால் தனது கையை விலத்திவிட்டான். கதைக்க வடை விடவில்லை. கையை ஆட்டிப்பிறகு வருவதாக சைகை செய்தான்.

"ஓமடா பெடியா தேத்தண்ணியை குடி"

காற்சட்டைப் பொக்கட் என் கண்ணுக்குள் அகப்பட்டது.

"என்னடா?" என்றேன்.

"காசு"

"ஏன்?"

"குடுக்கோணும்".

நெஞ்சு திடீரென்று அடித்துக் கொண்ட மாதிரி இருந்தது. இவனைப் பார்க்காமலே வீட்டிருக்கலாம் போல இருந்தது. எவ்வளவு சோதனையான காலம்? இவனை வரச்சொல்லியாயிற்று. எவ்வளவு துணிச்சல்? பாசம் திடீரென்று அழைப்பு விடுத்தது. பயம் திடீரென்று முணுமுணுப்புச் செய்தது.

"சின்னப்பு வாறன்" என கரத்தை மிக அழுத்தமாய்ப் பற்றி விடை பெற்றுக்கொண்டபோது முரட்டுக்கரம் என்னவொ செய்தது. எதையோ வற்புறுத்தியது... சுயநினைவுக்குவர சில நொடிகள் தேவைப்பட்டன. சனக்கூட்டத்தில் எங்களை எவரும் பார்த்ததாகத் தெரியவில்லை. சாதாரண வாசு என்று நினைத்தது சில நிமிட நேரத்திற்கு மூளையை உறையச்செய்தது.

'இவன் ஏன் இஞ்ச வந்தவன்?' எனக்கு நானே கேட்டுக்கொண்ட கேள்வி இது.

'முருகா ஏனப்பனே இந்தச் சோதனை?'

பெரிய தம்பியோடு எனக்கான உறவு முப்பது வருடங்களுக்கு மேல். தோட்டக்காணியில் மிளகாய்க் கணக்குக்கு மருந்தடிப்பதிலிருந்து செத்தல் காயப்போடுவதுவரை இருவரும் இணைபிரியா நண்பர்கள். இரத்தத் தொடர்பு இல்லாவிட்டாலும் சகோதரங்கள் போலவே மிகப் பிரியமாக நடந்து கொண்டோம். வாசு பிறந்தபோது மகிழ்வடைந்ததில் என்னுடைய மனிசி தான் அதிகம் என்று கூடச் சொல்லலாம். எட்டு வருடமாகப் பிள்ளையில்லாமல் நான் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தபோதுதான் பெரிய தம்பிக்கு வாசு பிறந்தான். அவனை எங்களுடைய பிள்ளை போலவே வளர்த்த அந்த நாட்களை சிறிதேனும் மறக்க முடியாது. அடுத்த வருடம் வித்யா பிறந்ததும் வாசுவின் ராசி என்று அவனைத் தூக்கித் தோளில் வைத்து மனிசி கொண்டாடியது இண்டைக்கும் படம்போல மனதில் நிற்கிறது. பெரிய தம்பியின் சின்னத்தங்கை இளமையிலேயே கணவனை இழந்தவள். அவளின் மகள் வதனிக்கு வாசு என்று பெரியதம்பி மிக ஆணித்தரமாக குறித்து வைத்திருந்தான். வதனிக்கு வாசு என்றால் கொள்ளை உயிர்.

"ஒண்டுமில்லாத குடும்பத்துக்க போய் நீங்களும் கஷ்டப்படப்போறியளோ?"

ஒவ்வொருத்தர் ஒவ்வொரு விதமாகப் பேசிக்கொண்டனர். வதனியின் வடிவில் பலபேருக்கு கண் இருந்தாலும் ஏழ்மை என்ற தடை எவரையும் உள்ளே போகவிடவில்லை. வாசு தந்தையின் சொல்லுக்கு எப்போதும் மறுப்புத் தெரிவித்தவனில்லை.

"என்னட்ட இருக்கிற நிலம் முழுக்க வாசுவுக்குத்தானே போய்ச்சேரும். அவனோட போட்டிபோட சகோதரங்களும் இல்லை. வாசு இரண்டு குடும்பத்தையும் கண்ணாய் பாப்பான் எண்ட நம்பிக்கை இருக்கு. அதோட தங்கச்சி வேற குடும்பத்தோட சம்பந்தம் வைச்சு கரைச்சல் படுகிறது நான் விரும்பேல்ல"

பெரியதம்பி மிகவும் தங்கமான மனிதன். அரசாங்க உத்தியோகத்தோடு சிறு தொழிலாகத்தான் நான் தோட்ட வேலை செய்துகொண்டேன். ஆனால் பெரியதம்பிக்கு முழு வருமானமும் தோட்டவேலையில்தான் தங்கியிருந்தது. கடின உழைப்பாளிக்கு அவர் ஒரு நல்ல உதாரணம். மனதும் பளுப்பு. மகனும் அவரைப் போலவே சிறிய வயதிலிருந்து 'சின்னப்பு' என்று என் காலைச் சுற்றிக்கொண்டு நிற்பான்.

வவுனிக்குளத்தில் பெரிதாக அங்கே வருமானம் எதுவும் கிடைக்காது என்றே தோன்றியது. ஒட்டிசுட்டானில் இருக்கும்போது மருமகளுக்குக் கடிதம் எழுதும்போது எனக்கும் நீளநீளமாக பாசத்தைக் கொட்டி வரைந்திருக்கும் கடிதத்தைப் பார்த்து அழுதுவிடுவேன். மாதத்திற்கு இருமுறைஇடம்பெயர்வு என்று எழுதியிருந்த ஞாபகம்.

'வாசு போகேக்க கொஞ்சக் காசு குடுத்துவிடவேணும்'

பெரியதம்பி என் உயிருக்குச் சமம். அவர் யாழ்ப்பாணத்திற்கு வர முடியாமல் வன்னிக்குப் போனபோது அழுதழுதுபிரியாவிடை வைத்து பெரிய ஒப்பாரி எல்லாம் செய்தோம்.

எனக்குப் பெடியன் இல்லாத குறையைத் தீர்பதற்கு பிறந்தவனென்றுதான் வாசுவை நினைத்துக்கொண்டிருக்கின்றேன். அவனது மெலிந்த தோற்றம் நெஞ்சுக்குள் வலியை ஏற்படுத்த நீளமாக இருந்த 'பெஞ்சின்' மீது சாய்ந்து விட்டேன்.

"என்னய்யா என்ன செய்யுது?"

வேலைக்காரப் பெடியன் தண்ணீர் தெளித்து சிறிது நேரம் அமர்க்களப் படுத்திவிட்டான். என் மனதுக்குள் ஏற்பட்டவலி பற்றி ஒன்றும் தெரியாமல் அவர்கள் வெறுமனே பேசிக்கொண்டார்கள். எழுந்து உட்கார்ந்து கொண்டேன். தேநீர்க் கடை சுழல்வதுபோல தலைபாரமாக என்னவோ செய்தது.

"ஐயா வீட்டை கூட்டிக்கொண்டு போறதே?"

**சி. சிவாணி**

"எனக் கொண்டுமில்லைத்தம்பி. பிரசர். அதுதான்...வாறன்" சாட்டாகச் சொல்லிவிட்டு மெதுவாக கோயிலை நோக்கி நடக்கத்தொடங்கினேன். பத்து மணிப்பூசைக்கான மணி ஓங்கி ஒலிக்க நெஞ்சுக்குள்ளே என்னவோ வலி அதிகரித்தது. நிகழப்போகும் ஏதோ ஓர் அபசகுனத்திற்கான மணி போல காதுக்குள்ளே கனதியாய் அந்தச் சப்தம் இறங்கியது.

நெரிசலான சனக்கூட்டத்திற்குள்ளே சென்று சமாளித்துக்கொள்ள முடியாது. வெளியே வேம்புக்குக் கீழே சற்று நேரம் அமைதியாக இருக்கத் தோன்றியது.

சின்னக்குழந்தைககள் இரண்டு மணல்வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தன. 'சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது' - அடிக்கடி நினைவுக்கு வருகிற பழமொழி. வாசு சிறுபிள்ளைத்தனமாக எவ்வளவு பெரிய கஷ்டகாலத்திற்குள் ஊறிப்போய் விட்டான். இவனை திரும்ப சமநிலைக்கோ, சூழ்நிலைக்கோ கொண்டுவர முடியுமா? எப்படி? யாரால்?

மண்தோண்டிய பிள்ளைகள் வேறு ஈரமான இடத்திற்கு இடம் மாறியிருந்தன. அதிக வெப்பச் சுவாலைகளோடு

(XII ஆம் பக்கம் பார்க்க)

# சிந்தனைக்கு ஒரு குறள்

உலகில் இன்று போற்றப்படும் தமிழ் நூல்களில் தலைசிறந்தது திருக்குறள். அது பலமொழிகளில் வெளிவந்திருப்பது; தமிழர் பெருமையை என்றும் அழியாமற் காப்பாற்றி வருவது; சமநோக்குடையது; தமிழ் நாட்டுக்கு மட்டுமன்றி உலகிற்கே நீதியை வழங்கியிருப்பது; இவற்றால் அது உலகப் பொதுநூல் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

திருக்குறளுக்கு உரை தந்தவர் பலர். ஆனால் பரிமேலழகர் உரையே சிறந்தது என்பது அறிஞர் முடிபு. அதனை நாமும் மறுத்தல் ஒல்லாது. இருப்பினும் எங்கள் காலத்திலும் வாழ்ந்து மறைந்த மூதறிஞரில் ஒரு சிலர் பரிமேலழகர் உரையைச் சார்ந்தும் மறுத்தும் புத்துரை வழங்கியிருப்பதும் சிந்தனைக்குரியது. சார்ந்தெழுதியவர்களுள் சிறந்தவர் சோழவந்தான் அரசன் சண்முகனார். அவர் கட்டுரை வடிவில் ஆங்காங்கே சிற்சில குறள்களுக்கு மட்டும் புத்துரை தந்தவர். அவர் உரை சுவைப்பதற்குரியது. மறுத்தெழுதியவர் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை. பரிமேலழகர் உரையில் பல இடங்கள் இக்காலத்துக்குப் பொருந்தா என்ற முடிபில் அவர் நூல் முழுவதற்குமே புத்துரை வழங்கியுள்ளார். ஆனால் எல்லாவற்றையும் மறுக்கவில்லை என்பதையும் கட்டுரையொன்றில் அவர் குறிப்பிட்டுள்ளார். அவரது புத்துரை இதுவரை நம் கைக்கு எட்டாமை விசனத்துக்குரியதே. கவிஞர் அல்லாது நமது சிந்தனைக்கும் பொருந்தாவுரைகள் சில புலப்படுகின்றன. அவற்றுள் ஒன்று

*"தோன்றிற் புகழொடு தோன்றுக*
*- வ∴திலார்*
*தோன்றலிற் றோன்றாமை நன்று"*

என்பது. இக்குறள் சிறுகத் தமிழ் படித்தவர் வாயிலும் தவழ்வது. இதற்குப் பரிமேலழகர் தரும் உரை வருமாறு:-

"மக்களாய்ப் பிறக்கின் புகழுக்கேதுவாகிய குணத்தோடு பிறக்க; அக்குணமில்லாதார் மக்களாய்ப் பிறத்தலின் விலங்காய்ப் பிறத்தல் நன்று"

இங்கு தோற்றம் என்பது பரிமேலழகர் கருத்தில் பிறத்தல் என நிற்கிறது. அதனால் இனிமேல் மனிதனாகப் பிறக்கவிருக்கும் ஒருவருக்கே இந்த உபதேசம் பொருந்தும். மேலும் இம்மைக்குப் பொருந்தாது என்பதும் தெளிவு. இந்தநிலையில் இந்தச் சிந்தனை மறுபிறப்புக்கும் கூடிச் செல்லுமோ என்பதும் சர்ச்சைக்குரியதே. 'பிறக்கின்' - எனவே பரிமேலழகர் கருத்தில் பிறப்பது எங்கள் அதிகாரத்துக்குட்பட்டது போலும்; பிறப்பு எங்கள் வசமன்று 'என்னதோ அதிகாரம்' என்பர் மணிவாசகர். நாம் இப்பிறப்பிற் செய்த கன்மங்களுக்கேற்ப இறைவனால் வழங்கப்படுவதே மறுமை என்பது சித்தாந்த முடிபு. அதனால் மறுமையில் மனிதப்பிறப்பு நிச்சயம் கிடைக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? மறுமையில் மனிதப்பிறப்புக் கிடைப்பினும் பரிமேலழகர் கூறும் இந்த உபதேசம் நம்மோடு மறுமைக்கும் கூடிவருமா என்பதற்கும் நிச்சயம் இல்லை. கூடிவருமென்றால் முற்பிறப்புச் சம்பவங்கள் இப்பிறப்பில் நினைவுக்கு வரும். அவ்வாறு வந்ததும் இப்பிறப்பில் புதிய பாவகன்மங்களுக்கு இடமில்லாமற் போய்விடுமே. அது இன்றுவரை நிகழவில்லையே. அபூர்வமாக, பலகோடிக்கொன்[illegible] பிறப்புக்கள் தம் முற்பிறப்புச் செய்திகளைக் கூறியுள்ளன. ஆனால் அது மனிதப் பிறப்பெடுத்தவர் யாவர்க்கும் ஒப்ப முடியவன்று. மேலும் இந்த நல்லுபதேசம் மறுமைக்கும் வருமென்றால் இரண்டாயிரம் ஆண்டுகாளாகக் குறளைக் கற்றுத்தேறிய பரம்பரையில் வந்த பலகோடிக்கணக்கான மக்கள் தமிழ் நாட்டிற் புகழோடு பிறந்திருத்தல்வேண்டுமே. அதுவும் நிகழவே இல்லை.

இனி, இந்த உபதேசம் கருவிலிருக்கும் குழந்தைக்குச் சொல்லப்பட்டதோ என்னும் வினாவும் எழுகிறது. கருவோ குழந்தையோ அ∴றிணை என்பது எல்லோர்க்கும் ஒப்ப முடிந்த கருத்து. 'குழந்தை பிறந்தது' என வரும் அ∴றினை வினைமுற்று இதற்குச் சான்றாகும். ஆகவே வள்ளுவர் கூறும் இந்த எச்சரிக்கை மறுமைக்குரியதன்று என்பது தெளிவு.

**க.கணபதிப்பிள்ளை**
(கரவெட்டி)

இந்த நிலையில் இத்தவறு வள்ளுவர்க்குரியதா பரிமேலழகர்க்குரியதா? வள்ளுவர் தெய்வப்புலவர்; ஆழ்ந்த சிந்தனையாளர்; அவர் உலகமகா கவி. அவ்வாறில்லையெனில் 'வள்ளுவன் தன்மை உலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட தமிழ்நாடு' எனப் பாரதி புகழ்ந்ததும் பொய்ப்படுமன்றோ? இப்பிழை வள்ளுவரையே சாருமாயின் அவர் படைத்த ஏனைய குறள்களும் பிழையுடையனவே என்னும் முடிவையும் அறிஞர் உலகம் ஏற்க வேண்டுமே. ஆகவே இப்பிழை உரை [illegible] சாருகிறது.

இனி வள்ளுவர் கொண்ட மெய்ப்பொருள் யாது? என்னும் வினாவைச் சந்திப்போம்.

திருக்குறள் முப்பெரும் பிரிவுகளையுடையது. காமத்துப்பால் இறுதியில் உள்ளது. அது இக்குறளோடு சம்பந்தப்படாதது. எனவே அதனைப் புறம் வைக்க; ஏனைய அறமும் பொருளும் இக்குறட் சிந்தனைக்கு வேண்டியவை. மேற்குறிப்பிட்ட குறள் அறத்துப்பாலில், இல்லறவியலில், புகழ் என்னும் அதிகாரத்தில் உள்ளது. அறத்துப்பால் - இல்லறவியல், துறவறவியல் என இரண்டாகக் கிளைக்கிறது. இல்லறம் பேசியே துறவறம் பேசுகிறார் வள்ளுவர். இல்லறவியலின் இறுதி அதிகாரம் புகழ். இந்த அடிப்படையில் புகழ் என்னும் அதிகாரத்தைப் பொருளதிகாரத்தில் அரசியல், அங்கவியல், ஒழியல் என்னும் மூன்றில் ஓர் இடத்திலாவது வள்ளுவர் வைத்திருக்கலாமே! ஏன் வைக்கவில்லை? அது சிந்திக்கத் தக்கது. இல்லறத்தானுக்குரிய புகழைப் பொருட்பாலுட்புகுத்தினால் அது இல்லறத்தானுக்கு மட்டும் உடைமையாகாது எல்லார்க்கும் பொதுமையாய் விடும். அப்படி அமைந்தால், சந்திரனிற் கால் பதித்தவர், எவறெஸ்ற் சிகரத்தில் நின்றவர், ஒலிம்பிக் வீரர்கள், பிரமச்சாரிகள் ஆகியோர் புகழும் இல்லறத்தின் பாற்பட்டுவிடுமே. மேலும் சூதாட்டப் புகழும் இல்லறத்தோடு இணையலாம் போலும். எனவே பொருட்பாலையுந் தழுவி நிற்கும் இந்தவகைப் புகழ் இல்லறத்துக்குப் பொருந்தாது என்பதே வள்ளுவர் கருத்து. மேலும் இல்லறவியலில் ஈகை என்னும் அதிகாரத்தை அடுத்துப் புகழ் அதிகாரம் இணைந்து நிற்பதும் 'புகழ்' அதிகாரத்தில் முதல் இரண்டு குறள்கள் மீளவும் ஈகையை வலியுறுத்துவதும் புகழ் அதிகாரம் இல்லறத்தானுக்கே சொந்தம் என்பதை நிலைநாட்டியுள்ளன.

இனி இக்குறளுக்கு யாது பொருள் என்பதைப் பார்ப்போம். இந்து மதம் ஆச்சிரம தருமமும் பேசுவது. ஆச்சிரம் - வாழ்க்கைநிலை: அது வருண தருமம் தழுவாது எல்லார்க்கும் பொதுவாய் நிற்பது. ஒருவனது வாழ்நாள்முழுமைக்குமுரிய வாழ்க்கை நிலைகளைக் கூறுவதே ஆசிரம தருமம். அது நால்வகைப்படும்.

முதலில் நிற்பது பிரமசரியம். அது பிரமமாகிய கடவுளை அறியும் ஓதல் நிலை; திருமணமில்லா நிலையும் அதுவே.

அடுத்தது கிருகஸ்தம்; கிருகம்-இல்லம்; அது பிரமசரியம் நீங்கி மேற்கொள்ளப்படும் மணவாழ்க்கை நிலை.

ஏனையவை வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன.

இங்கேதான் வள்ளுவர் பிரமசாரியை எச்சரிக்கை செய்கிறார். 'ஓ! பிரமசாரியே! நீ இல்லறத்தை எளிமையாக நினைத்துவிடாதே. இல்லறத்தில் கால்பதிப்பதாயின் அதில் நீ புகழ் பூத்து நிற்றல்வேண்டும்.அந்தப் புகழோ எளிதிற் கிடைப்பதன்று. அதற்குரிய காரணங்களை இல்வாழ்க்கை தொடக்கம் ஈகைவரையுள்ள பத்தொன்பது அதிகாரங்களில் கூறிவிட்டேன். எனவே அவற்றை உளத்திற்பதித்துப் புகழோடு தோன்றி நில்!' என்பது வள்ளுவரது எச்சரிக்கை. இங்கே புகழ் என்பது இல்லறப் புகழேயல்லாது பிறவன்று; அப்பொருளில் தோற்றமென்பது பிறப்பன்று. அது இல்லறத்தே தோன்றி நிற்கும் காட்சியாகிறது. தோன்றில் - இல்லறத்தே தோன்றில் எனப் பொருள் கொள்க. இன்று இப்புகழைப் பிறவற்றோடும் இணைப்பது தவறெனவுணர்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சி ஏன் அழுகிறா...?

## அமுதா வெள்ளியங்கிரி

“என்ன? சரஸ்! கலா... டும்மே...? எனக்குத் தம்பி வந்து அம்மா ஒருக்கா வரட்டாம் என்றதுமே விளங்கிப்போச்சு. எங்கை ஆள் மூலைக்கை இருக்கிறாவே...?”

“வாங்கோ அன்ரி, எனக்குக் கையும் ஓடுதில்லை, காலும் ஓடுதில்லை. பிள்ளைக்கு என்ன செய்யிறதென்றே தெரியாமற்கிடக்கு. மேலெல்லாம் பதறுதன்ரி. தம்பி! இஞ்சைவா மேனை. போய் மாமியைக் கூட்டியா.”

“பழம் நெல்லு வைச்சிருக்கிறியளே ? புக்கை...”

“அதெல்லாம் இருக்கன்ரி. ஆவணி ஞாயிறுக்குப் பொங்குவம் என்று நேற்றுத்தான் குத்தினனான்.”

“உங்கடை கிட்டடி ஆக்களைக் கூப்பிடுங்கோவன். நான்போய் வேப்பம் துளிர் இரண்டு ஆஞ்சாறன். அதுதான் முக்கியம் பிள்ளை”

“ஆரைக் கூப்பிடுறது. அண்ணையும் பேப்பர் திருத்தவெண்டு கொழும்புக்குப்போட்டார். தம்பிதான் போய் அண்ணியை ஏத்தியர வேணும். மற்றது... ஆர் இவற்றை ஆக்களெண்டா... விதானையார் பெண்சாதி இவற்றை அக்கான்ரை புருசன்ரை தமயன் மகளெல்லே... அவவுக்கும் ஆள் விட்டு, எங்கடை ரீச்சர் அன்ரிக்கும் சொல்லிக் கூப்பிடுவம். அவவுக்கு கலா என்றால் உயிர்”

“ஓ... ரீச்சரை ஏத்தியிறக்கிறது பிள்ளையெல்லே. கலா இல்லாமல் ரீச்சர்தான் கஸ்டப்படப் போறா... நான் வாறன்”

“ஆர் உதிலை போறது அன்ரியே...”

“ஓம் ஆச்சி. பேத்தியெல்லே குந்தியிட்டா. அங்கை ஆரவாரப்படுகினம், போய்ப்பாருங்கோ ஆச்சி... நான் இரண்டு வேப்பம் துளிர் ஆயப்போறன்”

‘அட நான் ஒருத்தி இதிலை இருக்கிறனெண்டு கூட நினைக்கயில்லை. பொடிச்சியைப் பெத்தவனைப் பெத்தவள்... ம்...ஊரிலை எத்தினை சாமத்தியம், எத்தனை பிள்ளைப்பேறு பார்த்திருப்பன். எத்தனை வருத்தங்களுக்கு கைவைத்தியம் சொல்லியிருப்பன்...’ மனதுக்குள் குமைந்தவாறு ஆச்சி பொல்லையும் பிடித்துக்கொண்டு குசினிப்பக்கமாகப் போய் “பிள்ளை! பிள்ளை! என்ன ஆரவாரப்படுறியள் ?...” என்றாள்.

“அதொண்டுமில்லை மாமி... எங்கடை கலா பெரியபிள்ளை ஆயிட்டா... அதுதான்...”

“அப்பிடியே... அவள் குழந்தைப் பெட்டை... ஆளை எங்கை விட்டிருக்கிறியள்... மூலைக்கை இருத்திப் போட்டு கரிக்கோட்டைக் கீறிவிடுங்கோ. கொண்ணையைக் கூப்பிட்டு தோயவார். கத்தரிப் பிஞ்சு வைச்சுருக்கிறியே பிள்ளை? நல்லெண்ணையுடன் கத்தரிச்சாறும் சேர்த்துக் கொடுக்கவேணும்... அப்பதான்...”

“மாமி இப்ப உந்தக் கத்தரிச்சாறு ஒன்றும் கொடுக்கிறதில்லை. டொக்டர்மாரே கிரந்தி என்று சொல்லிப்போட்டினம்”

“இல்லை மேனை... அது மூண்டு நாளுக்கு குடுக்கவேணும். அதோடை மேனை... இஞ்சை வா...”

“மாமி நீங்கள் போய்ப் பேசாமல் இருங்கோ... அதெல்லாம் இஞ்சை இருக்கிறவை பாப்பினம்... இஞ்சை அண்ணியும் வந்திட்டா... வாங்கோ அண்ணி. உள்ளை போங்கோ...”

“மாமி இஞ்சாலை வாங்கோ... பேசாமல் உங்கடை கட்டிலில்லை போய்ப்படுங்கோ”

“எனக்கென்ன வருத்தமே... பகலிலையும் படுக்க... நீங்கள் உங்கடை கூத்துப்படி செய்து குழந்தைப் பெட்டையை பழுதாக்கிப்போடாதையுங்கோ”

“மச்சாள் இந்தச் சருவத்திலை மூண்டுகொத்து வேகுமே...”

“இப்ப ஏன் பிள்ளை மூண்டு கொத்து? மதியம் திரும்பியிட்டுது. ஒரு சுண்டு அரிசியை வைச்சு பிள்ளையைத் தோயவாத்துச் சாப்பாட்டைக் குடுங்கோ... உங்களுக்கு இப்ப ஆர் வரப்போகினம் சாப்பிட?”

“இவவோவை பெரிய கரைச்சல்... தனக்கு வயது போட்டுது என்றில்லை... எல்லாத்துக்கும் தான்தான் என்று வந்திடுவா.... இஞ்சாலை வாருங்கோ மாமி... அவையெல்லாம் செய்வினம். நீங்கள் போய் கரைச்சல் பண்ணாமல், பேசாமல் இருங்கோ... அவை ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு இடத்திலை சொகுசாய் இருக்கட்டும்... இது எனக்குத்தான் பெரியபாடு...”


தனது அறைக்கட்டிலுக்குத் தள்ளிவிடாத குறையாக வந்த ஆச்சிக்குப் படுக்கவும்முடியவில்லை இருக்கவும் முடியவில்லை.

“என்ரை மேனின்ரை பிள்ளை பருவப்பட்டிட்டாள், பக்குவம் சொல்ல எனக்கு வாய்ப்பூட்டு. சமைஞ்சவளுக்குச் செய்யிற பரியாரத்தைவிட்டுத் தாங்கள் சமைக்கினமாம் சமைப்பு.ம்..”

வழிந்த கண்ணீரைச் சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்டு ஆச்சி சரிகிறாள்.

மறுநாள், சரஸ்வதி திலகமன்ரியைக்கூப்பிட்டுமகளுக்குத் துணைக்கு விட்டு, தான் வெளிநாட்டில் இருக்கும் தன் கணவனுக்குப் ‘போன்’ பண்ணச் சென்றுவிட்டா. பாறு ஆச்சிக்கோ பேத்தியின் உடம்பு பற்றிய கவலை... மெல்ல எழுந்துவந்து எட்டிப்பார்த்து,

“பிள்ளை கலாக்கு என்ன குடுத்தனி?”



“அவ இல்லை ஆச்சி... உங்கடை மோனுக்குப் புதினம் சொல்ல ‘ரெலிபோன்’ எடுக்கப்போட்டா....”

“ஆர் திலகன்ரியே நிக்கிறது. உனக்குப் புண்ணியம் கிடைக்கும். நீயெண்டாலும் கத்திரிச் சாத்திலைப் பிளிஞ்சுகுடு பிள்ளை. நான் செய்து போடுவன்... மருமேள் ஏதோ எனக்கு வயது போட்டுது, வயது போட்டுது என்றெல்லே அதட்டுறா...”

“உங்களுக்கிப்ப என்ன பெரிய வயது போட்டுதே...எங்களிலும்பார்க்க நல்ல உசாராய் இருக்கிறியள்...”

பாறு ஆச்சிக்கு ஒருக்கா உச்சி குளிர்ந்த மாதிரி இருந்தது. வாசலில் இரு பெண்கள் கையில் ஏதோ ‘பைல்’களுடன் வருகின்றனர்.

“இதுதான் மிஸ்டர் கனகரட்ணம் வீடோ...”

“ஓ... அவர் இங்கு இல்லை... அந்தா... பின்னால் வாறா மிசிஸ் கனகரட்ணம்” - திலகன்ரிதான் கூறுகிறார்.

வந்த பெண்களில் ஒருவர் “நாங்கள் இந்தக் கிராமத்திலை இருக்கிற முதியவர்களின் விவரம் எடுத்துவாறம். இங்கும் எண்பது வயதுக்கு மேற்பட்ட ஒரு முதியவர் இருப்பதாக முகவரி தந்தனர். அதுதான்...”

“இவதான் எங்கடை மாமி...”

“அவவின் விவரங்கள் கொஞ்சம் வேணும். இவவுக்கு இப்ப எத்தனை வயது?”

“அவவுக்கு எல்லாம் தெரியும் சொல்லுவா... மாமி... உங்கடை அறைக்கு இவையளைக் கூட்டிக் கொண்டுபோய்க் கதையுங்கோ”

“சீ... தேவையில்லை. இதிலை இருந்தே கதைப்பம்...”

“நீங்கள் கதையுங்கோ... எனக்கு அலுவல் இருக்கு நான் வாறன்”

“அன்ரி வாங்கோ உள்ளை போவம்... நீங்கள்தான் நிண்டு எல்லாத்தையும் வடிவாச் செய்துபோடுங்கோ. எனக்கு இதுகள்ளை அனுபவமும் இல்லை. இந்த மாதமே நல்ல நாளைப் பார்த்து வைக்கட்டாம்... சரசுக்கு இனி சாமத்தியச்சடங்கு ஆரவாரம்தான்...”

வெளிவிறாந்தையில் -

“ஆச்சி! நீங்கள் இங்குதான் நெடுக இருக்கின்றீர்களா?”

“சீ... என்ரை இடம் காரைதீவு மேனையள். உந்தப்பிரச்சினை எண்டு சொல்லி எழும்பி எழும்பி இப்ப இஞ்சை வந்திருக்கிறம். இந்தப் பதினைஞ்சு வருசத்திலை அஞ்சு இடத்திலை இருந்திட்டன் பிள்ளை”

“உங்களுக்குக் கண் தெரியுமோ ஆச்சி... கண்ணாடி போடாமல் இருக்கிறியள்...?”

“ஓ... நல்லாய்த் தெரியும். சும்மா பசாடயாய் இருக்கெண்டு தம்பி போகேக்கை ஒரு கண்ணாடி வாங்கித்தந்தவன். இப்ப அதுவும் போடுறதில்லை. போடாமலே எல்லாரையும் தெரியும். காதும் நல்லாய்க் கேட்கும். அதிலையும் ஒரு பிழையுமில்லை”

“உங்களுக்கு எத்தனை பிள்ளையள்...?”

“மூண்டு பேர். மூத்தவள் வன்னியில் இருக்கிறாளாம். இஞ்சை வாறாள் வாறாள் எண்ணுகினம். இன்னும் வந்துசேரயில்லை. அடுத்தவன்தான் தம்பி கனகு கனடாவிலை. அவன்ரை பெட்டைதான் என்ரை பேத்தி. நேற்று சாமத்தியம். அடுத்தது கடைக்குட்டி கமலம். கொழும்பில் இருக்கிறாள். என்னை வந்து கூட்டிப் போறணெண்டவள். இன்னும் வரயில்லை...”

“ஆச்சிக்கு நல்ல ஞாபகம். இப்ப உங்களுக்கு எத்தனைவயது ஆச்சி?”

“நான் பதினாறாம் ஆண்டு பிறந்தனான். என்ரை மேன் சொல்லுவான் உனக்கும் சிறிமாக்கும் ஒரு வயது. அதுதான் நீ சிறிமா போலை பிள்ளையளைப் பெத்து அவரைப்போல் இருக்கிறாய் என்பான்”

“ஓ... உங்களுக்கிப்ப எண்பத்திநாலு வயதாகிறது”

“இந்த வயதிலும் நீங்கள் இப்படி சந்தோசமாய் இருப்பது எங்களுக்கு சந்தோசமாயிருக்கு. உங்கடை பேர் என்ன ஆச்சி?”

“பார்வதியம்மாதான் என்ரை பேர். பாறு ஆச்சி எண்டுதான் ஊரிலை கூப்பிடுவினம்”

“சந்தோசம் ஆச்சி. அடுத்த கிழமை வயதுபோனவர்களை கௌரவித்து நீர்வேலியில் முதியோர்விழா ஒன்று நடத்தவுள்ளோம். நீங்களும் கட்டாயமாய் வரவேணும்”

“நான் ஒரு இடமும் வெளிக்கிடுறதில்லை மேனையள்”

“ஏன் உங்களுக்கு என்ன? எல்லாம் ஏலும்தானே... நீங்கள் வரலாம். கட்டாயம் வாங்கோ. நாங்கள் மருமகளிடம் கூறிவிட்டுப்போறம்”

“வாறம் ஆச்சி...”

சரசைக் கூப்பிட்டு,

“அம்மா! உங்கள் மாமி இந்த வயதிலும் நல்ல திடகாத்திரமாய் இருக்கிறா. அவ இருப்பது உங்களுக்கு நல்ல அதிட்டம்தான். அடுத்த மாதம் 4ஆம் திகதி ஆச்சியை ஒருக்கால் நீங்கள் நீர்வேலிக்குக் கூட்டி வரவேணும். அத்தியார் கல்லூரியிலை மத்தியானம் 2.00மணிக்கு இந்தக்கிராமத்தில் உள்ள எண்பது வயதைக் கடந்த முதியோர்களைக் கௌரவிக்கவுள்ளோம்...”

“எனக்கது கஸ்டம் பாருங்கோ... அவரும் இஞ்சை இல்லை. மகன் சோதினை எடுக்கிறவன். மகளும் நேற்றுத்தான் ‘அற்றென்ட்’ பண்ணி அதிலை ஓடித்திரியிறன். இந்த மாதம் முடிய முன்னம் சாமத்தியச் சடங்கையும் வைச்சு போடவேணும். அதுதான் யோசிக்கிறன்”

“அப்ப நாங்கள் வந்து கூட்டிப் போறம்; நீங்கள் சம்மதிச்சாச் சரி...”

“ஓ... தாராளமாய்க் கூட்டிப் போங்கோ... கவனமாய்க் கொண்டு வந்துவிட்டால் சரி. ஏதும் ஒண்டெண்டால் பேந்து இவரிட்டை நான் தப்பேலாது”

“சரி நாங்கள் அப்ப வாறம்”

* * *

‘முதியோர் கௌரவிப்பு விழா’ கல்லூரி வாசலில் பெரிய எழுத்தில் கொடி கட்டி விட்டிருந்தனர். பல அரச உத்தியோகத்தர்கள், பிரமுகர்கள் வந்திருக்கின்றனர். மேடையிலே பதின்மூன்று முதியவர்கள் மாலையுடன் பொல்லூன்றியபடி இருப்பது பார்க்க விநோத அழகைக்கொடுத்தது. ‘நாளைய உதயனில் முன்பக்கம் இந்தக் காட்சி நல்லவடிவாத்தான் இருக்கும்’ என எல்லோரும் கூறிச் சிரித்தனர். இருந்த முதியோர்களில் உசாராக எழுந்து நடந்து கதைக்கக் கூடியவர்களென்றால் நீர்வேலியில் பிறந்து வளர்ந்து அங்கேயே படித்து அதே பாடசாலையில் ஆசிரியராகவும் பின் அதிபராகவும் இருந்து ஓய்வு பெற்ற மார்க்கண்டு வாத்தியாரும், எங்கள் காரைதீவுப் பாறு ஆச்சியும்தான். மார்க்கண்டு வாத்தியார் பொல்லுடன் நடக்கக் கூடியவர் என்றாலும் மூத்த மகன் வைத்திய கலாநிதி ரஞ்சனும், கடைசி மகன் அதிபர் அருள்தாசனும் கௌரவமாகத் தந்தையைப் பிடித்து வந்து இருத்திவிட்டு முன் வரிசையில் பிரமுகர்களாக இருந்தனர்.

சரியாகப் பழைய நேரம் 2.30 மணிக்கு உதவி அரசஅதிபர் வர இரு நிமிட மௌன அஞ்சலியுடன் விழா ஆரம்பமாகியது. தலைவர் வரவேற்புரையுடன் ‘முதியோர்தான் எமது அனுபவ நூல், அவர்கள்தான் எமது நல்லாசான்கள்’ என்று அவர்களைக் கனம் பண்ணவேண்டிய ஒழுங்குகளைக் கூறி ஒரு குட்டிப்பிரசங்கம் வைத்தார். தொடர்ந்து முதியோருக்கு உதவி வழங்கும் நிறுவனப் பிரதிநிதி எழுந்து “மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என்பர்; மூத்தோர் சொல்லைக் கேட்பது அவர்களை மதிப்பது எமது பிள்ளைகளிடத்து இல்லாமற் போய் விட்டது. முதியோரை மதித்து நடக்க நாமும் பழகி, பிள்ளைகளுக்கும் பழக்கவேண்டும். இந்தத் தள்ளாத வயதிலும் இவர்கள் இங்கு இந்த மேடையில் இருப்பதற்கு இவர்களின் பண்பான பழக்கவழக்கம், உணவு முறைகளே காரணம். இவர்களிடம் நாம் கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது. இவர்களை மதித்து நடக்க இப்படியான கௌரவிப்புக்கள் வழி வகுக்கும்” என்று கூறி முடித்துக் கொண்டார். அடுத்து உதவி அரச அதிபர் ஏற்கனவே செய்து கொண்ட ஏற்பாடுகளின்படி பாலர்கள் வரிசையாக நின்று ‘முதியோர்களை மதிப்போம்’ என்ற கவிதையைப் பாட ஒவ்வொருத்தருக்கும் மாலை அணிவித்து கௌரவித்தார். மார்க்கண்டு வாத்தியார் தன் நடுங்கும் கரங்களால் கைகூப்பி எல்லா முதியவர்கள் சார்பிலும் நன்றிகூறி தான் இப்பவும் ஓர் சிறந்த அதிபர்தான் என்பதை நிரூபித்துக்கொண்டார். அடுத்து உதவி வழங்கும் வெளிநாட்டு நிறுவன இயக்குநர் அவரவர்களுக்கு உற்ற மூக்குக் கண்ணாடிகளை வழங்கிக் கௌரவித்தபோது பாறு ஆச்சி பொல்லைக் கெட்டியாகப் பிடித்தபடி “எனக்கேன் தம்பி கண்ணாடி? எனக்கு நல்ல கண் பார்வை இருக்கு. நீங்கள் எனக்குத் தாறதெண்டால் ஒரு பனம் பழம் தாங்கோ. என்ரை ஊரிலை பனம் தோப்புக்கை இருந்தனான் மேனையள். பனம் பழம் கிடையாத காலத்துக்கென பனம் பண்டங்களான பனாட்டு, ஒடியல்மா, புழுக்கொடியல் என்று பக்குவம் பண்ணியகையிது. சிவனின்ரை மணி கேக்க முன் பனம் பழம் பொறுக்கிப்போடுவம். இப்ப இஞ்சை பனையளையே காணக் கிடையாதாம். இருக்கிற இடத்திலை ஒரு பனம்பழம் எடுத்தா என்றால் என்ரை பேத்திக்கு வெக்கமாயிருக்காம். நீங்கள் பனையளைக் கௌரவித்து எனக்குப் ஒரு பழம் தந்தால் எனக்குப் பெரிய திருப்தி...” என்று மூச்சிரைக்க கூறியதும் பலத்த கை தட்டல்.

கௌரவிப்பு இனிதே நிறைவேற, ஒவ்வொரு முதியவர்களையும் கூட்டி வந்த உறவுகள் அழைத்துச் சென்றனர். பாறு ஆச்சி மாலையும் பொல்லுமாக நின்றபோது கூட்டி வந்த உதவி வழங்கும் நிறுவனப்பெண்கள் இருவரும் “ஆச்சியை நாங்கள் மறக்கயில்லை வாங்கோ ஆச்சி” என்று கூட்டிச் சென்றனர்.

ஆச்சியை ஒட்டோவால் இறக்கி உள்ளே கூட்டிச் சென்ற பெண்களிடம் சரஸ்வதி ஓடி வந்து “பந்தல் போடுவதற்காக இந்தப்பாதை மறைத்துப் போட்டம். அதாலை கூட்டிப் போங்கோ” என வழிகாட்டி விட்டு “வாங்கோ வந்து ரீயைக் குடித்து விட்டு உதுகளைப் பாருங்கோ” என சோடிக்கும் பெடியளை அழைத்தாள். ஆச்சியைக் கவனமாக அவரின் அறையில் விட்டுவந்த பெண்களிடம் “நாளை சாமத்தியச்சடங்கு அதுதான்” என்று சரஸ்வதி கூறவும் அவர்கள் “நாங்கள் வாறம் அம்மா” என்று கூறிச் சென்றனர்.

ஆச்சிக்கு வழக்கம் போல் எல்லாம் மேசையில் வைத்து மூடப்பட்டிருக்கிறது. ஆச்சி மாலையைக் கழற்றிக் கட்டிலில் வைத்துவிட்டு வழக்கம் போல் வடிந்த கண்ணீரை சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

ஆச்சி ஏன் அழுகிறா...? ஆச்சிக்கும் ஆண்டவனுக்கும்தான் தெரியும்.

(யாவும் கற்பனை)

## குறள் வெள்ளம்

மனதிலே உணர்வு உள்ளவன் - உடம்போடு உயிர்சேர்ந்து வாழ்பவன் - தனக்குரியாள் அல்லாதாளிடம் போய் வழிந்துவிடமாட்டான்.

உலகம் பார்ப்பதையும் பழிப்பதையும் கண்டுகொள்ளாமல் அடுத்தவளிடம் போய் மண்டியிடும் மடையரை உணர்வுள்ள மனிதர் என்று எப்படி உலகு மதிக்கும்?

எனவேதான் இறந்தாரின் (விளிந்தாரின்) வேறல்லர் இவர் என்கிறார் வள்ளுவர். வள்ளுவருக்கும் ஏனோ திட்ட வேறு வார்த்தைகள் அகப்படவில்லை.

அடுத்தவர் வீட்டுச் சோலிக்குள் புகுபவர் தன்னைப் பொறுத்தவரை அறிவென்னும் உணர்ச்சி இன்மையால் இறந்தவர் ஆகலாம். ஆனால் அடுத்தவரைப் பொறுத்தவரை நரகத்து முள்ளாகிறார் அத்தகையோர்.

இறந்தவனைக் கொண்டுபோய் சுட்டுவிட்டுப் போய்விடலாம். இப்படிக் கெடுத்து வாழ்பவனை என்னதான் செய்யலாம்? இவன் தரும் சோலி எத்தனைபேரை இறந்தாலும் நிம்மதி இழக்க வைக்கிறது.

இத்தகையோரை நம்பித் தெளிந்து இல்புக விட்டவர்களுக்கே இவர்கள் செய்கிற துரோகம் எமனாகின்றது. எனவே இறந்தாரின் கொடியோர் - குடியைக் கெடுப்போர் அல்லவா இவர்கள்?

**விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தார் இல்**
**தீமை புரிந்துஒழுகு வார். - 0143**

- பிறனில்விழையாமை -

*- அம்பிகைபாகன் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரிகாலம்

நித்தமும் அலைகள் மோதி
கத்திடும் மண்ணின் ஓரம்
நித்திரையின்றி வானம்
நீர்மழை சொரியும் நேரம்
மின்னலும் இடியும் வந்து
முரசுகள் கொட்டும் காலம்
வருவதால் இங்குநாளும்
தவளைகள் கூச்சல்போடும்

கடலான வயல்களெல்லாம்
நாற்றுகள் நீச்சல்போடும் - பெருங்
காற்றொன்று வந்தடித்தால்
மரங்களெல்லாம் முட்டிமோதும்
இளங்கன்றை காக்கவென்று
தென்னைமரம் சரிந்து ஆடும்

பரிந்து பேசும் பாவையர் - நெஞ்சம்
குளிரினிலே நடுங்கியாடும்
இறுங்கிய காளையர் கைகள்
சந்தோச மிகுதியால் ஆடும்
நெருங்கிய கடும் புல்லெல்லாம்
இழகிய நற்தென்றலாகும்
தென்றலிலே நனைந்துவிட்டால்
தொட்டினிலே குழந்தையாடும்

- சங்கையூர் செல்வா -

# இளமையின் இழப்பு!

ஐயோ இளமை போகிறது
அங்கம் சோர்ந்து அழுகிறது
ஒய்யா ரங்கள் ஒடிகிறது
ஓங்கிய துடிப்பும் மடிகிறது

முந்திச் செய்த விளையாட்டை
முறுகும் இளமைக் களியாட்டை
சிந்தித் தாலே சிரிப்புத்தான்
சிலநே ரங்களில் வருகிறது

ஓராம் வகுப்பில் சேர்ந்ததினம்
ஒண்டுக் கிருந்து அழுததுவும்
வீரர் நாமே தானென்று
வீராப் புக்கள் பேசியதும்.....

அம்மா என்ற தெய்வத்தை
அற்புத மாகப் பேய்க்காட்டி
சும்மா சுற்றித் திரிந்ததுவும்
'சுழட்டல்' வேலை பார்த்ததுவும்
சிம்மா சனமே இல்லாத
சிறந்த ராசா என எண்ணி
கும்மா ளங்கள் போட்டதுவும்
குழப்பங் கள்பல செய்ததுவும்

மூத்தார் வளவுப் பனஞ்சோலை
முட்டி உடைத்து மூழ்கியதும்
காத்தவ ராஜன் கூத்துக்கு
கடுஞ்சாமத்தில் அலைந்ததுவும்
வேர்த்துக் களைத்து சைக்கிள் தனில்
வேலைகள் இன்றி அலைந்ததுவும்
கோர்த்து வெடியில் சாம்பிராணி
கொளுத்தி அடிகள் வாங்கியதும்......

வேலி ஏறி மாங்காய்க்காய்
வேட்டுக் கேட்க ஓடியதும்
கோழி பிடிச்சுக் கறிகாய்ச்சி
கொண்டாட்டங்கள் நடத்தியதும்
ஊழி ஏதுவும் அறியாமல்
உழைப்பும் பற்றி தெரியாமல்
வாலிபப் பருவம் போய் மறைந்த
வகைதான் என்னே வியக்கின்றேன்!

இன்றினி இளமை திரும்பாது
இழந்தவை மீண்டும் வாராது
நன்றாய் இனிமேல் என் பயணம்
நகர இறையே துணை நிற்பாய்

- மானியூர் ரட்ணேஸ் -

# "கவி வேந்தன்"

சொல்வங்கி நெஞ்சிலுண்டு;
துள்ளுநடை ஓசையிலே
சுவையாகச் சொல்கோக்கும் திறனுண்டு;
துளிர்களையும் முதிர்விக்கும்
சில்மிஷங்கள் இழையோடும்
சின்னத்தன நடையுண்டு;
சிலேடையில் சிரிக்க வைக்க,
சிற்றிடை வர்ணனையால்
சித்தத்தில் வெளியேற்ற,
திறமை நிறையவுண்டு;
கொக்கோக நுண்மைகளை
குழந்தைக்கும் ஊட்டிவிடும்
குரூர மனமுண்டு.

இத்தனையும் உனக்கும் உண்டா?
நிச்சயமாய் சினிமாவில்
நீ ஒரு கவி வேந்தன்.

- புத்தூர் வே. இளையகுட்டி -

# விரதநாள்!

மணியத்தார் வீட்டில் நேற்று
மனிசியும் சண்டை போலும்!
சனியனே, நாயே, பேயே ~ எனத்
தாண்டவம் போட்ட பயனாய்
கொழுவலும் தடித்து முற்றிக்
கோபத்தை நெய்யாய்ப் பற்றி,
வழமைபோல் அன்றி, தீரும்
வழியினை மறந்தார் பாரும்!

இரவிலே வந்த பிசகோ?
இடையிலே வந்த வசவோ?
கரவிலே வாய்த்த களமோ?
கடையிலே தந்த அரிசி
உரலிலே போடும் பொழுது
உறுதியக் கல்லும் உடைந்து
'கரகர' என்று வாயில்
கடிபட வந்த வினையோ?

சிறியதில் தொடங்கிச் சண்டை
சினத்தினால் வளர ~ அந்தப்
பொறியதில் பற்றி அன்று ~ அடுப்புப்
புகையுமே போச்சு நின்று!
அருமைதான்! மணியம் எங்கள்
அலுவல(க) மதிய உணவில்
வரவில்லை, என்ன என்றால் ~ 'உப
வாசம் நான்' என்று சொன்னார்.

- கி.வாயுபுத்திரன் -

# நாளை உலகம் இல்லையென்றால்...

அடுத்த ஆண்டு அழியுமே உலகம்,
அவலச் செய்தி அதனை வந்து
விடுத்த எங்கள் வேலைத் தளத்தில்
விளைந்த பயனை வியந்தேன் உளத்தில்!

'பாவம் ஒழித்துப் பரமன் பதமே
பணிதல் வேண்டும் இனிமேல் தினமே
சாதல் பொழுது நெருங்கும் போதும்
தவத்தை செய்தல் தருமே நலமே!'

என்றவர் ஐம்பதைத் தாண்டிய கிழவர்
ஏற்றதை ஆட்டினர் தலையினைப் பலரும்
'ஒன்றது, ஐயா, உடனடியாக,
ஓவர்டைம், சம்பளம் போடுக உடனே'

என்றவர் சிலபேர், இடையிலே சிலபேர்
'ஒண்டியாய் நாளும் உழைத்தது போதும்
உடனடித் திருமணம் நடத்தணும் நாமும்'
என்றொரு முடிவை எடுக்கிற கணத்தில்...

கலபுல ஒலியைக் கேட்டெம் தலைவர்,
'கதைத்தது போதும், கடமையைச் செய்யும்,
உலகது இடிந்து விழுந்தாற்கூட - கடமை
உணர்வினைத் தவறக் கூடா' தென்றார்!

- கி.குருபரன் -

# அத்வைதம்

வாசமலர் வருடி வருகின்ற தென்றலிடை
மூழ்கிவிடு;
சென்றோர் மலைமுதுகில் அமர்ந்துகொண்டு
தள்ளாடி வருகின்ற
தாம்பாள நிலாஎழிலில்
உள்ளம் மயங்கி ஒடுங்கிவிடு!
உதயத்தில்
கீழ்வானில் கீதையொன்றைக்
கிரகணத்தால் வரைகின்ற
ஆதவனுள் அமிழ்ந்துபார்! ஆழ்கடலின் ஆர்ப்பரிப்பில்
கரையில் இருந்தபடி கரைந்துபார்!
புள்ளினங்கள்
'ஹரகரப்பிரியாவும்', 'காம்போதியும்' இசைக்க
நின்ற இடத்தினிலே நிஷ்டைகொள்!
மெல்லிசையை
பொன்னந்திப் பொழுதொன்றில் பூக்களிடை அமர்ந்து
உண்டுபார்!
அப்போதிவ் உலகத்தின் விலைதெரியும்.
ஏதோ ஓர் கோவிலிலே எதையும் சட்டை செய்யாமல்
போயமர்;
உன்னையிழ;
பரவசங்கொள்; அப்போது.......
உண்மை உயிரின் கவித்துவம் பல விளங்கும்.
எங்கும் இருளணிந்த இரவொன்றில்
உனக்குள் நீ
பொங்கிப் பிரவகித்துப் பின் புதைக,
அப்போது
ஆன்மாவின் புனிதத்தின் அர்த்தம் சில புரியும்.
உலகின் பெறுமதியும், உயிரின் கவித்துவமும்,
ஆன்மாவின் புனிதமதும்
உனக்குத் தெளிந்துவிட்டால்
வாழ்க்கை புரியும்.
வாழ்வு வழி தெரியும்

- அருணன் -

# பொன்னாடு கண்டிடுவோம்

இயற்கையெழில் கொஞ்சுகின்ற நாடு எங்கே
இனியதென்றல் முத்தமிடும் சோலை யெங்கே
வயற்காடு வான்பயிர்கள் தானும் எங்கே
வண்டினங்கள் மொய்த்தமலர்ப் பொய்கை யெங்கே
பயிர்பச்சை செழித்தநில புலங்கள் எங்கே
பண்புடனே வாழ்ந்தமனை மாட மெங்கே
உயிர்காக்க ஊரைவிட் டேஓடி விட்டோம்
உலைவைக்க வகையின்றி அகதி யானோம்.


ஆலைகளோ தரைமட்டம் வாழ்மனையும் கீழ்மட்டம்
கூலிவேலை நிவாரணங்கள் கொடுவயிறு நிரப்புதிங்கே
மாலைவரை மாரடித்து வெறுவயிற்றில் நஞ்சடக்கி
ஓலமிட்டு வாழ்வுதனை ஓட்டுகிறார் ஆண்டுகளாய்
பாலைநிலம் போலெங்கும் பாழ்பட்டுக் கிடக்குமிந்தப்
பண்பான பயிர்த்தறைகள் பயனற்றுத் தரிசாச்சு
மூலைகளில் கிடந்தினிமேல் முடங்குவதால் பயனில்லை
முன்சென்று இழந்தமண்ணை முனைப்புடனே மீட்டிடுவோம்.

பள்ளிகளில் சூழ்நிலையோ படிப்பதற்கு ஏதுமில்லை
பெற்றோர்க்கும் கல்வியிலே பெரிதாக ஆர்வமில்லை
பிள்ளைகளும் வயிற்றுக்காய் பேயாக அலைந்துநிதம்
போராட்டம் வாழ்வென்றே போரோடு வாழ்கின்றார்
நல்லாசான் கற்றலிலே நாட்டமின்றித் தூங்கிடுவர்
நன்மைபெறாக் குதூகலிப்பில் நலமேதுங் கண்டிலரே
தொல்லைகளைச் சுமந்துவாழ் வூக்கமெல்லா மழிக்கின்ற
தொடர்கதையை இத்துடனே முடித்துவிதி மாற்றிடுவோம்.

அல்லலெனும் சொல்லுக்கு அகராதி தேவையிலை
அதுவெல்லாம் தமிழர்கள் வாழ்வினிலே தாராளம்
சொல்லரிய பெருமைகளைச் சொல்லியே சொல்லிச்
சொல்லொணாத் துன்பங்களைத் தூசாக ஊதிவிட்டோம்
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே நாம்தமிழர்
முன்தோன்றி வாழ்ந்தவொரு மூத்தகுடி தானென்றால்
தொல்லுலகில் நமக்கென்று தொன்மையுள நாடொன்று
தோன்றாது போனதேனோ பழம்பெருமை என்னாச்சு?

இன்றுவரை தமிழினமே! எண்ணித்தான் பார்த்தாயா?
இல்லைக்குட்டி நாடுகள் தோன்றுவதை அறியாயா?
வென்றுதமிழ்க் கொடிநாட்டி வீரஇனம் எனப்பேசி
பண்டுமுறைப் போர்ப்பரணி பாடிவரும் மறவர்களே!
நன்றெய்தி வாழ்வதற்கோர் நாடின்றி வாழுமினம்
ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கு ஒப்பாகும்
ஒன்றாமை இனமழிக்கும் உட்பகையே ஏதம்தரும்
பொன்றாமை இனியேனும் பொன்னாடு கண்டிடுவோம்.

- 'கைதையூரான்' -





# எங்கும் காதல் எதிலும் காதல்

| | | | |
|---|---|---|---|
| கவிஞர்களுக்கு | கற்பனை | மேல் | காதல் |
| காதலர்களுக்கு | இதயம் | மேல் | காதல் |
| பெண்ணுக்கு | நகை | மேல் | காதல் |
| முதுமைக்கு | நரை | மேல் | காதல் |
| கலைஞனுக்கு | கலை | மேல் | காதல் |
| இளைஞனுக்கு | இளமை | மேல் | காதல் |
| வணிகனுக்கு | இலாபம் | மேல் | காதல் |
| வண்டுக்கு | தேன் | மேல் | காதல் |
| குழந்தைக்கு | பால் | மேல் | காதல் |
| பூமிக்கு | மழை | மேல் | காதல் |
| அலைக்கு | கரை | மேல் | காதல் |
| வலைக்கு | மீன் | மேல் | காதல் |
| வேருக்கு | நீர் | மேல் | காதல் |
| உயிருக்கு | உடல் | மேல் | காதல் |
| தாய்க்கு | சேய் | மேல் | காதல் |
| நோய்க்கு | மருந்து | மேல் | காதல் |
| வீரனுக்கு | வெற்றி | மேல் | காதல் |
| நிலாவிற்கு | வானம் | மேல் | காதல் |
| இருளுக்கு | ஒளி | மேல் | காதல் |
| அரசனுக்கு | புகழ் | மேல் | காதல் |
| அரக்கர்க்கு | அழிவின் | மேல் | காதல் |
| பண்டிதனுக்கு | படிப்பின் | மேல் | காதல் |
| வண்டியனுக்கு | உணவின் | மேல் | காதல் |
| அடியார்க்கு | ஆண்டவன் | மேல் | காதல் |

- மு.வே.அன்பழகன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிபெயர்தலில் ஈடுபடும் மீனி



ருசியாக் காட்டில் காட்டெருமைக் (BISON) கூட்டம். குடிபெயர்தலில் ஈடுபடும் விலங்குகளில் இவையும் அடங்கும்.



அதே காட்டில் மான்களின் கூட்டம். இலையுதிர்காலத்தில் இங்கிருந்து குடிபெயர்ந்துவிடும். பின் வசந்தகாலத்தில் திரும்பும்.

“மனிதன் ஆரம்பமாவதும் பெண்ணுக்குள்ளே, அவன் ஆடி அடங்குவதும் மண்ணுக்குள்ளே” என்கிறது. ஒரு பழையபாடல். ஆயினும் உயிரி ஆரம்பமானது நீருக்குள்ளே. முதல் உயிரி தோன்றியது நீரிலே. இது பெற்றுப் பெருக, சந்ததிகளில் மாறல்கள் ஏற்பட்டு, பல வகையான அங்கிகள் தோன்றின. இங்ஙனம் கூர்ப்பு நிகழ்ந்தது. அங்கிகளிடையே பல்வகைமை (DIVERSITY) ஏற்பட்டது. முதல் உயிரிகள் இரசாயனத் தொகுப்பாளர்களாக இருந்திருக்கவேண்டும். தொடர்ந்து இவற்றை உணவாகக்கொள்ளும் அங்கிகளும், அழுகல் வளரிகளும் (பிரிகையாளர்கள் : பெரும்பாலும் பற்றீரியங்கள்) தோன்றியிருக்கவேண்டும். தொடர்ந்து சில அங்கிகள் பச்சிலையத்தை ஆக்கி ஒளித் தொகுப்பில் ஈடுபட ஆரம்பித்தன. இங்ஙனம் சூரியஒளியைப் பயன்படுத்தி ஒளித்தொகுப்பு நிகழ்த்தும் தாவரங்கள் தோன்றிய பின் கூர்ப்பு வேகமாக நிகழ ஆரம்பித்தது. இதற்கு மற்றுமொரு காரணம், ஒளித்தொகுப்பின்போது ஒட்சிசன் ஒரு விளைபொருளாகத் தோன்றும். இதை அங்கிகள் சுவாச எரிபொருளாகப் பயன்படுத்த ஆரம்பித்து தமது செயற்பாடுகளைத் திறமையாகச் செய்ய ஆரம்பித்தன. பசிய தாவரங்கள், அல்காக்கள், ஈரலுருத் தாவரங்கள், பன்னங்கள், ஊசியிலை மரங்கள், பூக்குந்தாவரங்கள் என்ற ரீதியில் முன்னேற்றமடைந்தன. பலதரப்பட்ட அழுகல் வளரிகளும் ஒட்டுண்ணிகளும் தோன்றின. இவற்றை உணவாகக்கொள்ளும் பலதரப்பட்ட விலங்குகள் (தாவரபட்சணிகள்-HERBIVORES) தோன்றின; அதாவது பலதரப்பட்ட முதல்மட்ட நுகரிகள் தோன்றின. இவ்விலங்குகளை உணவாகக்கொள்ளும் பலதரப்பட்ட விலங்குகளும் (ஊனுண்ணிகள்-CARNIVORES) தோன்றின.

மனிதன், எலிபோன்ற அனைத்துமுண்ணிகளும் (OMNIVORES) தோன்றின. காகம், கழுகு, கழுதைப்புலி போன்ற அழுக்ககற்றிகளும் (SCAVENGERS) தோன்றின. பலதரப்பட்ட விலங்கு ஒட்டுண்ணிகளும் தோன்றின. இங்ஙனம் இனங்கள் எண்ணிக்கையில் பல்கிப்பெருகின (இன்றுவரை இனங்காணப்பட்ட, இன்றும் உயிர்வாழ்கின்ற தாவர விலங்கினங்களின் எண்ணிக்கை முப்பது மில்லியன்களாகும். எவ்வளவோ இனங்காணப்பட்டாமலும் இருக்கின்றன).



கடற்சிங்கம் (SEA LION) தாயும் குட்டியும். இவை சீல் (SEAL) வகைக்குரியவை.

இங்ஙனம் நீரில் இனங்கள் பல்கிப்பெருக சில இனங்கள் படிப்படியாக நில வாழ்க்கையை மேற்கொள்ள முயற்சிகள் எடுத்தன. முழுக்க முழுக்க நீருக்குரிய வாழ்க்கை கரையோரப்பகுதிகளில் நிலத்தில் சிறிதுநேரம் தரித்திருப்பது (பனையேறி மீன் ஓர் உதாரணம், கடற்கரைக்குரிய அல்காக்கள்) நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய இயல்பு (ஈரூடக வாழ்க்கை - AMPHIBIAN - ஈரலுருத் தாவரங்களும், தவளையினத்துக்குரிய விலங்குகளும்) முழுக்க முழுக்க நில வாழ்க்கை (நகருயிரிகள், பறவைகள், பாலூட்டிகள்) என விருத்தி ஏற்பட்டது. மனிதன் ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே என்று கட்டுரையை ஆரம்பித்தாலும் அவனும் உண்மையில் ஆரம்பமாவது நீருக்குள்ளேதான். கருப்பையில் பன்னீர்க் குடத்துக்குள்ளேதான் அவன் ஆரம்பமாகின்றான். பிறந்தவுடனும் குழந்தை அழுவதற்குக் காரணம் சுவாசப்பைகளைக் காற்றினால் நிரப்பிக்கொள்ளவே. பிறந்தவுடன் அழாத குழந்தைகள் பிழைக்கா. (சூல்வித்தகமுள் - இளங்கொடி உள்ள - பாலூட்டிகள் எல்லாவற்றினதும் குட்டிகள் பிறந்ததும் கதறத்தான் செய்யும்.)



சில ஆபிரிக்க வனவிலங்குகள். இவையெல்லாம் குடிபெயர்தலில் ஈடுபடும்.

அங்கிகள் நில வாழ்க்கையை மேற்கொள்ள முற்பட்டதற்குக் காரணம் இடத்துக்கும் உணவுக்கும் உள்ள போட்டியைத் தவிர்ப்பதற்காகவே. நில வாழ்க்கையை மேற்கொண்டதன் பின்னர் தாவரங்களிடையே இடத்திற்கும் ஒளியைப் பெறுவதிலும் போட்டி தொடர்ந்து ஏற்பட்டது. விலங்குகளுக்கு உணவைப்பெறுவதில் போட்டி தொடர்ந்து ஏற்பட்டது. அதனால் மாறல்கள் தொடர்ந்து ஏற்பட்டன. கூர்ப்பு தொடர்ந்து நிகழ்ந்தது. இனமாக்கல் தொடர்ந்தது. நிலத்திலும் இனங்களின் எண்ணிக்கை பல்கிப்பெருகிற்று. நில வாழ்க்கைக்குரிய அங்கிகள் வளிக்குரிய சுவாசத்தை மேற்கொள்ள வேண்டியவையாகும்; அதற்கேற்ப அவற்றில் சுவாச உறுப்புக்களும் தொகுதிகளும் தோன்றின. மீன்கள் பூக்களின் உதவியினால் நீரிலிருந்து ஒட்சிசனைப் பெறும். தவளையினங்களின் குடம்பிகளும் (வாற்பேய்-TADPOLE) பூக்களின் உதவியினால் சுவாசிக்கும். தவளைகள் சுவாசப்பைகள் மூலமும் தோலின் மூலமும் வளிக்குரிய சுவாசம் நிகழ்த்தும், தேரைகள்(TOADS) சுவாசப்பைகளின் உதவியினால் சுவாசிக்கும். நகருயிரிகள், பறவைகள், பாலூட்டிகள் சுவாசப்பைகளின் உதவியினால் வளிக்குரிய சுவாசம் மாத்திரமே நிகழ்த்தும்.

ஈரூடகவாழிகள், அதாவது தவளை, தேரை போன்றவை இனவிருத்தி செய்ய நீர்நிலைகளை நாடவேண்டும். அதாவது நீரிலிருந்து நிலத்துக்குச் சென்றவை இனவிருத்திக்கு நீர்நிலைகளை நாடும்; அதேபோல நிலத்திலிருந்து நீருக்குச் சென்றவை இனவிருத்திக்கு நிலத்தை நாடிவரும். சில இனங்களுக்குரிய பாம்புகள், முதலைகள், ஆமைகள் போன்ற நகருயிரிகளும், கடற்பறவைகளும், திமிங்கிலங்களும், சீல்ஸ் (SEALS) போன்ற பாலூட்டிகளும் எதிரிகளிலிருந்து தப்புவதற்கும் உணவைப் பெறுவதற்கும் நிலத்திலிருந்து நீரை நாடிச்சென்றுவிட்டன. நீர் வாழ்க்கைக்கேற்ற இசைவாக்கங்கள் இவற்றில் சிறப்பாக ஏற்பட்டுள்ளன. நீரில் இடப்பெயர்ச்சி செய்வதுபோல நிலத்தில் இடப்பெயர்ச்சி செய்யமுடியாத அளவிற்கு இவை மாறிவிட்டன. முழுக்க முழுக்க நீர் வாழ்க்கையை மேற்கொள்ளும் அளவிற்கு இவை மாறிவிட்டன. ஆயினும் சுவாசப்பைகளின் உதவியினால் இவை வளிக்குரிய சுவாசமே நிகழ்த்தும். அதனால் மூச்சு விடுவதற்கு இவை நீரின் மேற்பரப்பிற்கு வரவேண்டியவையாகவே இருக்கின்றன. திமிங்கிலங்களைத் தவிர ஏனையவை இனவிருத்திசெய்ய நிலத்தை நாடிவரும். இனவிருத்திக்குரிய காலங்களில் குறிப்பிட்ட இடங்களில் இவை அதிக எண்ணிக்கையில் கூட்டம் சேரும். இக்காலங்களில் இவை மாத்திரமல்லாமல் இவற்றின் முட்டைகளும் பெருமளவில் உணவாகப் போவதுண்டு - குறைந்த அளவில் ஏனைய விலங்குகளுக்கு, அதிகளவில் மனிதனுக்கு. திமிங்கிலங்கள் இனவிருத்திக்கு நிலத்தை நாடுவதில்லை. நீரின் ஆதாரம் இல்லாதபோது இவற்றின் உடல்நிறை காரணமாக ஏற்படும் அதிக அமுக்கத்தால் சுவாசப்பைகளும் இதயமும் தொழிற்படமுடியாது இவை இறந்துவிடும். இவை நீரிலேயே குட்டிபோடும். குட்டி வெளியேறியதும் தாய் தனது மூஞ்சியினால் குட்டியை மேல் நோக்கி ஒரு தள்ளுத்தள்ளி விடும். (திமிங்கிலத் தள்ளல்). நீரின் மேற்பரப்பிற்கு வந்த குட்டி முதல் மூச்சு விடும். பிறந்த உடனேயே குட்டி நன்றாக நீந்தக் கூடியதாயிருக்கும். தாயுடனேயே திரியும். ஓராண்டு காலத்துக்கு சற்று முன்பின் வரை குட்டி தாய்ப்பால் குடித்து வளரும் (நவநாகரிக நாரீமணிகள் கவனிக்கவேண்டிய விடயம்). திமிங்கிலம் ஒரு சமயத்தில் ஒரு குட்டிதான்போடும். திமிங்கலங்களின் குடிபெயர்வு, குடிபெயர்தலுக்கு இலக்கணமாய் அமையாவிட்டாலும், உணவைத்தேடி கடல் நீளத்துக்கு வடக்குநோக்கியும் தெற்குநோக்கியும் அலையும் - பருவகாலங்களுக்குஏற்ப. இப்படிக் குடிபெயரும்போது குறிப்பிட்ட இடங்களை அடையும் போது

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்





ஆற்றில் எதிர்நீச்சலடிக்கும் சமன் மீன். வீடு நோக்கி ஓடிச் செல்கின்றது. நிலத்தின் சரிவையும் ஆற்றின் வேகத்தையும் கவனியுங்கள். இப்படிப்பட்ட தடைகளை இது எங்ஙனம்தான் தாண்டுகின்றதோ?




இந்த மான்கூட்டமும் குடிபெயர்தலில் ஈடுபடுபவைதான். இவை வட அமெரிக்காவிற்குரியவை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# னினங்களும் பாலூட்டிகளும்

## பெயர்வு -3

திமிங்கல வேட்டையாடுபவர் ரின் நகர்வைத் தெரிந்துவைத் பிட்ட காலங்களில் குறிப்பிட்ட ன்று திமிங்கில வேட்டையில் துதனால் திமிங்கிலங்களின் யில் வீழ்ச்சியடைய ஆரம்பித் மிங்கில வேட்டையில் ஈடுபடும்



யில் ஈடுபடும் ஆபிரிக்க விலங்குகள். உரிய ப குடிபெயரும்.

ஒப்பந்தத்தின் அடிப்படையில் உண்டு.

இனவிருத்திக்காக குறிப்பிட்ட ரும். இக்காலங்களில் இந்த ஆயிரக்கணக்கில் காணப்படும். ளை முதிர்ந்த ஆண்கள் நாடி ஆணும் கடற்கரையில் தனக் ஒதுக்கிப் பிடித்துக்கொள்ளும். த்து அந்த இடத்தில் வேறு ாமல் பார்த்துக்கொள்ளும். பார் ஏற்படும். இரத்தக் காயங் த போர்கள் ஏற்படுவதுண்டு. கள் (BACHLOR MALES) ச்சீனையில் ஈடுபடாமல் தமக் த்தில் கூட்டமாக இருக்கும். வரும் என்ற நம்பிக்கையில். நப்பாசை ஏற்படலாம். ஆனா ந்தறியெறிந்துவிடுமே என்ற ருக்கும்) தொடர்ந்து அப்பிர ள் வரும். கரையை அடைந்த த நோட்டமிடும். 'வீடு' தேடி ண்கள் பெரிய ஆரவாரமிட்டு ள் கூட்டம் கூட்டமாக தமக்கு களை நாடிச்செல்லும். ஓர் த அடைந்த பெண்களனைத் ச் சொந்தம். சில சமயங்களில் ன் எல்லை அருகில் உள்ள கிக்கொண்டு போகமுயல்வ றுவதுண்டு. அதனால் பெண் ண்கள் கண் துஞ்சாமற் ஈடுபட யங்கர மோதல்களும் ஏற்படுவ நூற்றுக்கணக்கான பெண்டிர் தான்களும் பிச்சைவாங்க ). பின்னர் பெண்கள் குட்டி சில நாள்களின் பின்னர் . குட்டிகள் தாய்ப்பாலுண்டு ாயுடன் கடலுக்குச் சென்று ரையை அடைந்த ஆண்கள் லம் முடியும்வரை உணவு

கொள்வதில்லை. மாரிகாலம் வரும் முன் பெண் களும் குட்டிகளும் கடலையடைந்து வெளி நோக் கிய குடிபெயர்தலில் ஈடுபடும். இவற்றைத் தொடர்ந்து இளந்தாரிகள் செல்வர். ஈற்றில் 'பெரிய வர்'களும் செல்வர். எள் போட்டால் எள் விழாது என்ற வகையில் சீல்கள் நெருக்கமாவிருந்த பிர தேசம் வெறிச்சோடிக்கிடக்கும். இனிமேல் அடுத்த வருடந்தான் ஏற்ற காலத்தில் (வசந்தகாலம்) இந்த இடத்தை நோக்கி சீல்கள் வரும். இங்ஙனம் சீல் கள் விருத்தி செய்யுமிடங்கள் வடதுருவத்தை அண்டிய சில பிரதேசங்களிலும், தென்துருவத்தை அண்டிய சில பிரதேசங் களிலும் உண்டு.

காடுகளில் வாழும் பெரிய விலங்குகளும் நிலைமைகளுக்கேற்ப குடி பெயருவதுண்டு. வட துரு வத்தை அண்டிய பகுதி களிலும், தட்பவெட்ப பிர தேசங்களுக்குரிய காடுக ளிலும் உள்ள விலங்கு கள் குடிபெயர்தலில் ஈடு படுவதுண்டு. பெரும்பா லன சிறிய விலங்குகள் மாரி நெடுந்தூக்கம் மூலம் மாரிகாலத்தைக் கழிக் கும்.கரடிகளும் குகைகள் அல்லது வளைகளில் மாரிகாலத்தைக் கழிக் கும். ஏனைய பெரிய விலங்குகள் குடிபெயரும். உதாரணமாக மானினங் கள், மூஸ் (MOOSE), காட்டெருமை (BISON) போன்றவை குடிபெயரும். இரையைத் தொடர்ந்து இரைகௌவிகளும் குடிபெயரும். ஆபிரிக்காவிலும் கொங்கோ போன்ற மழைக்காடுகள் (RAIN FOR-ESTS) தவிர்ந்த ஏனைய காடுகளில் வரண்ட காலங்களில் புல்வெளிகள் காய்ந்து போவதுடன், முக்கியமாக நீர் நிலைகளும் வற்றிப்போய்விடும். அதனால் விலங்குகள் உணவையும் நீரையும் தேடிப் பிறஇடங்களுக்குக் குடிபெயரும். அங்கிகள் எல்லாம் ஒன்றுகூடிக் குடிபெயருவது - வரிக்குதிரை கள், ஒட்டகச்சிவிங்கிகள், யானைகள், காண்டா மிருகங்கள், எருமைகள், (GNU) எனப்படும் வில்ட்பீஸ்ற்(WILDBEAST)றுக்கள், பலதரப்பட்ட மானினங்கள் (ANTELOPES) போன்ற பலதரப்

**குகன்**

பட்ட விலங்குகள் ஒன்றாகக்குடிபெயருவது - கண் கொள்ளாக்காட்சியாகவிருக்கும். இரையுடன் இரை கௌவிகளும் செல்லும். சிங்கத்தைக் கண்டு அஞ் சாது மான்கூட்டமும் ஒன்றாகச் செல்வது ஆச் சரியம் தரும். இவ்வேளையில் இரை கௌவிகள் வேட்டையாடுவதில் ஈடுபடுவதில்லை. தாவர பட் சணிகளுடன் (இரைகள்) சிங்கம், சிறுத்தை, சீற்றா (CHEETAH), கழுதைப்புலி (HYENA) போன்ற மாமிச பட்சணிகளும் (இரைகௌவிகளும்) சமாதா னமாகச் செல்லும். இயற்கையின் விநோதங்களில் இதுவுமொன்று. பின் ஏற்றகாலம் மீளும் பொழுது இவையும் திரும்பும். குடிபெயர்தல் அங்கிகளில் ஆயிரக்கணக்கான வருடங்களாக ஏற்பட்ட இசை வாக்கமாறல்களினால் ஓர் இயல்பூக்கமாக (INST-INCT) மாறிவிட்டது. அதனால் குறிப்பிட்டகாலம் வரும்போது குடிபெயர்தல் உந்தல் ஏற்பட்டு விலங் குகள் குடிபெயர்தலில் ஈடுபடும். விலங்குகளின் உயிரியற் கடிகாரம் (BIOLOGICAL CLOCK) இதனைக்கட்டுப்படுத்தும். ஆபிரிக்காவில் சில வன விலங்குப் பாதுகாப்புப்பிரதேசங்களில் எப்பொழுது நீரும் உணவும் கிடைக்கக்கூடியதாகச் செய்துள் ளார்கள். ஆயினும் விலங்குகள் குடிபெயர்தலைக்

கைவிடவில்லை. ஆயிரக் கணக்கான வருடங்க ளின் பின் ஏற்பட்ட இசைவாக்கம் மறைவதற்கும் (விலங்குகள் மறப்பதற்கும்) பலகாலம் செல்லும்; அல்லது செயற்கையாகத் தடைபோட்டு இவை குடிபெயர்வதைத் தடுக்கவேண்டியிருக்கும். இங்ங னம் குடிபெயரும்போது நூற்றுக்கணக்கில் விலங்கு கள் நோயினாலும், விபத்துக்களினாலும், ஆறுக ளைக்கடக்கும் போது அமிழ்ந்தியும் இறப்பதுண்டு.

நோர்வே (NORWAY) நாட்டைச் சேர்ந்த லெமிங் (LEMMING) என்ற கிளிப்பன்றி (GUI-NEA PIG) போன்ற நனியுண்ணி (RODENT) விசித்திரமானதொரு குடிபெயர்தலில் ஈடுபடும். குடித்தொகை ஒரு குறிப்பிட்ட எல்லையை அடைந் ததும், இவற்றுள் பல்லாயிரக்கணக்கானவை நேரே வடக்குநோக்கிக் குடிபெயரும். ஆறுகளோ, கடல் களோ இவற்றிற்குத் தடைகளாகத் தெரிவதில்லை, ஆற்றிலும் கடலிலும் குதித்து அக்கரையை அடைய முடியாது ஆயிரக்கணக்கில் சாகும். அத னால் இதை தற்கொலைக்குடிபெயர்வு (SUICI-DAL MIGRATION) எனக் கொள்ளலாம். இக் குடிபெயர்வுக்குரிய காரணம் புலப்படவில்லை, ஆயினும் முடிவில் லெமிங்களின் குடித்தொகை கட்டுக்கடங்கியதாக வந்துவிடும். அதனால் இக்குடி பெயர்வு குடித்தொகைக் கட்டுப்பாட்டுடன் தொடர்பு டையதாகவிருக்கலாம். ஹெம்லின் நகரத்தின் குழல் வித்துவான் (PIED PIPER OF HEMLIN) கதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இக்கதைக் குரிய கரு லெமிங்களின் குடிபெயர்தலைக்கண்டு ஏற்பட்டதாகக் கருதப்படுகின்றது.

மீனின்த்தில் விலாங்குகளினதும் (EELS) சமன் (SALMON) மீன்களினதும் குடிபெயர்வு பிரசித் தமானவை. விலாங்குகள் நன்னீர்நிலைகளில் வள ரும், விருத்தி செய்யக்கடலுக்குச் செல்லும். உதார ணமாக இங்கிலாந்தில் விலாங்குகள் ஆறுகளிலும் மற்றும் நன்னீர் நிலைகளிலும் வளரும். முதிர்ச்சிய டைந்ததும் அது வெள்ளி நிறம் பெறும். அதனால் வெள்ளி விலாங்கு (SILVER EEL) எனவழைக் கப்படும். இவை அத்திலாந்திக் சமுத்திரத்தை யடைந்து, அதைக் கடந்து, அமெரிக்காவின் புளொ றிடா வளைகுடாவிலுள்ள சார்க்காசா கடலை (SARGASSA SEA) அடைந்து {அத்திலாந்திக் சமுத்திரத்தின் இப்பகுதியில் சார்கசம் (SARG-ASSAM) என்ற அல்கா அதிகஅளவில் காணப்படு வதால் இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது.} அங்கு பெண்கள் முட்டைகளை இட, ஆண்கள் முட்டைக ளின் மேல் விந்துகளைச் சொரிய, முட்டைகள் கருக்கட்டப்படும். இனவிருத்தி செய்தபின் பெற் றோர்கள் இறந்து விடும். முட்டைகள் பொரித்துத் தோன்றும் குடம்பிகள் இங்கிலாந்தை நோக்கித் தமது பயணத்தை ஆரம்பிக்கும். இப்பயணத்தின் போது பல குடம்பிப் பருவங்கள் தோன்றும். ஈற்றில் ஆற்று முகவாய்களை அடைந்து, மேலும் முன் னேறி, ஆறுகளிலும் மற்றும் நன்னீர் நிலைகளிலும் வளரும்.

சமனின் குடிபெயர்வு விலாங்கினதுக்கு நேர் மாறானது. வளர்ச்சி ஏற்படுவது கடலில், விருத்தி செய்வது ஆறுகளில். முதிர்ந்த மீன்கள் ஆற்றுமுக வாய்களை அடைந்து, மேலும் முன்னேறி தாம் பிறந்த இடங்களைச் சென்றடையும். இவை எங் ஙனம் பிறந்த இடத்தை அறிந்து வந்தடைகின்றன என்பதற்கு விளக்கம் இன்னமும் புலப்படவில்லை. பிறந்த இடத்தை அடைந்ததும் வளை தோண்டி, பெண்கள் அதில் முட்டையிட, ஆண்கள் முட்டை களின் மேல் விந்தைச் சொரிந்து அவற்றைக் கருக்கட்டச் செய்யும். இனவிருத்தியின் பின் பெற் றோர்கள் இறந்துவிடும்; வழியிலும் அதிக எண் ணிக்கையில் இறப்பு ஏற்படும். முட்டைகள் பொரித் துத் தோன்றும் குஞ்சுகள் கடலை நோக்கிப் பய ணப்பட்டு அங்கு வளரும்.




ஆபிரிக்க எருமைகள். குடிபெயர்வில் ஈடுபடும்.



ஆண் - யானை சீல்கள் (ELEPHANT-SEALS) போரிடுகின்றன - எல்லைச் சண்டை.




வடதுருவத்தில் வால்றஸ் (WALRUS) கூட்டம். சீல் வகைக்குச் சேர்ந்தவை.



விலாங்கின் நாலு குடம்பிப் பருவங்கள். சார்க்காசா கடலிலிருந்து புறப்படும் பரு வம் முதலாவது, ஆற்று முகவாய்களை அடையும் பருவம் நாலாவது.



டிச் னி ண்டு




கம்பளி சீல்களும் (FUR SEALS), அவை விருத்தி செய்யும் இடமும் குடிபெயரும் திசைகளும்.



கம்பளி சீல் (FUR SEAL) ஆணும், அதன் பெண்சாதிகளும் பிள்ளைகளும். வெண் ணிறமுள்ளவை குட்டிகள். பெண்சாதிமாரை எண்ணிப் பாருங்கள் - மூக்கின்மேல் விரலை வைக்கவேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமொழி

## உங்கள் கவிதைகள்



ஊருக்குள்
உங்கள் கல்லறைகள்
உருக்குலைந்து போனாலும்
மனதுக்குள்
உங்கள் உருவங்கள்
மறக்கப்படுமா?
தீச்சுடர் எரிகிறது.....
மௌனமாய் ஓர் அஞ்சலி
மனதுக்குள்
நிறைவேற்றப்படுகிறது.....

- இராஜகிருபன் -
அல்வாய்.

கல்லறைக் கனவுகள்...
காலத் தீயினில்...
கருகுவதில்லை...
அவை...
கால... வரலாற்றில்
காவியங்களாக...
கருத்தரிக்கின்றன

- நா.சோபினி -

கொடி அசைந்து நின்ற மண்ணில்
கொலையுண்டோர் கல்லறையில்
கண்ணுறக்கம் விட்டெழுந்துமே
கொடுந்தீயாய் கொதித்தெழுந்தார் - இனி,
கொடும்பகையை துயர்சூழும்
எம் வாழ்வு விடிவுபெறும்!

- 'ஆவரங்கன்' -

வெட்டிப்புதைத்தாலும்
வெந்துகொண்டிருக்கும் இலட்சியம்
வெகுவிரைவில் - உன்னை
வேகவைக்கும்!

- பொன்.வாகி -
கோப்பாய்.

சந்ததி வாழ
சமாதி யாகினோம் - நேற்று
சமாதிகள் பெருகிட
கண்ணீர் வடிக்கின்றோம் - இன்று
கண்ணீர் கதைகள்
சரித்திரமாகும் - நாளை
சுதந்திர விடியலை
பார்த்திருப்போம் - என்றும்...

- சரோ தம்பித்துரை -

கைப்பற்றிய பிரதேசத்து
கல்லறை கூட
கனல் கக்கும் - என்பதாலா
கட்டாந்தரையாக்குகின்றாய்?

- நி.மஞ்சு -
கோவையூர்.

கதிரவன் மறைந்தபின்
கொடியேற்றி...
கையில் தீயேந்தி...
கல்லறைக்கு முன்னின்று...
கண்ணீர் சிந்தி...
கதறியழும் நாளை
கொண்டாடியது... அந்தக்காலம்!
இப்போது...?

- இ.ரமணன் -
கரணவாய்.

உணர்ச்சிப் பிழம்புகளின்
உன்னதக் கலைப்படைப்பு
ஓர் இடத்தினில் வெற்றிமுரசொலி
இன்னோர் இடத்தில் அவஸ்தை- முகாரி ஒலி
இரண்டிற்கும் இடையே எம்மவர்
காலத்தின் அலங்கோலத்தால்
கண்ணீர் கதைகளின் சோக நிலையை
கேட்பார் யார் உளர்?...
சொல் மனமே!

- யோ.பிரஷாந்தி -
நல்லூர்.

28 மாதங்களில் கட்டிய கோட்டையை
24 மணித்தியாலங்களில் தகர்த்து
எதிரியை கலங்க வைத்த
நம்மவரின் வெற்றிச் சின்னமிது!

- ச.கார்த்திக் -
நெல்லியடி.

இதுவோ...;
தேச விடுதலைக்காய்
தேகத்தின் மீது ஓர்
'தீ' ஊர்வலம்!
ஆமாம்...
பாசக் கயிறறுத்து
விடுதலைக்காய்...
வீசுங் காற்றுக்குள்;
புகுந்து கொண்ட
புதிய 'புயல்'
எனி...
'தூசி' பட்ட
தேச மெல்லம்
துயர் அறுந்து;
வாசம் பெறும்!
புத்தம் புது;
வேசம் வரும்!!

- ஈழ மேகம் -
யாழ்.

புலரும் கார்த்திகைப் பொழுது - உங்கள்
புன்னகை மறைந்த பூமியிதில்
ஒளிரும் தீபமொன்று ஏற்றிடலாம்...
எனினும்,
எமக்கு உத்தரவாதமில்லை;
இன்னும் சில நாட்களுக்கு.

- முல்லை வளவன் -

எழுச்சியின் விடுதலைத்தீ
மறவர் கரங்களில்
கொழுந்து விட்டெரிவதனால்
நாம் இழந்த ஊர்களோ
நம் கரங்களில்...
அதனால்தானோ
கல்லறையில் விதைக்கப்பட்டவர்களின்
கண்களில்
ஆனந்தக் கண்ணீர்.

- ஈசா -
பூந்தோட்டம்.

மனிதர் புதையுந்தோறும்
மனிதம் பூத்து எழும்
கதை கதையாய்...
விதை விதையாய்...
அப்போது...
கல்லறைகள் கருத்தரிக்கும்;
கரங்களெல்லாம் உரமடையும்;
சுட்டு விரல் சுட்டெரிக்கும்;
'மனிதக்' குழந்தை பிறக்கும்!

- இ.ஜெயக்குமார் -

அவர்கள் சிந்திய
கண்ணீரும்...
அவர்கள் சிந்திய
செந்நீரும்...
அவர்களின் மரணமும்
தான் - இங்கே
புதிய தேசத்தை
ஜனனிக்கச் செய்கின்றன...
நாளை மலரும்
உதயத்தைக் காண...
அதோ! செங்கொடியில்
அவர் முகம் பூபாளமாய்ச்
சிரிக்கின்றது!

- ப.பிறேமலதா -

நீளமான பயணம்... அங்கே
வேள்வித்தீயின் விலை
வேறுவடிவினில் தெரிகிறது...!
எமக்கும்
உணர்வுறுத்துகையில் எம்புகின்றோம்
ஆற்றாமையால் அழுகின்றோம்
இப்போதைக்கு
இதுதான் எங்கள்
புரட்சியின் சின்னம்

- அ.மருதம் கேதீஸ் -

ஆகுதி வேள்வியில்
வீரன்
தனை முடிப்பான்
அவன் ஆவி
உயிர் குடிக்கும்
அச்சூட்டில் குளிர்
காயும் தறுதலைகள்
நாம்......

- சாம் -

கல்லறைப் பூக்கள்
கண்ணீர் சிந்த
கதிர் ஒளியென
கண்மணிகள் எழுந்து
கைகளை உயர்த்த
கருகியது சிங்களம்.
தீ நாக்குகள் பற்றிப் பிடிக்க...
தீர்ந்து போயினர் பேரினவாதிகள்...
தேசம் வெளுத்தது ~ காற்றில்
தேசியக்கொடி அசைந்து ஆடுது!

- சண்டியூர் சங்கர் -

பிரமிட்டுள்...
உறங்க வேண்டிய
பிரபுக்களே!
எங்கள் பிணங்களை
எரித்தும் குளிர்காயும்
கூட்டத்தின் மத்தியில்...
உங்கள் சிந்தனைத்தீயில்
குளிர்காய்கிறோம்

- செ.சுதர்சன் -
உடுப்பிட்டி.

நான் தாண்ட இடத்தில்
இந்த நீண்ட கை...
எப்படி முளைத்தது?
ஒருவேளை என் கண்ணீர் -
வித்தூன்றி விளைந்ததுவோ?
ஆனால் அந்தக் கொடி...?

- பாஷிரன் -

தம்பி போனான் மணலாறு;
தங்கை போனாள் மருதமடு;
நான் மட்டும் இங்கே நின்றேன்
சொல்லவும் முடியுமா
அரக்கரின் பலாத்காரம்?
ஆதிக்க வெறியரின் அடக்குமுறைகளை
அகிலம் அறியும் நாள்
எந்நாளோ?

- நளினி -

மடுக்கோயிலின் மனிதப்படுகொலை
நினைத்தா?
தமிழ்மக்கள் அனைவரும்
தியாக வேள்வியில்
பங்கெடுப்பது நினைத்தா?
அன்று
பறிகொடுத்த மண்ணில்
இன்று
எம் கொடி பறப்பது நினைத்தா?
கல்லறையில் விதைக்கப்பட்டவர்களே
எது நினைத்து
உங்கள் கண்களில்
நீர்த்துளிகள்?

- றதிநீ -
திருநெல்வேலி.

கல்லறைதனில் கலங்கிநிற்கும்
காவிய நாயகரே
கலக்கந்தான் ஏனோ!
பூத்திடும் புது வருடமதில்
புதுத்தேசம் உருவாகும் நாள்
வெகுதூரமில்லை....
கலங்காதீர்!
எங்களின் கொடியிங்கு
ஏறிடும் நாள்
வெகுதூரமில்லை!

- ரி.ஜீவோதயா -
மலவாவி.

இதயம் பகையை இனிதே வென்றது;
உதயம் கண்டது கொடியும் பறக்குது;
சிரசில் பகைக்கரம் தீயினைக் கக்குது;
வலியால் வருந்தியே கண்களும் கலங்குது;
தலைவலி அகற்றிட தமிழ்நதி வருமோ?
தமிழ்த்தாய் மகிழும் திருநாள் எதுவோ?

- தி.க.திருக்குமரன் -
வட்டுக்கோட்டை.


இறந்தவர்களுக்காய் இருப்பவர்கள்
அழுகின்ற காலம் மலையேறி
இருப்பவர்களுக்காய் இறந்தவர்கள்
அழுகின்ற காலம் இது.....!

- சு.க.சிந்துதாசன் -
பொலிகையூர்.

மாசற்ற மைந்தர்களே!
மகத்தான உயிர்ப்பூக்களே!
கலங்குவதேனோ?
இது எங்களின் தேசம்
உங்களின், எங்களின்
கனவுகளை நனவாக்குமட்டும்
நாம் ஓயப்போவதில்லை.
நிம்மதியாகத் தூங்குங்கள்
எம் தேசம்
நாளைய புத்தாண்டில்
மலரப்போவது உறுதி!

-எம்.கார்வண்ணன்-

## மௌனமொழி-63



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது. இதனை வரைந்தவர் மானியூர் ரட்ணேஸ்.

கல்லறை விளக்குள்
கண்ணீர் சிந்துவதேன்?
தீபங்கள் ஒரு போதும்
தீய்ந்து போகா!
ஒரு போதும் ~ ஏற்றும் கொடி
ஓய்ந்து போகாது!!

- சைதன்யன் -

இப்போது உணர்கிறேன்
கைது செய்யப்பட்டு
காணாமல் போவதை விட
களத்தில் நின்று
காவியம் படைத்து
கல்லறையாவது மேலென்று!

- செ.அற்புதன் -
இணுவில்.

எங்களின் கரங்களில்
உத்தம விருட்சங்கள்
விழுது விட்டுத் தூங்குகின்றன.
கல்லறைகளும் கண்ணீரை
காணிக்கையாக்கியபடி.....
மறத்தமிழா!
தேசமீட்புக்காய் தோள் கொடுக்க
சிந்தடா செந்நீரை
செங்கொடி தொடர்ந்து
வானில் பறக்கட்டும்!

- எம்.பாரதிப்பிரியா -
கோண்டாவில்.

சூரியனின் கதிர்பட்டு
சுதந்திரத்தின் கொடி சிலிர்க்கும்,
தேசத்தின் விடுதலைக்காய்
பாசத்தைத் துறந்து
வேள்வித் தீ சுமக்கும் கரங்களை
நேசத்துடன் நினைத்து
விடுதலைக்கு வித்திட்டவர்
கல்லறைகளும் கண்ணீர் சிந்தும்!

- ஆரணி -
குரும்பசிட்டி.

கல்லறையில் ஒருநாள்
கையுயரும்
காவலிட வந்த பேய்கள்
கன்னம் வைக்கையிலே
கரங்களிலே அப்போ
விடுதலை விருட்சம் எழும்பும்
வல்ல படை
எல்லையிலே எல்லையிடும்.
நம்பு தம்பி
நாளைய விடியலில்
கொடி பறக்கும்!

- பண்ணாக நாரதன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | வியா. சனி | | |
| | இராசிச்சக்கரம் | | ரா |
| செவ். கே | | | |
| | சூ | சந். புத. | வெ |

# இந்த வார இராசி பலன்

**04 - 12 - 1999 இலிருந்து 10 - 12 - 1999 வரை**

மாற்றம்: 04-12-1999இல் சந்திரன் துலாம் இராசியில் நிற்கும் (சித்திரை நட்ஷத்திரம்). 05-12-1999இல் புதன் விருச்சிகம் இராசியில் மாறும்.

அரசியல்வாதிகள் தடுமாறுவார்கள். மறைமுகத்திட்டங்களால், மக்களை மயக்கவைக்க முயலுவார்கள். யுத்தக் கொடுமைகளால் மக்கள் கலங்க இடமுண்டு. தொழிலாளர், மாணவர்கள் எதிர்ப்புக்குரல் கொடுப்பது ஜனநாய மரபாக இருக்கும் காலமாகும்.

இந்தியா வலதுகண் வடக்கேயும் - இடதுகண் தெற்கேயும் மாறி மாறி திசைதிருப்பும். போரா? சமாதானமா? பேசலாமா? என சந்தர்ப்பத்தைப் பார்த்தபடி இருக்கும். மேற்கு உலகம் மத்தி - கிழக்கு நாடுகளில் கூடிய கவனம் செலுத்தும். அங்கே வெள்ளம் - காற்று - பூகம்பம் என இயற்கை, செயற்கை நிகழ்வுகள் நடக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

## மேடம்

ஒருவரின் சோகவாழ்வு, தொடர் துன்பங்களுக்கு அவர் வசிக்கும் வீடு, அதிலுள்ள குறைகுற்றங்கள் முக்கிய காரணமாகும். அதை நீக்கினால் அதிலிருந்து ஏன் விடுபடமுடியாது? தொழில் ஸ்தானத்தில் சக்திக்கு மேற்பட்டதைச் செய்வதாக அதிகம் கதையளப்பீர்கள். வாகனத்தால் செலவுகள் அதிகரிக்கும். திடீர் இடாம்பீகச்செலவுகள் ஏற்படும். வேண்டாத ஆசை தீண்டாமல் இருப்பது மேலாகும். சளி, நாரி நோ, கைகால் விறைப்பு, தடிமன் வருத்தலாம். நீதித்துறை, எண்ணெய்த்துறை, கமிஷன்வேலை,போக்குவரத்துத்துறை, கடல்துறையில்ஈடுபாடுடையவர்களுக்கு அதிக இலாபங்கள் வரச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். எதிர்ப்பாலாருடன் கருத்துவேற்றுமை வரலாம். பொறுமை அவசியமாகும். சனீஸ்வரன் தாக்கத்தால் மந்தநிலை கொடுக்கும். ஆலய வழிபாடு தாக்கத்தைக் குறைக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வெள்ளி.*

## இடபம்

ஒருவரின் பிறந்ததிகதி, அவரின் பெயர் அவரை இவ்வுலகத்தில் வசீகரமாக இருக்க உதவிசெய்யும். ஆனால் பிறந்த நேரமோ - விதியின் ஏற்றத்தாழ்வான விளையாட்டை - பலன் ரூபத்தில் சொல்லும். இதை அறியாதவரல்ல நீங்கள். ஆயினும் தொழில் ஸ்தானத்தில் விட்டுக்கொடுத்து நடக்க முயலுங்கள். சங்கீதம், ரீவி எனக் காலம் ஓடச்செய்யும். நெஞ்சு வருத்தங்கள், மனக்கஷ்டம், பொருளால் வேதனை, வயிற்றுக்கோளாறு, பித்த வருத்தங்கள் என்பன கொடுக்கும். அடிக்கடி மனைவியுடன் அல்லது கணவனுடன் கருத்துவேற்றுமை ஏற்படும். செய்தித்துறை, குருத்துறை, வியாபாரத்துறை, மருந்துத்துறை, விவசாயத் துறையினருக்கு இலாபங்கள் அதிகரிக்கும். தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வெள்ளி.*

## மிதுனம்

திருமணப் பொருத்தங்கள் பார்க்கும்பொழுது உண்மைநிலைஉணர்ந்து தெளிவானநோக்கு ஒருவருக்கு இருக்க வேண்டும். ஏன் சோதிடருக்கு சோதிடர் தோஷநிலைகள், கிரகபாவங்கள் மாறுபடுகின்றன என்பதை மக்கள் சிந்திக்க

## சோதிட சஞ்சீவி

வேண்டும். நிதானமான போக்கு, நோக்கு உறுதியான தொழில் சித்திகளைக் கொடுக்கும்காலமாகும். அடிக்கடி ஏதாவது அலுவல்கள் வந்து அங்கும் இங்குமாக அலையச்செய்யும். காசு, கடன், களவு எனப்பலன்கள் உண்டு. கவனமாக இருக்கவும். கறுப்புப் பொருள்கள் தவறலாம், அல்லது இழக்க நேரிடும். சளி, வாய்வு, நெஞ்செரிவு, வயிற்றுக்குழப்பம் கொடுக்கும். மருந்துத்துறை, நகைத்தறை, பத்திரிகைத்துறை, வியாபாரத்துறை தொடர்பானவர்களுக்கு அதிக இலாபங்கள் ஏற்படும். பிரயாணங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்தவும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

## கடகம்

தேடியபொருள் ஓடிவராவிடில் வாடிவிடுவீர்கள். காலத்தில் பருவ காலம். உடன்பிறந்தவர்களுடன் கூடி நாடி வாழ்வதில் ஒரு தனீச்சுவை உண்டு. எது எப்படி இருந்தாலும் - தொழில் ஸ்தானத்தில் உங்களின் ஊக்கத்தால் ஏற்றம் உண்டு. நல்லவர்கள், பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். குடும்பப் பாசத்தால் உதவிகள் கிடைக்க வழி உண்டு. கைகால் விறைப்பு, சளித்தொல்லை, வாய்வுத் தொல்லை என்பன ஏற்படும். வைத்தியம் செய்யச் சுகம் கொடுக்கும். எதிாப்பாலாருடன் பேச்சுவாக்கில் நிதானமாக இருக்கவும். அரசியல் துறை, பத்திரிகைத்துறை, ரீவித்துறை, செய்தித்துறைகள், கோயில் வேலைகள், கடல் தொழில் போன்றவற்றில் ஈடுபாடுடையவர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன்.*

## சிங்கம்

வாழ்க்கையில் எதிர்பாராத விளைவுகளால் மனிதர்கள் திசை மாறி நல்லவர்கள், கெட்டவர்களாக மாறுகின்றார்கள். எமக்குப் புரியாத விதியின் சதியால் சூழ்நிலைகள் மாறுபடலாம். ஆனால் உங்களுக்கு மாற்றங்கள் நடந்தாலும் உறுதிகுலைய மாட்டீர்கள். பெரியவர்கள், நல்லவர்களின் உதவிகள் கிடைக்கும் காலமாகும். உங்கள் தொழில் ஸ்தானத்தில் உங்கள் சாம்ராச்சியம்தான் நடக்கும். உங்கள் சொல்லுக்காக எல்லோரும் காத்திருப்பார்கள். நெஞ்சுச் சளி, கை கால் பிடிப்பு, விறைப்பு, சீதோஷ்ண பீடைகள் அடிக்கடி கொடுக்கலாம். மின்சாரத்துறை, ஆசிரியத்துறை, நிர்வாகத்துறை, வைத்தியத்துறை, விவசாயத் துறை சார்ந்தவர்களுக்கு அதிக இலாபங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன்.*

## கன்னி

மழைகாலம் உடல்நிலையில் அவதானமாக இருக்கவும். இக்காலத்தில் அதிக காய்பிஞ்சுகளை வாங்கக்கூடாது. அதுபோல அளவுக்கதிகமாக சாப்பாட்டுகளைச் சாப்பிடாமல் நிதானமாக இருக்கவேண்டும். தொழில் துறையில் புதிய முயற்சிகளைச் செய்

## மகாதேவா ஜோதிடம்

யவும். உங்களுக்குக் கெடுதி செய்தவர்கள், செய்கின்றவர்களை முறியடித்து வெற்றி சூடுவீர்கள். எதிலும் ஊக்கம், கவனமாக இருக்கவும். இடமாற்றங்கள், தூரதேசப்பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். நாரிப்பிடிப்பு, அலைச்சலால் சலிப்பு, வயிற்றுக்கோளாறு,வாய்வுத்தொல்லை, கைகால் பிடிப்பு என்பன வரலாம். கடல்துறை, நிர்வாகத்துறை, குருத்துறை தொடர்பானவர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள். உங்களைச் சூழ்ந்திருப்பவர்களை நம்பாதீர்கள். பிரயாணம், வாகனங்களில் கவனமாக இருக்கவும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன், வெள்ளி.*

## துலாம்

மனிதர்கள் மனிதர்களுக்காகச் செய்யும் சேவைகளைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. பரிசில்கள் வழங்காமல் இருக்கமுடியாது. ஆனால் உங்களை வாழ்த்தி ஒருவரும் ஏமாற்றிவிட முடியாது. எந்தச்செயற்பாட்டிற்கும் காரணகாரியங்களை அறிந்து நல்லதைச் செய்வீர்கள். புதிய மாற்றங்கள் தேடிவரும் காலமாகும். எதையும் சீர்தூக்கிப்பார்த்து சமநீதியுடன் நடப்பீர்கள். பொருள்களில் அவதானமாக இருங்கள். இடமாற்றங்கள் சகஜமாகும். கண்வலி, மனப்பயம், அலைச்சலால் உடல் களைப்பு, கைகால் விறைப்பு என்பன கொடுக்கும். பத்திரிகைத்துறை, குருத்துறை, மருந்துத்துறை நகைவேலை, வியாபாரத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும். பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளவும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன், வெள்ளி.*

## விருச்சிகம்

இந்த மானிடவாழ்வில் பட்டம், கௌரவம், பொருள், காதல், கவர்ச்சி எல்லாம் மரணம் வரையும்தான். ஆனால் சிலருக்கு மரணத்தின் பின்பும் அவர்களைச் சிலைவைத்து ஞாபகப்படுத்துவது அவர்களின் சேவை, இவர்களின் நன்றிக்கடன் என எண்ணுகின்றோம். இதில் நியாயம் இல்லாமலில்லை. ஆயினும் தொழில் ஸ்தானத்தில் இதைஎல்லாம் கருத்தில் கொள்ளாது கடமையே கண்ணாகச் செயற்பட்டபடி இருப்பீர்கள். மேலதிகாரிகள் வாழ்த்துவார்கள். நண்பர்கள் பாராமுகமாக இருப்பார்கள். வயிற்று வருத்தங்கள், கைகால் விறைப்பு, நெஞ்சுச்சளி, வாய்வுக்குழப்பங்கள் என்பன கொடுக்கும். கடல்துறை, ஆலயவேலைகள், நிர்வாகத்துறை தொடர்பானவர்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன், வெள்ளி.*

## தனுசு

எவரும் அடுத்தவரை நம்பிவாழ்வதைவிட தன்னை, தன் உழைப்பை நம்பி வாழ்வதுவே மேலாகும். தொழில் ஸ்தானத்தில் எல்லோரும் வாழ்த்துவார்கள். பெரியவர்கள், மேலதிகாரிகள் வாழ்த்துவார்கள். நண்பர்களை நம்பமுடியாது. கொடுத்த பொருள் வராது கலங்கவேண்டி வரலாம். அடிக்கடி பதற்றப்படாமல் எதிலும் நிதானமாக இருக்கவும். வரவுக்கு மீறிய செலவுகள், பொருள் களவு, வாகனச் செலவு என்பன சர்வசாதாரணமாகும். கைகால் உளைவு, பித்த ரோகங்கள், சளி, வாய்வுத்தொல்லைகள் கொடுக்கும். நாரி, வயிற்றில் அடிக்கடி நோ வந்து போகும். கடல் துறை, போக்குவரத்துத்துறை, செய்தித்துறை, ரீவி போன்ற துறையினருக்கும் வியாபாரிகளுக்கும் அதிக இலாபங்கள் கொடுத்தபடி இருக்கும். பிரயாணங்களைத் தவிர்ப்பது நல்லது.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளி.*

## மகரம்

எதையும் உன்னிப்பாகக் கவனிப்பதும், சிந்திப்பதும் உங்கள் இயல்பாக இருக்கின்றது. ஆயினும் தொழில் ஸ்தானத்தில் உழைப்பில் நிதானமாக இருக்கவும். உழைப்புக்குத்தகுந்த இலாபங்கள் கொடுக்கும் காலமாகும். குடும்பச்செலவுகள் அதிகரிக்கும். ஆடை அணிகள் செலவுகள், இடாம்பீகச் செலவுகள், வாகனச்செலவு அதிகரித்தபடி இருக்கும். பாசமொன்று நேசமற்று வசைபாடும். கொஞ்சம் பொறுமையாக இருக்கவும். சளி, கைகால் விறைப்பு, தலையிடி, சாப்பாட்டில் வெறுப்பு, வயிற்று வருத்தங்கள் கொடுக்கும். வியாபாரத்துறை, நீதித்துறை, மருந்துத்துறை, குருத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு அதிக இலாபங்கள், மாற்றங்கள் கொடுக்கும். தூரதேசப்பிரயாணங்களைத் தவிர்க்கவும். அல்லது கஷ்டங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, வியாழன், வெள்ளி.*

## கும்பம்


கார்த்திகை மாதம் பிள்ளையார் கதை - மார்கழி மாதம் திருவெம்பாவைப் பாட்டு - கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்மஸ் பண்டிகை. குளிர்காலம், மழைகாலம் மனிதர்கள் தெய்வீகத்துடன் தொடர்புபட்டு தமது துன்பங்களை குறைத்துக்கொள்ள வைக்கப்பட்டுள்ள முறை அருமையானது. தொழில்துறையில் ஒரு மந்தப்போக்கு இருக்கும் காலமாகும். நீங்கள் தெய்வ வழிபாட்டுடன் உங்களைச் சமநிலைப்படுத்தி ஒருவாறு இந்தக் குளிர் காலத்தை சமாளித்துவிடுங்கள். குடும்பத்தில், தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்பாலார்கள் எடுத்தெறிந்து பேசுவார்கள். கைகால் அடிபாடு, வீக்கம், சளித்தொல்லை, நாரிப்பிடிப்பு என்பன கொடுக்கும். தூரதேசச்செய்திகள்வரும். போக்குவரத்துப்பகுதி, குருத்தொழில், செய்தித்துறை, அச்சுப்பகுதிகளில் நன்மையான பலன்கள் கொடுக்கும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்:-ஞாயிறு, வியாழன்.*

## மீனம்

உழைப்பை உயர்வாக எண்ணும் நீங்கள் சிலர் ஏமாற்றுவதைப்போல் ஏமாற்றக்கூடாது. கலியாணத்தில் பொன்னம்மாவின் குறிப்புக்குப் பொருத்தம் பார்த்துவிட்டு செல்லம்மாவைக் கட்டிய கதைகள் ஏராளமாகும். எதையும் தொழில்ஸ்தானத்தில் பதற்றப்படாமல் செயற்படுத்த முனையுங்கள். உலகத்தில் எத்தனை ஏமாற்றுக்காரர்கள் இருக்கின்றார்கள்? தொழில் ஸ்தானத்தில் புதிய கொள்கைகளைக் கையாளுவீர்கள். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். புத்திரர்களுக்காக அதிக செலவுகள் செய்தபடி இருப்பீர்கள். பெரியவர்கள் உதவுவார்கள். குடும்பத்தில் கலகலப்பு இருக்கும். பிரயாணம் என எண்ணாமல் இருக்கவும். சளித்தொல்லை, நரம்புச்சோர்வு, நாரிப்பிடிப்பு எனக் கொடுக்கும், மல, சல வருத்தங்கள் வரலாம். வியாபாரம், சட்டத்துறை,எண்ணெய்த்துறை, கூலித்துறையினர் அதிக இலாபங்கள், மாற்றங்களை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:-ஞாயிறு, வியாழன்.*



# என் பிரிய பூமிக்காக...

## விஞ்ஞான ரீதியான கற்பனைத் தொடர்

**2**

யூலியனின் பிரிவில் தற்போது எந்தப் பாடவேளை நடைபெற்றுக் கொண்டிருக்கும் என்ற கேள்வி எழுந்தது. கல்வியகத் தலைமைப் பிரிவில் விசாரித்துவிட்டுச் செல்வது சிறந்தது என்று சிசிலியாவுக்குத் தோன்றியது. தகவற் பிரிவில் கணனி மனிதன் XO இடம் யூலியனைப் பற்றிய தகவல்கள் தேவையெனச் சொன்னாள்.

"நல்லது அம்மணி சில நிமிடங்கள் காத்திருங்கள்... தகவல்கள் தரப்படும்" XO பதிலளித்து உள்ளே சென்றது. ஓரிரு நிமிடங்கள் கழிந்தன. கணனி மனிதன் கொண்டுவந்த தகவல்கள் நிரம்பிய தாளைப் பெற்று நன்றி சொல்லித் தலைமைப் பிரிவிலிருந்து வெளியே வந்தாள். வெள்ளைத் தாளில் யூலியனைப் பற்றிய தகவல்கள் நிரம்பியிருந்தன.

*பெயர்:* யூலியன்
*பிரிவு:* XIXa
*பாடவேளை:* 'இயற்கை'
*இடம்: கட்டடத்தொகுதி எண் III இற்குரிய 'பசுமை' பூங்கா.*

தலைமைப் பிரிவிலிருந்து பூங்காவுக்கு மின் ஊர்திப் பயண வசதி இருந்தது. 'நடந்து செல்வதே நல்லது' எனத் தீர்மானித்த வேளையில் தூரத்தே சக ஆசிரியை எலிஸபெத் நடந்து வருவது தெரிந்தது.

கையோடு தள்ளிக்கொண்டு வருகின்ற புத்தகங்கள் நிறைந்த சிறு தள்ளுவண்டியுடன் இவளை நோக்கி வந்துகொண்டிருந்தாள் எலிஸபெத். நடையில் வழமையான உற்சாகம் நிரம்பியிருந்தது.

"காலை வந்தனங்கள்! [illegible] இந்தப் பக்கமாய்..."

"காலை வந்தனங்கள் எலிஸபெத்...தகவற் பிரிவுக்குப் போயிருந்தேன்..."

"நான் நூலகத்தில் இருந்து வருகிறேன்...."

"என்ன இது?கனமான முன்னர் பார்த்திராத நூலாயிருக்கிறதே!..."

"ஓ! இது பழைய உலக ஒழுங்கு முறையும், மனிதசமுதாயமும்..." என்ற நூல். ஏறத்தாழ 2300 ஆண்டுகளுக்கு மேல் நிலவிவந்து பின்னர் சீர்குலைந்துபோன எங்கள் மூதாதையரின் வாழ்வு பற்றி இந்நூல் சொல்கிறது..."

"யார் எழுதியது...?"

"ஆசிரியரைத் தானே கேட்கிறாய்"? கம்பியூட்டர் வகைZW இனது முயற்சி இது".

"வருங்காலம் மனிதனின் முயற்சிகளையே மறந்துவிடுமோ என்று பயமாய் இருக்கிறது." சிசிலியா அலுத்துக்கொண்டாள்.

"தொழினுட்பப்பிரிவின் கணனி எழுத்தாளரின் முதல் முயற்சி இது. தகவல் நிறைந்த கணனியும் தானியங்கி எழுத்தியந்திரமும் இணைந்து [illegible] விடயங்களைத் தலைப்பு வாரியாக ஒழுங்குசெய்து தலைப்புகளிட்டு அச்சுப்பதித்து, பிழைதிருத்தி நூலுருவாக்கி... உண்மையிலேயே பாராட்டத் தகுந்த தொழினுட்ப சாதனம் தான்..."

"அபாரம்தான்... அது சரி நீ எங்கே போகிறாய் இப்பொழுது?"

"பசுமை பூங்காவுக்கு"

"நானும்தான். நல்லதாயிற்று. உன்பேச்சுத்துணை மகிழ்ச்சியானது..."

"நன்றி. எனக்கும் தான்"

"பூமிக்கிரகத்தினுள் நாசகாரிகளின் வரவு அதிகரித்துள்ளதாகப் பேசிக்கொள்கிறார்களே சீயா; நீ ஏதாவது அறிந்தாயா?"

சிசிலியாவுள் இதுவரை நிலவிய இயல்புத்தனம் நீங்கி எச்சரிக்கையுணர்வு மேலோங்கிற்று.

"நீ எதைச் சொல்கிறாய்?..."

" 'மேய்கு' மலைத் தொடரின் ஓரமாய் நேற்று ஓர் ஒளிப்பிழம்பு வானில் தோன்றி மறைந்ததாய் மந்தை வளர்ப்புப் பண்ணைகளின் ஊழியர்கள் சொன்னதாய் தொலைக் காட்சியில் அறிவித்துள்ளார்கள்..."

"அப்படியா..."

"ஆம். மேலும் நாசகாரிகளின் ஊடுருவல் நகரங்களிலும் நடந்திருக்கலாம் என்று பாதுகாப்புப் பிரிவினர் ஐயுறுகின்றார்களாம்... அதனால் மக்களை எந்தச் சிறு அசாதாரண நிகழ்வையும் தமக்குத் தெரிவிக்குமாறு மீள மீள வலியுறுத்தியுள்ளார்கள்"

"அசாதாரணமானது என்று எதைக் கருதுகின்றார்களாம்?"

"வழமைக்கு மாறான நிகழ்ச்சிகள், மனிதர்கள், செயற்பாடுகள் என்பவற்றைக் குறித்திருக்கலாம்..."

"மனிதர்களையும் கூடச் சந்தேகப்படுவார்கள் என்று நினைக்கின்றாயா?"

"ஏன் முடியாது... அதீத சக்தி வாய்ந்த நாசகாரிளெனின் மனிதர்களை அவர்களறியாமலே அடிமைப்படுத்தித் தம் செயலுக்காய் பயன்படுத்திக் கொள்ளலாம்தானே!......"

"நீ சொல்வதிலும் உண்மையிருக்கிறது எலிஸபெத்..." சிசிலியா சிந்தனையில் ஆழ்ந்தாள். அவள் முகங்கொடுத்துள்ள பிரச்சினையை சற்றே ஆழமாய் விசாரிக்கவேண்டிய கடமை கட்டாயமானது என்பது அவளுக்குப் புரிந்தது.

**ச.குமுதினி**
(சங்கத்தானை)

"இதோ பூங்கா வந்துவிட்டது. நான் இந்த ஆசனத்தில் இருந்து வாசிக்க விரும்புகிறேன்..... நீ?" வினவினாள் எலிஸபெத்.

"நான் என் மாணவன் ஒருவனைச் சந்திக்க வேண்டியுள்ளது....."

"சரி, சென்று வா. வந்தனங்கள்!"

"வந்தனங்கள் எலிஸபெத்..."

சிசிலியா பூங்காவினுள் நடக்கத் தொடங்கினாள். சிறுவர்களும் சிறுமிகளும் உருவாக்கிய ஆரவாரம் மரங்கள் செடிகளில் பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தது.

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திடீர்த் திருப்பங்கள்!**
**இரத்தத்தை உறையவைக்கும் திகில்!**
**விளங்காத தொழில்நுட்பம்!**
**அதிஉச்ச விறுவிறுப்பு!**
**மேலும் பல நவீன உலக நடப்புகள்...**

பாகம் II

# வெள்ளை றோஜா முள்

2

காரில் குளிரூட்டியின் குளுமை; கரோலின் கலகலப்பு; கண்முன்னே அவள் பரப்பி வைத்த வாசனை றோஜா மலர்கள்; முன்னே விரியும் வீதியில் விதவிதமான வாகன அணிகள்.

நிதானமாகக் காரைச் செலுத்திக் கொண்டிருக்கும் கரோலின் விழிகள் முன்னேயும் பக்கவாட்டிலும் சுழன்றபடியும் - கண்ணாடியில் பின்னே தொடரும் வாகனங்களை ஆராய்ந்தபடியும் தான் இருக்கும். எனினும் அவள் தனது பதற்றத்தை வெளிப்படுத்தி டானியலின் நிம்மதியைக் கெடுப்பது கிடையாது. அவனை மென்மலராகப் பேண முயல்வதில் அவளுக்கு நிகர் அவளேதான்.

ஏதாவது ஆபத்து வந்தாலும் அதை மதிநுட்பத்துடன் வெல்லும் சாதுரியம் அவளிடம் வாய்த்து இருந்தது. மன நிலை பாதிக்கப்பட்டதற்கான எந்தவொரு அறிகுறியையும் அவள் அண்மைக்காலமாக வெளிப்படுத்தியது கிடையாது.

டானியல் றோஜா மலரொன்றை அவதானமாக எடுத்து மோந்துபார்த்தான். அதன் வாசனை அவனைக் கிறங்கடித்தது. அதனை எடுத்துக் கரோலின் கன்னத்தில் வருடிக்கொடுத்தான். அவள் நெஞ்சு குளிரப் புன்னகை பூத்தாள்.

"கரோல்! மலர்களை மட்டும் பறித்தால் போதாதா? இலைகளும் முட்களும் சேர்த்து எதற்கோ?"

"மலரினைக் காக்க முட்கள்தான் முக்கியம். இன்றேல் இதழ் இதழாய்ப் பிய்த்துப்போட்டு விடுவார்கள். இயற்கையின்கொடை இது" என்றாள்.

கார் வளைவில் திரும்பும்போது பகீரென்றது அவளுக்கு. அருகே வரும் கார்ச் சாரதியின் கையிலோ துப்பாக்கி! ஏன் அதை அவன் அப்படி எடுத்து வருகிறான்? அது அனுமதி பெற்ற துப்பாக்கியா? இல்லை கள்ளத் துப்பாக்கியா? அதன் இலக்கு? ஏன் வெளிப்படையாக வைத்திருக்கிறான்?...

டானியலிடம் எதுவும் பேசவில்லை அவள். சற்றுச் சீரியஸ் ஆகிவிட்டாள். பாவம் அவளுக்குத்தான் பாதுகாப்புக்காக துப்பாக்கி வைத்திருக்க அனுமதிகிடைக்கவில்லை. கோரிக்கையை அதிகாரிகள் மறுத்துவிட்டமை அவளைப் புண்படுத்தி இருந்தது. இதனால் டானியலும்கூட எச்சரிக்கையாத் துப்பாக்கி இன்றியே வாழப்பழகிக்கொண்டான்.

வாகன அணி சீராக அசைந்து கொண்டிருந்ததால் அவனும் அவர்களுக்கு அருகிலேயே வெகுநேரமாக வந்துகொண்டிருந்தான். அவள் பாதையைத் திசைதிருப்பத் தயாரானாள்.

* * *

இனிக்க இனிக்கக் கலகலப்பாகப் பேசியபடி வந்தவள் திடீரென இப்படிச் 'சீரியஸ்' ஆகிவிட்டது டானியலுக்குச் சங்கடத்தையே கொடுத்தது. அதற்கான காரணத்தை அவன் அறிந்திருக்கவில்லை. இப்படியான வேளைகளில் அவனும் அவளைத் துளைக்காமல் தந்திரமாக ஒதுங்கி இருந்துவிடுவான்.

எனவே அவளது மனம் பண்ணைக்குப் பயணமானது. அங்கே அவன் வாழ்ந்த இதமான வாழ்க்கை கண்ணுக்குள் நிழலாடியது. இயற்கையின் அரவணைப்பும், பிராணிகளின் அன்பும், உழைப்பும் உறுதியும் நிரந்தரம் என்று நம்பி வாழ்ந்தவன் அவனல்லவோ? இன்று என்னதான் மாளிகை வாழ்க்கை என்றாலும் அது ஒரு சிறைவாழ்வுதான் என உணர்கிறான் அவன்.

எனினும் கரோலின் மனச்சிறையில் எல்லையற்ற அன்பு பரந்துகிடப்பதனை அவன் அறிவான். தன் உயிரைக்காக்க அவள் செய்த தியாகங்களை அவன் உணர்வான். இருவரும் இணைந்து எதிரிகளுடன் போராடிய காலங்கள் - இப்போது நினைத்தால் இனிக்கவே செய்கின்றன.

அவளது மனதைப் பாதிக்காத வகையில் தந்திரமாகப்பேசி மீண்டும் பண்ணைக்குத் திரும்பிவிட வேண்டும் என்பது அவனது மனதின் அடித்தளத்தில் புதையுண்டுகிடக்கும் அவா. அதுதான் அவர்களது காதலின் ஆரம்ப இடமும் கூட. ஆனால் சிக்கல்களும் அங்கேதான் வெடித்தன என்பதால் கரோலின் மனநிலையை அது பாதிக்கும் எனப் பயந்தான் அவன். பண்ணைப் பேச்சே அவளிடம் எடுத்தது கிடையாது.

பழங்கதைகளை இயன்றவரை அவளோடு பகிராது தவிர்க்கவே அவன் விரும்பினான். பழங்கதைபேச இடைக்கிடை தொலைபேசியிலோ, நேரடியாகவோ எமிலி வந்து வாய்ப்பாள். இவர்களால் ஜோர்யை இழந்துநிற்கும் அவளிடமும் அவன் சார்ந்த கதைகளை அதிகம் பேசமுடியாது.

* * *

எமிலி இப்போது பத்திரிகை உலகில் பிரவேசித்து இருந்தாள். ஜோர்ஜின் வேலையைச் செய்வதில் அவளுக்கு ஆத்ம திருப்தி கிடைத்தது. பகிரங்க லைசன்ஸ் பத்திரிகைத்துறைதான் என்றாலும் துப்புத்துலக்குவதிலும் கூட அவள் தனது காலடியை பதித்தே இருந்தாள்.

அத்துறையில் கரோலின் அபார சிந்தனைச் சக்தியும்கூட அவளுக்குத் துணைபோகத் தவறவில்லை. பழைய கேஸ்கள் பலவற்றில் சில அவள் கைக்கு வந்திருந்தன. சிலவற்றைத் துலக்கி எமிலி வெற்றியும் கண்டுவிட்டாள்.

முன்பெல்லாம் துலக்கப்படாத கொலைகள் சுழியன்ஸின் தலையில் விழுத்தப்படும் - பழி சுமத்தப்படும். கோப்புக்களை மூடிவிட அது சுலபமாகப்பட்டது. கொள்ளைகள் கூட சுழியன்ஸிடம் விடப்பட்டே தீர்க்கப்பட்டன.

யார் அந்தக் சுழியன்ஸ் என்பது கரோலின் சாதுரியத்தால் வெளியிடப்பட்டுப் போய்விட்டதே. றொப் மரணத்தைத் தழுவி இருந்தான். இருகால்களையும் இடுப்புவரை இழந்து மைக் சக்கர நாற்காலியில் ஆயுட்சிறையில் வாடுகிறான். அதற்குப்பின்பு தொடரும் கொலை,கொள்ளைகளை எவர் தலையில் திணிப்பது?

சிறையில் பலநாள்கள் தொடர்ந்து மைக்கைப் பேட்டிகண்டு எமிலி வரைந்த கட்டுரைகள் பத்திரிகை விற்பனையைத் தூள்கிளப்பிவிட்டன. மைக்கிடம் கேள்விக்கணைகளைத் தொடுத்துத் தொடுத்து அவனைப் பேசவைத்த போதே அவளது அபார திறமை-அவளுக்கே தெரியவந்தது. அதுதான் துப்புத் துலக்குவதற்குமே அடியெடுத்துக் கொடுத்தது.

அமெரிக்காவையே ஆட்டிப்படைத்த மைக் இருகால்களையும் இழந்து, சொத்து சுகம் இழந்து, சல்லிக்காசுக்கும் வழியின்றி ஆயுள்தண்டனை பெற்று, பெட்டிப்பாம்பாக அடங்கிப் போனான் என்றுதான் எமிலி நினைத்தாள். அவன் - தனது உத்திகள், செயல்கள், சாதனைகள் என்று எல்லாவற்றையும் ஒன்றும்விடாமல் அவளிடம் கொட்டித் தீர்த்தான். எல்லாமே பழைய பாணியும் காலம்கடந்த உத்திகளும் எனக் கருதித்தான் மைக் அவற்றை அவிட்டுவிட்டான்.

ஏற்கெனவே கால் இழந்த காயங்கள் ஆறிவரும் போதே - இரகசியப் பொலிசாரிடம் மாட்டுப்பட்டுத் தவித்துத் தவித்துக் கொட்டித் தீர்த்த கதைகள் தான் அவை என்றாலும் - அவ்வறிக்கைகள் எமிலியின் கட்டுரைகள் போன்று சுவாரசியமாக அமையவில்லைத்தான்.

மைக்கினால் ஜோர்ஜ் கொல்லப்பட்ட கட்டங்களை எமிலி வரையும் போது கட்டுரைத்தொடர் உச்சம் பெறத் தவறவில்லை. இப்படி ஒரு கிரிமினல் வரலாறு உலகினில் எழுதப்படவில்லை.

சக்கர நாற்காலியில் இருக்கும் மைக்கின் படங்களைப் பத்திரிகைகள் பிரசுரித்து இருந்தன. இளவயதின் மிடுக்கு அதில் தெரியாமல் இல்லை. அடர்ந்ததாடி முகத்தை உருமாற்றி இருந்தது. எனினும் முன்பு அவனைத் தெளிவாகக் கண்டவர்கள் எவர்?

அவனால் பாதிக்கப்பட்டவர்கள் ... சபித்தார்கள். அவனால் பாதிக்கப்பட்டவர்களைவிட - அவன்மீது பழி போடப்பட்டு - இப்போது அவனிடமிருந்து விடுவிக்கப்பட்ட கேஸ்கள்தான் அதிகம் உருவாகிக்கொண்டு வந்தமைதான் மூடிய கோப்புக்கள் பலவற்றையும் திறக்கவேண்டிய நிலைமைகளைத் தோற்றுவித்துவிட்டன.

இதனால் அவனைத் திட்டித் தீர்த்த - பாதிக்கப்பட்ட - பலரும் அவன் மீது அனுதாபத்தையே தெரிவிக்க வேண்டிய நிலைமை எழுந்துவிட்டது. இந்த நிலைமையில்தான் எமிலி சாதுரியமாகத் துப்புத் துலக்கவும் அந்தக் கோப்புகளுக்குள் புகுந்துவிடவும் முடிந்தது.

பல பொலிஸ் அதிகாரிகள் மற்றும் நீதிபதிகளின் தீர்ப்புக்களை எமிலியின் துப்புத் துலக்கும்பணி மீளாய்வுசெய்ய வைத்தது. அவள் இப்போது படு பிஸியான பேர்வழி. என்றாலும் கரோல்-டானியல் இருவருக்கும் மிக நெருக்கமாகவே இருக்கிறாள். இயன்றவரை ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் அவர்களிடம் வந்துவிடுகிறாள்.

தம்மைச் சூழ ஏதாவது ஆபத்துக்கள் உருவாகும் வாய்ப்புகள் எழுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் பணியை அவர்கள் எமிலியிடமே தந்துவிட்டனர். அத்தோடு அவளின் ஆலோசனைகளையும் தட்டிக்கழிக்காமல் ஏற்பதில் கரோலுக்கு இணக்கம் உண்டு.

* * *

பண்ணைப்பக்கம் பற்றி டானியல் எமிலியுடன் விரிவாகப் பேசிஇருந்தான். காலங்காலமாக அவன் கைப்பட வளர்ச்சிகண்ட ஆயிரம் ஏக்கர் பண்ணை அது அல்லவா? அதில் வாழும் காலம் எவ்வளவு நிம்மதியாக இருந்தான்?

அங்கே என்னதான் குறைவு இருந்தது? விவசாயப் பயிர்கள், பழமரங்கள், கால்நடைகள், நீரோடை போன்றவற்றோடு காட்டுப் பயிர்களும் கூட ஒருபுறம் ஓங்கிநின்றன.

தற்போது கவனிப்பாரற்றுக் கிடப்பதால் முழுவதுமே காடுபத்திக் கிடக்கும் என்று கவலைப்பட்டான் டானியல்.

எப்படியும் ஒருமுறை போய்ப் பார்த்துவிட்டு வரல்வேண்டும். அதற்கான கரோலின் அனுமதியைப் பெற்றுத் தரத் தான் தந்திரமாக முயற்சி செய்வதாக எமிலி டானியலிடம் உறுதி தந்திருந்தாள்.

சுழியன்ஸ் புயலாகப் புகுந்த இரவில் நீண்டகாலம் வாழ்ந்து வந்த அந்தப் பண்ணையைத் திடீரெனத் துறந்து ஓடவேண்டி வந்துவிட்டமைக்காக டானியல் இப்போது கலங்குகிறான்.

உயிர் போகாமல் இன்றும் வாழக் கொடுத்து வைத்தமைக்காக கரோலுக்கு நன்றிசொல்லி அவள் நிம்மதிக்காக சற்று மனதினைக் கட்டுப்படுத்தும்படி எமிலி ஆலோசனை தெரிவித்தாள்.

இவ்வாறு பண்ணையையும் எமிலியையும் சுற்றிவந்த டானியலின் மனதில் ஒருபொறி தட்டிற்று. ஒரு நாள் இரவில் கரோலுக்குத் தெரியாமல் பண்ணைக்குப் போகவேண்டும். ஆனால் விடிவதற்குள் திரும்பிவிட முடியாதே. அதுதான் சிக்கல்.

அத்தோடு இன்றுவரை கரோல் அவனைத் தனியே எங்கும்போக அனுமதித்ததில்லை. அவளும் எங்கும் தனியே செல்வதில்லை. ஒளித்துப் போய் அகப்படலாமா?

சிந்தனைத் தொடரை அறுக்கும் வகையில் ஓர் உப வழிக்கு கரோல் சடாரெனக் காரைத் திருப்பிவிட முயன்றான். முன்னாலும் பின்னாலுமாக இரு வாகனங்கள் அதற்குத் தடைபோடுமாப்போல் இடைமறித்து நின்றன. சாலையில் போக்குவரத்துத் தடங்கல் ஏற்பட்டது.

* * *

மைக்....

சக்கர நாற்காலியில் இருந்தவாறே கூரியகற்கள், உலோகத் துண்டுகள் என்பவற்றை இலக்குத் தவறாமல் எறியும் உத்திகள்பற்றி சக கைதிகளுக்குப் பயிற்சி கொடுத்துக்கொண்டிருந்தான்.

சுழியன்ஸில் ஒருவனான மைக் சிறைக்கு வருகிறான் என்றதுமே கைதிகள் பாடுகொண்டாட்டம், அங்கே பலவகைக் கிரிமினல்களும் வந்து போவார்கள்; மீண்டும் வருவார்கள்.

மைக் ஆயுள் முழுவதும் எவ்வளவோ பேரம்பேசி, எத்தனையோ கடினமான இலக்குகளை எட்டிச் செய்த கொலைகள், உழைத்த உழைப்பு எல்லாவற்றையும் மிஞ்சும் வகையில் ஒரு கொலையிலோ கொள்ளையிலோ அதிகம் சேர்த்துவிட்டவர்கள்கூட சிறையில் இருந்தார்கள்.

ஆனால் அதற்காக மைக் வருந்தவில்லை. காரணம் அவனது பெயர் கேட்டு உலகமே நடுங்கியது உண்மை. அவனது உத்திகள் நுணுக்காமானவை. பிடிபடாதவை. இந்தக் கரோல் மட்டும் சந்திக்காவிட்டால் இன்னும் சுழியன்ஸ் வீதி உலகினில தொடர்ந்திருக்கும்.

மு.சிவநேசன்

பயிற்சிகொடுக்கும்போதும் - ஒவ்வொருமுறை இலக்குகளை நோக்கி எறியும் போதும்-'கரோல்'என அவன் பற்கள் நறுமும். 'நீ நிம்மதியாக வாழ விடமாட்டேன்' எனத் தனக்குள் அவன் சொல்லிக்கொள்வான்.

கால் இழந்து வலுவிழந்து சக்கர நாற்காலியில் ஆயுள்சிறையில் வாடும் இவனால் இனித் தமக்கு ஏதும் ஆகாது என்றே கரோல் - டானியலும் எமிலியும் நினைக்கிறார்கள். அவர்களுக்கோ பிறஎதிரிகள் கிடையா.

'கரோல் - நீ டானியலைப் பிரிய வேண்டும்! - தனித்து வாடல் வேண்டும். உனது வங்கி லொக்கருக்குள் ஒரு றோஜா முள் மட்டும் எஞ்சவேண்டும்!'

நறுமினான் மைக்...

(தொடரும்)






## முச்சந்தி....

(V ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கும் கற்பூரம் மாதிரி மனதும் வேகிக் கொண்டிருந்தது.

யுத்தத்தின் கரங்களுக்குள்ளே அடிபட்டுக்கிடக்கும் உறவின் பிணைப்புக்கள் சேர்ந்துகொள்ளும் நாளை எதிர்பார்க்கிறது இதயம்.

இறைவனிடம் இறைஞ்சியே காலத்தை ஓட்டும் பெரியதம்பியின் நினைவுகள் விழியோரம் நீரரும்பவைக்கின்றன. இங்கே மனம்விட்டு அழலாம். பக்திக்காக அழும் பரம பக்தன் என்று சனக்கூட்டம் எண்ணிவிடும். ஆனால் வீட்டில் மனிசியின் ஆயிரம் கேள்விகளுக்கு இரண்டாயிரம் பதில் சொல் வேண்டிவரும். நினைக்க நினைக்க நினைவுகள் பெருகிச்செல்கின்றன. வெயிலும் கொடுமையாக இருக்கிறது. எழுந்து நடக்கத் தொடங்குகிறேன். கால் நடப்பதாக இல்லை. மனது வேதனைப்பட்டு அடியெடுத்து வைக்கிறது.

தேநீர்க் கடையை நோட்டமிடுகின்றேன் - வாசு தென்படுகின்றானா என்று. பூசை முடிந்து சனக்கூட்டம் திரும்புவதற்கு நேரமிருந்தது. காவலரணைச் சுற்றி வழமையான பொழுதுக்கு மாறாக அதிக சனக்கூட்டம் நின்றிருப்பது தெரிந்தது.

"என்ன தம்பி?"

அந்த இளவயதுப் பெடியன் என்னை ஒருமாதிரியாகப் பார்த்தான். இந்தக் கிழத்துக் இது தேவையா என்பதுபோல இருந்தது.

"பெடியனாம். சந்தேகத்தில செக் பண்ண கூப்பிட்டிருக்கிறாங்கள். குப்பி கடிச்சிட்டுதாம் பெடியன்"

நெஞ்சு நெருஞ்சி முள்ளுப்பத்தைக்குள் விழுந்துவிட்டமாதிரி இருந்தது. இடைவெளியை நீக்கிக்கொண்டு பார்க்கின்றேன்.

செத்துப்போன உடலை ஒருவன் இடுப்பில் கயிறு கட்டி இழுத்துக் கொண்டிருந்தான். காற்சட்டைப் 'பொக்கெற்' வழமையைவிட வித்தியாசமாக இருந்தது. கால்களை ஊண்டி மிக உயரமாகப் பார்க்கின்றேன். அந்த வாட்ட சாட்டமான வடிவான தேகம்...

'வாசு என்ர மகனே!'

நான் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. உள்ளே ஓலமிட்டு அடங்கிப் போன அந்த வார்த்தைகள். என் இதயத்திற்கு அடிகொடுக்க சுருண்டு போய் விழுகின்றேன்.

....கண்களைத் திறந்தபோது மனசி கால்மாட்டிலிருந்து எழும்பி "என்னப்பா செய்யுது?" என்று கேட்டாள். எனக்குள்ளே அடங்கிப்போன வார்த்தைகள் எதுவும் வெளியேவருவதாக இல்லை.

"உங்களுக்கு எத்தனதரம் சொல்லுறனான் உந்த வெயிலுக்க போகாதேங்கோ எண்டு. பிறசர் தூக்கியடிச்சுப் போட்டுது. கொஞ்சநேரத்துக்க எவ்வளவு பாதைச்சுப்போனம்"

'எடியேய் நீ வளர்த்த மகன் செத்துப் போனானடி' இவளுக்கு எப்படிச் சொல்வது? எங்கிருந்து தொடங்கி எங்கே முடிப்பது? தாங்குவாளோ?

வதனி கோயிலால்வந்து புதுப பூ போல அழகாக இருந்தாள். சிரித்தபடி இருக்கிறவளிடம் எப்படிச்சொல்வேன்?

'உன்ர ஆசைமச்சான் செத்துப் போனானடி' என்று சொல்லிக் கதற வேண்டும் போல... ஆனால் சொல்ல முடியவில்லையே! ஒரு வார்த்தை கூட சொல்ல முடியவில்லையே!

"இஞ்சாருமப்பா உதில் ஒரு பெடியன்..." மெதுவாக ஒவ்வொரு வார்த்தையாகமெண்டு விழுங்குகின்றேன்.

"யார் பெத்த பெடியனோ...? இஞ்ச வந்து செத்திருக்கு... உதுகளை ஏன் போய் பார்த்தனியள்? நீங்கள் உதுகளைப்பாத்தா தாங்க மாட்டியளல்லே... ஏனப்பா போனனியள்...? எனக்குத் தெரியும். வாசுவை நினைச்சிட்டியள்...உங்களுக்கு விசர். அவனேனப்பா இஞ்ச வாறான்? பேசாமல் மருந்தைப் போட்டுட்டுப் படுங்கோ...இஞ்ச தேத்தண்ணீர் வச்சிருக்கிறன். என்னப்பர் யோசிக்காதேயுங்கோ"

இனி நான் என்ன பேச? எதைப் பேச? எதை, எப்படி என்னவென்று சொல்வது?முருகா இது என்ன முடிவு?

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய காயங்கள் ஆபத்தாக முடியலாம்!

எமது அன்றாட வாழ்வில் துருப்பிடித்த கம்பிகள், ஈர்க்குத்தடி, மண்வெட்டி, விலங்குகளின் பற்கள், நகம், நெருப்பு போன்றவற்றால் அவ்வப்போது காயங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு ஏற்படுகின்ற காயங்களை க்வனியாதுவிடின், சிலகாலத்தின் பின் பேராபத்தை விளைவிக்கக்கூடியதாக மாறும். எனவே சிறுகாயங்கள் ஏற்பட்டால் கூட வைத்தியசாலைக்குச் சென்று மருத்துவரின் ஆலோசனை பெறப்பட்டு காயத்தை சுத்தம் செய்து மருந்து கட்டுவதுடன், தேவையேற்படின் ஏற்பூசி அல்லது ரொக்சைட் என்று கூறப்படுகின்ற Tetanus toxid ஊசிமருந்து எடுக்கப்படவேண்டும்.

எமக்கு ஏற்படும் காயங்களில் பெரும்பாலானவை மண்துணிக்கைகளினால் அசுத்தப்படுத்தப்படும் சந்தர்ப்பம் அதிகம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் மண்ணில் உள்ள ஒருவகை நுண்கிருமிகளின் (Clostridium tetani) வித்திகள் (Spore) காயங்களை சென்றடைகின்றன. அவை அக்காயங்களில் விரைவாக வளர்ச்சியடைந்து பல்கி, பெருகி ஒருவகையான நரம்புக் கலங்களைத் தாக்கும் சுரப்புக்களை (Tetanoplasmin) வெளிவிடுகின்றன. இச் சுரப்புக்கள் இயக்க நரம்புகளைத் தாக்கி அதன் மூலம் நரம்புகளின் இயக்கத் தொழிற்பாட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்துகின்றன. இதன் மூலம் தசை இயக்கம் பாதிக்கப்படுவதனால் வாய் அசைக்கமுடியாத நிலைமை, மூச்சுவிடுதல், உணவு உட்கொள்ளல், சிறுநீர், மலம் கழித்தல் என்பவற்றில் பாதிப்பு, காய்ச்சல், தலையிடி, இதயத்துடிப்பு அதிகரித்தல் என்பன ஏற்பட்டு இறுதியில் இறப்பு வரை கொண்டுசெல்கிறது.

**சோமநாதன் உமாசுதன்**
4ஆம் வருடம்,
யாழ். மருத்துவபீடம்

இதை தவிர்ப்பதற்காகவே பிள்ளை பிறந்ததும் 3-வது, 5-வது, 7-வது, 18-வது மாதங்களில் முறையே முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது தடவைகளாக முக்கூட்டு, இருகூட்டு தடுப்பு மருந்துடன் சேர்த்து ஏற்புவலி தடுப்புமருந்தும் கொடுக்கப்படுகிறது. பின்பு பாடசாலை செல்ல ஆரம்பிக்கும் காலமாகிய 5-வது வயதிலும், மீண்டும் 10-14-வது வயதிலும் இம் மருந்து வழமையாகக் கொடுக்கப்படுகிறது.

### உங்களுக்கு காயம் ஏற்பட்டபோது

*** வயது பத்திற்குள்ளானால்:-**

முக்கூட்டு DPT, இருகூட்டு DT தடுப்பு மருந்துகள் ஒழுங்காகப் பெறப்பட்டிருப்பின் தடுப்பூசி அவசியமற்றது.

*** வயது பத்திற்கு மேலானால்:-**

முழுமையான முறையில் தடுப்பூசி பெறப்படவேண்டும்.

முதலாவது ஊசி
↓ 6 கிழமையின் பின்
2வது ஊசி
↓ 6 மாதத்தின் பின்
3வது ஊசி

**மீண்டும் காயம் ஏற்பட்டால்:**

5 வருடத்திற்கு தடுப்பூசி அவசியமற்றது.
5-10 வருடத்திற்குள்ளானால்: ஒரு தடுப்பூசி போதுமானது.
10 வருடத்திற்கு மேலானால்: மீண்டும் முழுமையான முறையில் தடுப்பூசி போடப்படவேண்டும்.

எனவே பத்து வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளிற்கு சிறுவயதில் மேற்கூறிய வகையில் மருந்து வழங்கப்பட்டிருக்குமாயின், அவர்களுக்கு காயங்கள் ஏற்படும்போது தடுப்புமருந்து வழங்குவது அவசியமற்றது. காயத்தின் தன்மையைப் பொறுத்து தேவையேற்படின் மாத்திரம் ஒரு தடுப்பூசி (Booster dose) வழங்கப்படும்.

கர்ப்பிணித் தாய்மார்கள் முதலாவது பிரசவமாயின் முதலாவது தடுப்பு மருந்து கர்ப்பம் தரித்து 16வது வாரத்திலும் இரண்டாவது தடுப்பு மருந்து 22வது வாரத்திலும் வழங்கப்படுகிறது. அடுத்த ஒவ்வொரு கருத்தரிப்பின் போதும் தடுப்புமருந்தினை ஒரு முறை ஏற்றினால் போதுமானது.

எமது வைத்தியசாலைகளில் ரொக்சைட் - தடுப்பு மருந்து வழங்கும் முறையானது:-

* முதலாவது ஊசிபோடப்பட்டு 6-ஆவதுவாரத்தில்இரண்டாவது ஊசியும்.

* இரண்டாவது ஊசிபோடப்பட்டு 6-ஆவது மாதத்தில் மூன்றாவது ஊசியும் போடவேண்டும்.

இந்த மூன்று ஊசிகளும் முழுமையாக வழங்கப்படுமிடத்து அடுத்துவரும் ஐந்துவருடங்களுக்கு போதிய பாதுகாப்பை வழங்குவதுடன் அந்த ஐந்து வருடங்களிற்குள் ஏதாவது காயம் ஏற்படின் தடுப்பூசி பெறுவது அவசியமற்றது. அத்துடன் -

* ஐந்து தொடக்கம் பத்து வருடங்களிற்கு இடையில் காயம் ஏற்படின் ஒரு தடுப்பூசி (Booster Dose) மாத்திரம் போடுவது போதுமானது.

* முதல் மூன்று முழுமையான தடுப்பூசிபோட்டதில் இருந்து பத்தாவது வருடத்தின் பின்பு காயம் ஏற்படின், மீண்டும் முதலில் போட்டது போன்று மூன்று முழுமையான தடுப்பூசிகளையும் போடுதல் வேண்டும்.

எனவேதான் இரண்டாவது, மூன்றாவது தடுப்பு மருந்து போடப்பட்ட திகதி, மாதம் ஆகியவற்றை ஞாபகத்தில் அல்லது டயறியில் குறித்துவைக்கும்படி வைத்தியர்கள் கூறுவார்கள். மீண்டும் சில காலத்தின் பின் காயம் ஏற்படும் பட்சத்தில் முன்பு ஏற்றப்பட்ட ஏற்பூசிகளின் கால விவரத்தை வைத்தியர்களிடம்கூறினால், தேவையற்ற மேலதிக ஊசி மருந்து ஊடலினுள் ஏற்றப்படுவதை தடுத்துக் கொள்வதுடன், பெறுமதிதிக்க ஓர் ஊசி மருந்தானது இன்னொரு நோயாளின் பாவனைக்காக பாதுகாக்கப்படுகிறது.

எனவே உங்களுக்கு ஊசிமருந்து ஏற்றப்படும் போது என்ன மருந்து ஏற்றப்படுகிறது? ஏன் ஏற் றப்படுகிறது, மீண்டும் எப்போது எற்றப் படவேண்டும்? என்ற விவரங்களை மருத்துவரிடமோ அல்லது மருந்து ஏற்றுபவர்களிடமோ கேட்டுத் தெரிந்து கொள்ளுதல் அவசியம்.

ஏற்பூசி (Tetanus toxid) மருந்து வழங்க முன்பு மருத்துவர் பின்வரும் தகவல்களை கருத்திற்கொள்வார்.

1. ஏற்பட்ட காயம் எதனால் ஏற்பட்டது?
2. ஏற்பட்ட காயம் சுத்தமாக உள்ளதா அல்லது மண் போன்றவற்றால் அசுத்தமாக்கப்பட்டுள்ளதா?
3. முன்பு ஊசி போடப்பட்ட காலங்களின் அளவு.
4. நோயாளியின் வயது.
5. அண்மையில் ஏதாவது சத்திரசிகிச்சைக்குட்பட்ட சந்தர்ப்பம்
6. கர்ப்பிணித் தாயாயின் கருத்தரித்த தடவைகள்

போன்ற விவரங்களின் அடிப்படையில், ஏற்பூசி மருந்து எடுக்கத் தேவையில்லையா அல்லது தேவையாயின் எடுக்க வேண்டியதடவைகள் என்பவற்றைத் தீர்மானிப்பார்.

# இன்றைய காதல்

பனிமூட்டமான மாலை நேரம் கடலலையின் ஆர்ப்பரித்த சப்தம் வயிற்றை வளைத்துக்கொண்டிருக்கும் தென்னைமரத்திற்கு வியப்பாக இருந்தது. ஏதேனும் பேச்சுக் கொடுத்தால் என்னவென்று தென்னைமரம் யோசித்துக்கொண்டது.

"நண்பா உன் கடிதம் எனக்கு வியப்பாக இருக்கிறது. ஒரு நாளேனும் வருகின்ற உன் அலைக் கரங்கள் தங்கிவிடுவதில்லையே ஏன்?"

"நான் தேடிவந்த பொருள் கிடைக்காததால் திரும்பிச்சென்றுவிடுகிறேன் நண்ப!"

என்று பதிலளித்தது கடல். தென்னைமரத்திற்கு மேலும் மேலும் பேசவேண்டும் போல் ஆவலெழுந்தது.

"எதைத் தேடிவருகின்றாய்? எது கிடைக்காமல் திரும்பிப் போகின்றாய்?" வினாத் தொடுத்தது தென்னைமரம்.

**சி. சிவாணி**

"காதலைத்தேடி வந்தேன்; அது கிடைக்காததால் திரும்பிவிடுகின்றேன்" பதிலளித்தது கடல்.

"நண்ப கிடைக்காத காதலைத் தேடி ஏன்தான் அப்படி ஒரு முயற்சி? தோல்வியைத் தெரிந்தும் ஏன் தொடருகின்றாய்?"

"அதுதான் காதல் என்பது"

தென்னைமரம் யோசித்தது. அது இதுவரை இந்த வார்த்தையை கேள்விப்பட்டிருக்கவில்லை.

"நண்பனே நீ என்னை நன்றாகக் குழப்புகின்றாய் புரியும் படியாக கொஞ்சம் விரிவாகச் சொல்"

"காதல் என்பது புனிதமான ஓர் உறவு; அது உணர்த்திப் புரியவைக்கக் கூடியதல்ல; தானாகவே தோன்றும் ஓர் உணர்வு"

தன் இலைகளை அசைத்தபடி சிரித்தது தென்னைமரம்.

"முட்டாள்த்தனமாகப் பேசுகின்றாயே அந்த உணர்வில் அப்படியென்ன புதுமையிருக்கிறது?"

"அங்கே பார், இருவர் உட்கார்ந்திருக்கிறார்களே! இரு வாலிப உள்ளங்கள். அவர்கள் காதல் வயப்பட்டவர்கள்"

கடற்கரை ஓரமாக உட்கார்ந்தபடி இருந்த காதலஜோடிகளைக் காட்டியது கடல்.

"காதலியின் ஒவ்வொரு அசைவிலும் தன் உயிர் அசைவைக் கண்டு காதலன் வாழுகின்றான். நண்பா! அவளுக்கொன்று ஆகிவிட்டால் தன் உயிரைக்கூட மாய்த்துகொண்டுவிடுவானாம்" கைகொட்டிச்சிரித்தது தென்னை.

"எத்தனை முட்டாள்த்தனமாக பேசுகின்றாய் நீ. போன வாரம் இதே பெண்ணை வேறு ஒரு காதலனுடன்



பார்த்தேனே... காதல் அழியக்கூடியது. அது ஒரு காமப்பிசாசு, வேலையில்லாத இருவரின் வேண்டாத செயல் தான் இந்தக்காதல்"

தென்னை மரம் வெறுப்பாக பேச ஆரம்பித்தது. கடலுக்கு வேதனையாக இருந்தது.

"சினேகிதா நான் ஒரு கதை சொல்லுகின்றேன் கேட்கிறாயா?"

"சரி" தென்னை ஒப்புக்கொண்டது.

"இங்கே நீ சிறுவயதாய் இருந்த போது மணிகண்டன் என்றொரு பையனும் ஜமுனா என்றொரு பெண்ணும் வருவார்கள். இருவரும் கொள்ளை அழகு. நல்ல காதலர்கள். ஒருநாள் ஜமுனா விபத்தில் இறந்து போனாளாம். இன்றுவரைக்கும் அவன் திருமணம் செய்யாமல் வாழ்ந்து வருகின்றான்.

"ஏற்கின்றேன் நண்பா! இதைவிட ஜானகி என்ன செய்தாள் ஒருநாள் தன்காதலனை எடுத்தெறிந்து பேசிவிட்டு ஓடிப்போனாளே அது என்ன காதல்..... சரி ஊர்ச் சமாச்சாரம் இருக்கட்டும் உன்கதையைச் சொல்"

"கரையை நான் காதலிக்கின்றேன். ஆனால் இன்றுவரை அவள் என் காதலை ஏற்றுக் கொள்வதாக இல்லை... பதில் கிடைக்காததால் ஒவ்வொரு பொழுதும் வந்துபோகின்றேன்"

"வியாபாரம் போல ஆகிவிட்ட இன்றைய காதலுக்கு உன்போன்ற சின்னங்கள் தேவைதான் நண்பா"

வரலாறுகள், கதைகளில் இதையெல்லாம் பார்க்கலாம்தான். இன்றையகாதல எங்கே நண்பா உண்மையாய் இருக்கிறது. ஒன்று இரண்டைத் தவிர... யோசித்துப் பார்"

தென்னை மிக ஆழமாகக் கூறியது. வாயை மூடிக்கொண்டது கடல்.

"உன்போன்ற காதல் நெஞ்சமுள்ள ஆண்மகனை இன்று காண முடியுமா நண்பா?"

சிரித்துக் கொண்டது கடல். தென்னை தன்னை நிமிர்த்தி தூரப் பார்வை செலுத்தியது.

கதை... வரலாற்றுக்குப் பொருந்தாத இன்றைய காதல்.

# அறிமடமும் சான்றோர்க்கு அணி

பண்டைத்தமிழர், வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகப் பண்பட்ட வாழ்வை நடத்திவருகின்றனர். அவர்தம் நாடு, குன்றா விளையுளும் குற்றமில் உழவோரையும் கொண்டிருந்தது. அங்கு அறந்தவறாச் சான்றோரும், ஈத்துவக்கும் செல்வரும் நிறைந்திருந்தனர்.

சான்றோர் எனப்படுவோர், அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்பன மிக்கோராய் இருந்தனர் சங்ககாலப்புலவோர், சங்கச் சான்றோர் என்று போற்றப்படுவது நாம் அறிந்த செய்தி ஆகும். அவர்தம் வரிசை மிகமிக நீண்டது.

கடைச்சங்கப்புலவோர்களை இறையனார் களவியலுரைகாரர் கடைச்சங்கம் இருந்து தமிழாராய்ந்தார், சிறு மேதாவியார், சேந்தம் பூதனார், அறிவுடையானார், பெருங்குன்றூர் கிழார், இளந்திருமாறன், நல்லந்துவனார் மருதனின நாகனார் நக்கீரர் முதலாக நாற்பத்தொன்பதின்பர் என்றும் கவியரங்கேற்றினார் நானூற்று நாற்பத்தொன்பதின்மர் என்றும் கூறுவர்.

தேன்கூடு

ஈத்துவக்கும் திண்மை கொண்ட வேந்தரும் வேளிறாம் குறுநிலமன்னரும் பல்லோர் வாழ்ந்தனர். அவர்கள் இடத்தே, கொடைநல்கும் விடயத்தில் அறிமடம் மிக்கிருந்தது. அஃதாவது அறிந்தும் அறியார் போன்றிருத்தல். ஒரு சம்பவம் அதனை விளங்கிக்கொள்ளப் போதுமானதாய் இருக்கும்.

ஒரு சமயம் ஔவையார் எனும் புலவர், விறலியர் பலர்வர, நாஞ்சில் வள்ளுவனது நாட்டிற்குச் சென்றிருந்தார். விறலியர் தாமிருந்த இல்லத்தின் அயலில் முளைத்திருந்த கீரை இலைகளைப் பறித்துக் கறியமுது ஆக்கினார். கீரையின் மேல் இடுவதற்கு அரிசி வேண்டியிருந்தது. ஔவையார் நாஞ்சில் வள்ளுவனிடம் சென்று அரிசி வேண்டினார். அவன் பெரும் மலைபோல்வதொரு யானையை அளித்தான். அது தெளிவு இல்லாத கொடையாகும். ஔவையார், நாஞ்சில் வள்ளுவனை, 'மன்ற மடவன்' நிச்சயமாக அறிந்தும் அறிவிலாதவன். 'பெரியோர் தந்தகவும் வந்தோர்தகவும் சீர்தூக்கிச் செய்வது இயல்பு என்று அமைதி காண்கின்றார்.

**சிந்திப்போம் செயற்படுவோம்**

புரவலர் வரிசையில் போற்றற்குரியோராக அறிமடம் பூண்டோராக நாம் கடைஎழுவள்ளல்களைக் காணலாம். பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் புறப்பாட்டில் (157) பறம் பிற்கோமான்பாரி, வல்வில்லோரி, மறப்போர் மலையன், கொடும்பூண் எழினி, பெருங்கல் நாடன்பேகன், மோசிபாடிய ஆய், கொள்ளாரோட்டிய நள்ளி என்னும் எழுவரையும் நம்முன்னே நிறுத்துகின்றார்.

ஆய் ஆய் அண்டிரன் எனவும் படுவான் யாதொரு பயனும் கருதாது பிறர்க்குக் கொடுத்து மகிழ்தலைக் கடனாகவுடையான் வளங்குறைந்த காலத்து பாம்பு தந்த நீலப்பட்டாடையை நிமனுக்குத்தந்தவர்.

எழினி இல்லையென்றால் எவர்க்கும் தந்தவன் நள்ளி கண்டீரக்கோ எனவும் படுவன் தன்னையடைந்தார்க்கும் பொன்னணியும் நெடுந்தேரும் தந்து மகிழ்ந்தவன்.

அதியமான் நெடுமான் அஞ்சி உண்டோரை, நெடுங்காலம் வாழவைக்கும் அரிதிற்கிடைத்த நெல்லிக்கனியை ஔவையாருக்குத் தந்து புகழ் நிறுவியவன்.

பாரி, மாரி நிகர் வண்கையன்; முல்லைக்கொடிக்குத்தேரைத் தந்தவன் புலவோர் இவனை சிறுவீமுல்லைக்கு பெருந்தேர் நல்கிய அறிமடம் பூண்ட அண்ணல் என்பர்.

பேகன், கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய காவலனாவான்.

ஓரி, இவன் அடைந்தார்க்கெல்லாம் அள்ளி அள்ளி அளித்த அருள்திறலாளன். இவரெலாம் கொடை மடம் பட்ட கோமான்கள்.

இனி, பழமொழி நானூற்றில் வரும் பாடல் ஒன்றை நோக்குவோம்.

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை அளித்தாரைக் கேட்டறிதும் - சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடு நீர்ச் சேர்ப்ப
அறிமடமும் சான்றோர்க்கு அணி

செறிந்த மடல்களை உடைய, அழகிய தாழைகள் பொருந்திய, கடல்நாடனே, முல்லைக்குத் தேரையும் வாடையால் வாடிய மயிலுக்கு தனது போர்வையையும் முன்னாளிலே கொடுத்தவர்களை கேள்விவாயிலாக அறிந்தாம். ஆராய்ந்து பார்க்கும்போது சான்றோருக்கு அறிமடமும் அழகு தரும் ஆபரணம் போலும்.

அறிமடம் அறிந்தும் அறியாது போன்றிருத்தல் பாரி தேர்ச்சில்லில் படர்ந்த முல்லைக்கும், வாடைக்குளிரில் நலிந்த மயிலுக்கும் அவைகளின் துன்பந்தீர வேறு பொருள்களை கொடுப்ப அறிவாராயிருந்தும் உயர்வுடையதம் பொருள்களைக் கொடுத்துச் சென்ற பான்மை போற்றற்பாலதாம்.

நாம் எண்ணுதனதானியங்களை ஈந்து உவக்கும் திண்ணிலை எய்தப் பெற்று இன்பம் துய்த்து வாழ்வோமாக.

(தொடரும்)

–சிகண்டியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைரியசாலி எப்போது கோழையாகின்றான்?


**துறையூர். ஜயதீஸ்.**
'வீட்டிற்கு நல்லவளை வை' என்பார்களே. எதற்கு?
☺ **கூரைக்கு நல்ல வளையை வைத்தால் கூரையைத் தாங்கிப் பிடிக்கும். அது போல வீட்டுக்காரியை நல்லவளாக வைத்தால் குடும்பத்தைத் தாங்கிப் பிடிப்பாள்.**

❀ ❀ ❀

**துறையூர். ஜயா.**
படுத்ததும் தூங்கும் ஆண்களைப் பற்றி என்ன கூறுகிறீர்.....?
☺ **தொல்லை இல்லாவிட்டால் எழுப்பி விடுங்களேன்!**

❀ ❀ ❀

**மாசார். சாலினி.**
நீண்ட கூந்தல் உள்ளவளா, கட்டையான கூந்தல் உள்ளவளா குடும்பத்துக்கு உகந்தவள்?




☺ **கூந்தல் நீளமோ, கட்டையோ முக்கியமல்ல. வாய் நீளமாக இல்லாவிட்டால் மெத்தச் சரி!**

❀ ❀ ❀

**கொழும்புத்துறை. ஆர்.காந்த்.**
ஒரு பெண் என்னிடம் படம் கேட்கிறாள். காரணம் கேட்டால் படம் தந்ததும் கூறுவதாகச் சொல்கின்றாள். ஏன்.....?
☺ **'படம் பார்; பாடம் படி' என்று அரிச்சுவடிப் பாடம் படிக்கும் பையனாக இருக்கின்றீரே நீர்!**

❀ ❀ ❀

**கொக்குவில். பி.சாந்தன்.**
விபரீத விளையாட்டுகளும் உண்டா?
☺ **விளையாட்டு வினையாகலாம்; விபரீதமாகலாம். அது விளையாடுபவர்களைப் பொறுத்தது.**

❀ ❀ ❀

**சுன்னாகம். சசி.**
வித்துவானாரே! 'பின் தூங்கி முன் எழுதல்' ஆண்களுக்குப் பொருந்துமா?
☺ **முன் எழுந்து பின் தூங்குவதுதான் அவர்கள் இயலுமை.....!**

❀ ❀ ❀

**உடுவில். சதீஸ்.**
ஒரு தைரியசாலி எப்போது கோழையாகின்றான்?
☺ **பிறப்பு**

❀ ❀ ❀

**சுண்டுக்குழி. குணம்.**
அக்காலப் பெண்கள் கணவனைக் கடவுளாக மதித்தார்கள். இப்போது மதிக்கிறார்கள் இல்லையே...?
☺ **மதிக்க வேண்டாம். மிதிக்காமல் இருந்தால் போதாதா?**

❀ ❀ ❀

**நாவற்காடு. என். பாலு.**
பூமியை ஏன் பெண்ணுக்கு ஒப்பிடுகிறார்கள்?
☺ **கவர்ச்சி காரணமாக!**

❀ ❀ ❀

**உசன். சுபா.**
மெஷின் இருந்தும் கையால் தைப்பவர்கள் குறித்து உங்கள் கருத்து...?
☺ **கையாலாகாதவர்கள்!**

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். ஜேனா.**
நாட்டிலும் பிரச்சினை; வீட்டிலும் பிரச்சினை. காரணம் என்னவோ?
☺ **(அம்) Moneyதான் காரணம்!**

❀ ❀ ❀

**சுருவில். யசோ.**
பிறப்பு எப்போது? இறப்பு எப்போது?
☺ **உணர்ச்சிகளின் இணைவில் பிறப்பு; உணர்ச்சிகளின் இழப்பில் இறப்பு.**

❀ ❀ ❀

**புலோப்பளை. அன்ரன்.**
'சாண் ஏற, முழம் சறுக்குவது' என்கிறார்களே. விளக்குங்களேன்...?
☺ **'ஜெயசிகுறு', 'ரணகோஷ' எல்லாம் சாண் ஏற முழம் சறுக்கின கதைதானே!**

❀ ❀ ❀

**கொழும்புத்துறை. ஜெஸ்ரன்.**
பெண்கள் துணிவை இழக்கலாமா?
☺ **துணிவையும் இழக்கக்கூடாது; துணியையும் இழக்கக்கூடாது.**

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். நோயாளி.**
காது டாக்டர் நாய் போலக் குலைக்கின்றாரா?



☺ **உங்களுக்குக் கேட்கின்றதா என்று Check பணிணுகிறார் போலும்.**

# காதல் - நட்பு வித்தியாசம் என்ன?


☺ **தாலி கட்டடியதோடு.....!**

❀ ❀ ❀

**வரணி. சீலன்.**
21 ஆம் நூற்றாண்டில் பெண்ணின் உடை எப்படி இருக்கும்?
☺ **அப்படி ஒன்று இருந்ததா என்று சரித்திர ஆய்வு செய்ய வேண்டி இருக்கும்.**

❀ ❀ ❀

**வேலணை. கண்ணன்.**
கிளிக்சொண்டு போன்ற மூக்கு இருப்பதால் உங்களை 'மூக்கன்' என்று அழைக்கலாமா?




☺ **'மூர்க்கன்' என்றோ 'மக்கன்'என்றோ அர்ச்சிக்காமல் விட்டால் சரி!**

❀ ❀ ❀

**குப்பிளான். சிவானந்த்.**
பாவத்தின் விளைவு என்ன?

❀ ❀ ❀

**நீர்வேலி. சந்திரா.**
ஆண்மைக்கு அளவு கோல் என்ன?
☺ **'பிறர்மனை நோக்காப் பேராண்மை' என்று வள்ளுவர் கூறும் பண்புதான் அளவு கோல்.**

❀ ❀ ❀

**நல்லூர். வி.சுதா.**
ஆட்டிப்படைப்பவர்கள் யார்?
☺ **இதிலென்ன சந்தேகம்?**

❀ ❀ ❀

**ஊரெழு. கணேஷ்.**
காதலுக்கும் நட்புக்கும் என்ன வித்தியாசம்...?
☺ **நட்பு குட்டி போடுவதில்லையே!**

❀ ❀ ❀

**சண்டிலிப்பாய். ப.ராஜ்.**
குடும்பம் என்றால் நாலும் இருக்கும் என்கிறார்களே...?
☺ **சிலருக்கு நாலு குடும்பமே இருக்கின்றதே!**

❀ ❀ ❀

**அராலி. வி. முருகதாஸ்.**
பட்டம் பெறாத டாக்டரிடம் மருந்து எடுக்கலாமா?
☺ **குட்டு வாங்கினாலும் மோதிரக்கையால் குட்டு வாங்கவேண்டும். செத்தாலும் பட்டம் பெற்ற டாக்டரிடம் மருந்து வாங்கி சாப்பிட்ட பின்னர் சாக வேண்டும்.**

❀ ❀ ❀

**மானிப்பாய். அ. கருணா.**
கைவிடுவதற்கும் கையைவிடுவதற்கும் என்ன வித்தியாசம்?
☺ **பெரிய வித்தியாசம் இல்லை. எங்கே, எப்படி என்பதுதான் கேள்வி.**

❀ ❀ ❀

**தொட்டிலடி. பி. ஆனந்த்.**
எனக்குத் தெரிந்த ஒருவர் ஓய்வு பெற்றதும், அவரது மனைவி, வீட்டில் நின்ற நாயை விற்று

# வித்துவான் பதில்கள்

விட்டாளே...?
☺ **இந்தக் காலத்தில் இரண்டுக்கும் சாப்பாடு போடுவது கஷ்டம்தானே!**

❀ ❀ ❀

**நவாலி. சுரேஷ்.**
மாமியாருக்கு மருமகள்தான் பயப்படுவாளா? மருமகன் பயப்படமாட்டானா?
☺ **மாமியாருக்குப் பயந்து சாமியானவர்களை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் என்ன பயம் என்று மட்டும என்னிடம் விவரம் கேட்காதீர்கள்.**

❀ ❀ ❀

**பாண்டியன்தாழ்வு. சஞ்சய்.**
தங்கம் போன்ற அழகான பெண் சீதனம் கேட்கின்றாளே...?
☺ **'தங்கத்திலே ஒரு தரம் இருந்தாலும்**

# படுத்ததும் தூங்கும் ஆண்கள் குறித்து.....!

**சீதனம் குறைவதுண்டோ...?'**

❀ ❀ ❀

**கொட்டடி. வீணா.**
வில்லுப்பாட்டுக்காரர் ஒருவர் என்னை விரும்புகிறார். நான் திருமணம் செய்லாமா?
☺ **நீர் 'ஆமா'ப் போட்டால் அவர் பொல்லால் தட்டி, தட்டி சுருதி எழுப்பிப் பாடிக் கதை அளப்பார். பிறகென்ன சந்தோசம் தானே...!**

❀ ❀ ❀


**விளான். ம.ரதி.**
'ராகிங்' பாம்பு மீண்டும் படம் எடுத்து ஆடுகின்றதே!
☺ **ராகிங் பாம்பு ஒன்றை அடிக்கும் போது ஒன்பது குட்டிகள் புதிதாகத் தோன்றுகின்றனவே!**

❀ ❀ ❀

**இருபாலை. றிவி.**
சந்தியில் நின்று சேஷ்டை விடும் நாய்களை என்ன செய்யலாம்?
☺ **நான்கு கால் நாய் என்றால் கல்லைக் கையில் எடும். இரண்டு கால் நாய் என்றால் காலில் இருக்கும் செருப்பைக் கையில் எடும்.**

❀ ❀ ❀

**துறையூர். ஜோ. ஜெ.**
வித்துவானின் பிறந்ததினம் என்ன?



☺ **ஏப்பரல் ஒன்று.**

❀ ❀ ❀

**துறையூர். மெல்.**
கண்மண் தெரியாமல் யாராவது உம்மைத் திட்டினால் உமக்குக் கோபம் வருமா?
☺ **இது விடயத்தில் வித்துவாட்டியை விட வேறு திறமைசாலிகள் இருக்கின்றார்களா? அவர்களை நான் ஒரு தடவை பார்க்கவேண்டும்.**

❀ ❀ ❀

**கோப்பாய். மோகன்.**
ஈழத் தமிழன் எதில் உயர்ந்து நிற்கின்றான்?
☺ **தன்மானத்தில (புறநடையாக உள்ள புல்லுருவிகளை - முந்தானையில் தொங்கும் அரைவேக்காட்டுத் தமிழர்களை - விட்டுவிடும்.)**

❀ ❀ ❀

**புலோலி. மேனன்.**
சொந்த நலனுக்காகப் பந்தம் பிடிக்கும் தமிழ்த் தலைவர்கள் இனி என்ன செய்யப் போகின்றார்கள்?
☺ **கள்ள வோட்டால் வாக்குப் பெட்டிகளை நிரப்பத் திட்டம் தீட்டுவார்கள்!**

❀ ❀ ❀

**கொட்டடி. சுமதி.**
என்னைக் கலைத்துத் திரியும் கழுதை, "வெற்றி நிச்சயம்" என்று மார்தட்டுகின்றதே?
☺ **'அலைகள் ஓய்வதில்லை' என்று பதில் சொல்லும்.**

❀ ❀ ❀


**வரணி. வனஜன்.**
மரத்தில் ஏறி மாங்காய் பிடுங்கும் பெண்கள் குறித்து.....?
☺ **காரணம் ஆணாகத்தான் இருக்கும்.**

❀ ❀ ❀

**நீர்வேலி. சுரேஷ்.**
'நாம் இருவர்; நமக்கு இருவர்' என்ற கோட்பாடு மாறிவிட்டதா?
☺ **ஆம். இப்போது 'நாம் இருவர்; நமக்கு ஒருவர்' என்றுதான் பிரசாரப் படுத்து கின்றார்கள். போற போக்கில் 'நாம் இருவர்; நமக்கேன் ஒருவர்?' என்று பிரசாரம் மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.**

❀ ❀ ❀

**பளை. குமரி.**
'கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதை' என்கின்றார்களே. அப்படி நடக்குமா?



☺ **வன்னி குறித்து ரத்வத்தையிடம் கேட்டுப்பாரும் கதை விளங்கும்.**

❀ ❀ ❀

**நாவலடி. வின்னி.**
மிருகங்களில் பாலியல் வல்லுறவு உண்டா?
☺ **இரண்டுகால் மிருகங்களில் உண்டே!**

❀ ❀ ❀

**கட்டுடை. தீபன்.**
அரசியல்வாதியான ஜெனரலின் பெயர் எப்படியுள்ளது?
☺ **'ரிப்பேர்' ஆகிவிட்டது!**

❀ ❀ ❀

## இவ்வார ஜோக்!

**இது ஓர் உண்மைச் சம்பவம். சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு முன் நடந்தது.**

**புகழ்பெற்ற அந்த மகப்பேற்று வைத்திய நிபுணர் யாழ்ப்பாணத்தில் நீண்ட காலம் பணியாற்றியவர். பின்னர் கொழும்புக்கு இடம் மாற்றம் பெற்றுச் சென்று விட்டார்.**

**ஒருநாள் வெள்ளவத்தை காலி வீதியில் நடைபாதையில் நடந்து சென்று கொண்டிருந்த அவரை இளம் பெண் ஒருவர் புன்னகைத்தபடி வழி மறித்தார். அந்தப் பெண்ணை யார் என்று புரியாத டாக்டர் புருவத்தைச் சுருக்கியபடி யோசித்தார்.**

**"என்னைத் தெரியவில்லையா டாக்டர்? போனவருடம் என் பிள்ளைப் பேறை நீங்கள்தானே பார்த்தீர்கள்?" - என்று கேட்டாள் அந்தப் பெண்.**

"I don't remember ladies by faces!" **(நான் பெண்களை அவர்களின் முகத்தை வைத்து ஞாபகம் வைத்துக் கொள்வதில்லை) என்று சீரியஸாகப் பதிலளித்தார் அந்த மகப்பேற்றியல் நிபுணர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை, கடவுளின் செயலா?

சார்லஸ் ஹாட்·.பீல்டு என்று அமெரிக்காவில் ஓர் ஆசாமி. தான் கண்டுபிடித்துள்ள சில இரசாயனக் கலவைகளைக் கொதிக்கவைத்து அவை உற்பத்திசெய்யும் புகையை மேலே அனுப்பி மழை மேகங்களைக் கவர்ந்திழுத்துத் தன்னால் மழை பெய்விக்க முடியும் என்று மார்தட்டினார். சான்டிகோ என்று ஒரு நகரம். அங்கு மழை இல்லாமல் திடீர் என்று வறட்சி ஏற்பட்டு ரொம்ப வருத்தியது. அந்த நகரக் கவுன்சில் சார்லஸ் ஹாட்·.பீல்டை அணுகி தங்கள் நகருக்கு மழையைத் தருவிக்கச் சொன்னது. பத்தாயிரம் டொலர்கள் தந்தால் நிச்சயம் மழையை வருவிப்பேன் என்றார் அவர். "முதலில் மழையைக் கொண்டுவா. மழை வந்தால் நிச்சயம் 10,000 டொலர்கள் தருகிறோம்" என்றது கவுன்சில்.

ஒப்புக்கொண்ட சார்லஸ் அந்த நகருக்கு வந்து ஒரு கோபுரத்தின் உச்சிக்குச் சென்று தன் இரசாயனக் கலவையைக் கொதிக்க வைத்தார். என்ன ஆச்சரியம்! திடுதிப்பென்று எங்கிருந்தோ மழை மேகங்கள் முட்டி மோதிக்கொண்டு அங்கே வந்து மழை கொட்டோ கொட்டு என்று கொட்டித் தீர்த்து விட்டது. இதில் சின்ன சங்கடம் என்னவென்றால், மழை எக்கச்சக்கமாகப் பெய்ததால் நகரின் அருகிலிருந்த அணை உடைத்துக் கொண்டு தாறுமாறாய் வெள்ள நீர் நகரினுள் புகுந்து ஏகப்பட்ட வீடுகளை அடித்துக்கொண்டு போய் விட்டது. கோபமடைந்த நகரவாசிகள் சார்லஸ் மீது வழக்குத் தொடுத்தனர். அதை விசாரித்த கலிபோர்னியா உயர் நீதிமன்றம் "தனிமனிதன் மழையைக் கொண்டு வருவதா? சுத்தப் பேத்தல். மழை என்பது கடவுளின் செயல்!" என்று தீர்ப்பளித்து வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது.

வாய் நிறையப் புன்னகையுடன் கோர்ட்டை விட்டு வெளியே வந்த சார்லஸ், அவர்களிடம் தனக்குத் தரவேண்டிய பணத்தைக் கேட்டார். நகரக் கவுன்சிலோ, "அதான் நீதிமன்றமே மழை கடவுளின் செயல் என்று சொல்லிவிட்டதே! உனக்கு எதற்குப் பணம் கொடுப்பது?" என்று கூறி கைவிரித்து விட்டனர்.

பாவம் சார்லஸ்.

*

# பெண்ணின் சாதனை!

பல பெண்களைத் திருமணம் செய்துகொண்ட ஆண்களைப்பற்றித் தானே அதிகம் படித்திருக்கின்றோம். பல ஆண்களை மணந்த ஒரு கில்லாடிப் பெண்மணியின் செய்தியைக் கேளுங்கள். தெரசாவான் என்றொரு பெண்மணி. 1922இல் ஷெ·.ப்பில்டு என்னுமிடத்தில் இவர் மீதான வழக்கு ஒன்று விசாரணைக்கு வந்தது. விசாரணையில் அவள் அலட்சியமாகச் சொன்ன செய்தி ஒன்று நீதிமன்றையே வியப்புக்குள்ளாக்கியது. அதாவது அவள் கடந்த ஐந்து ஆண்டுகளில் 61 ஆண்களை மணந்திருக்கின்றாள். அதாவது மாதம் ஒரு கணவன். ஜேர்மனி, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா என்று பல நாடுகளில் இருந்து ஆண்களைத் தேடிப்பிடித்து மணம் செய்து கொண்டிருக்கிறாள். எப்படி அவள் சாமர்த்தியம்?

## சிறுவர்சுடர் விடைகள்

XVI ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள 'சிறுவர்சுடர்' புதிர்களுக்கான விடைகள் வருமாறு.

### எண் எது?

விடை : 72

(மேல்வரிசை எண்ணை மூன்றால் பெருக்கி வரும் எண்ணை முன்பின்னாக மாற்றி எழுதினால் கீழ்வரிசை எண் பெறப்படும்.)

### உழைக்காமலே...!

விடை: 21ரூபா.

### சுட்டெண்

*சென்றவாரம் வெளியான 'சுட்டெண் என்ன?' என்ற புதிருக்கான விடை: 832184

# இந்தியா குறித்த விடுதலை....

(11 ஆம் பக்கத்தொடர்ச்சி)

போராடுகிறோம். அதனால் 70,000 மக்கள் இறந்துவிட்டனர். சுமார் 14,000 போராளிகள் மரணமடைந்துள்ளனர். எங்கள் மண்ணில் இத்தகைய ஒரு பெரிய போராட்டம் நடைபெறுகிறது. இத்தகைய மக்கள் தாம் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக வாழ்வதற்காகவே ஒரு தனிநாடு கேட்கிறார்கள் தனியரசு கேட்கிறார்கள்.

தனிநாட்டை விடுதலைப்புலிகள் புதிதாகக் கேட்கவில்லை.புலிகளுக்கு முன்னர் இருந்த கூட்டணித் தலைமை தான் இதனைக்கொண்டு வந்தது. கூட்டணிதான் தமிழீழம் வேண்டுமென்று முதலில் கேட்டது. அந்தக் கட்சியே தேசிய சுயநிர்ணய உரிமை தேவை எனவும் கோரிக்கை விடுத்தது. கூட்டணிதான் தனிநாட்டுக்காக மக்களிடம் ஆணையும்கேட்டது.

தமிழீழத் தனியரசு தான் எங்களுக்குத் தேவையான தீர்வு என்று தமிழ்மக்களிடம் ஆணை பெற்றது கூட்டணியே. அந்த மக்கள் ஆணையைத் தான், விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் சொன்னதுபோல நாம் சிலுவையாக சுமந்துகொண்டு இரத்தம் சிந்திப் போராடிக்கொண்டிருக்கிறோம். மக்களுக்காக, மக்கள் கொடுத்த மனுவுக்காகவே போராட்டம் நடைபெறுகிறது.

இந்தியா இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழீழமக்கள் இப்போது வாழும் புறநிலை வேறு அரசு விமானங்களே வந்து தனது சொந்த பிரஜைகள் என்று சொல்லிக்கொண்டு எங்களுடைய மக்கள் மீது குண்டுகளை வீசுகின்றது. தமிழ் மக்களை அரவணைத்தும் வாழ அரசுகள் இலங்கையில் தயாராக இல்லை; பிரிந்து போகவும் விடுவதாக இல்லை. ஒன்றுமே இல்லாத ஒரு சிக்கலான நிலையில் எமது மக்கள் எப்படி வாழமுடியும். அதனால் எங்களுக்கு ஒருமுடிவு வேண்டும்.

ஆனால் தமிழ் நாட்டில் அத்தகைய பிரச்சினை எதுவுமே இல்லை. தமிழ் நாட்டு மக்களுக்கு தனியரசு தேவையில்லை. அங்கு சமஷ்டி ஆட்சி நடைபெறுகின்றது.

தமிழ் நாட்டில் நல்ல திறமையான ஆட்சி நடைபெறுகின்றது. தமிழ்நாட்டு மக்கள் சந்தோசமாக வாழலாம். எங்கள் மக்களுக்கு சாப்பிடவழியில்லை. நாங்கள் போராடித்தான் வாழ வேண்டும். தமிழ்நாட்டில் தமிழ்த் தேசியவாதம் அங்கு பிரிவினைவாதமாகாது. ஆகையால் இந்தியா பயப்படவேண்டியதில்லை. கிழக்கு வங்காளம் பிரிந்ததால் மேற்குவங்காளத்தில் ஒரு தனியரசு வரவில்லை. எங்கள் மக்களுக்கு சுதந்திரம் கிடைத்து எங்களுக்கு ஒரு தனியரசு வந்தால் அந்த அரசு, அந்த நாடு இந்தியாவுக்குப் பக்கபலமாக இருக்கும். அதையும் நாங்கள் இந்தியாவுக்கு வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம் என்றார்.

அன்ரன் பாலசிங்கத்தின் இந்த விளக்கம் இந்தியா குறித்த தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு நிறையவும் மாறியுள்ளது என்பதனைத் தெளிவாக்குகின்றது. இந்த மாற்றம் ஈழத் தமிழர் அரசியலில் ஒரு குறிப்பிடத்தக்க திருப்புமுனையாக மாறும் என எதிர்பார்க்கலாம்.

## அனுசரிக்க நேரிடும்

இந்தியாவைப் புறக்கணித்துத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது கஷ்டமானது என்ற கருத்தே தமிழ்மக்களிடம் நீண்டகாலமாக நிலவிவருகின்றது. தமிழகத்து மக்களின் ஆதரவே எங்களுக்கு என்றும் கைகொடுக்கும் என்ற நம்பிக்கையும் எமது மக்களிடம் விரவிநின்றது; இப்போதும் நிற்கிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இந்தியா குறித்து இப்போது எடுத்துள்ள நிலைப்பாடு தமிழர் பிரச்சி னைக்கான தீர்வு ஒன்றைக் காண்பதில் ஆக்கபூர்வமான பங்களிக்கும் என நம்பலாம்.

தமிழகத்தில் இப்போது ஈழத்தமிழர் ஆதரவு இந்திராகாந்தியின் ஆட்சிக்காலத்தில் இருந்த நிலைக்கு வேகமாக உயர்ந்துசெல்வதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் புதிதாகப் பதவிக்கு வரும் ஆட்சித் தலைவர், அவர் யாராக இருந்தாலும் இந்த மாற்றத்தையும் ஆதரவையும் திருப்பத்தையும் கணக்கில் எடுக்காது தீர்வு ஒன்றைக் கண்டுவிடமுடியாது இந்தியாவை அனுசரிக்கவும் [illegible] ளவும் வேண்டிய தேவை[illegible] யமும் அவருக்கு வரும்.

*

## என் பிரிய பூமி....

(XI ஆம் பக்கத் தொடர்ச்சி)

எங்கே யூலியன்.....? விழிகளை அங்குமிங்குமாய் சுழலவிட்டபடி மெல்ல நடந்தாள் சிசிலியா.

'அதோ.....அதோ..... அந்த வெண்ணிற மலர்களின் சொரிதல் நிறைந்த மரத்தின் கீழ் படுத்திருப்பது யூலியன் தானே?' கேள்வி எழ அவனை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

'எல்லாச் சிறுவர்களும் உற்சாகமாய் ஓடி விளையாட இவன் ஏன் படுத்திருக்கிறான்....'

அவள் நடக்கும் வேகத்தில் புற்கள் சரசரத்தன. ஆனால் யூலியன் எந்த அசைவுமில்லாமல் படுத்திருந்தான். அவளுக்கு அதிசயமாக இருந்தது. 'என்ன இது... என் காலடியோசையையும் உணராமல்.... தூங்கிவிட்டானோ....'

அருகே நெருங்கிச் சென்றாள் சிசிலியா. யூலியன் இன்னும் அசைவில்லாமல் ஒருக்களித்தபடியே படுத்திருந்தான். குனிந்து அவன் முகம் பார்த்தபோது சிசிலியாவின் இதயத்துடிப்பு ஒரு கணம் நின்று போனது.

யூலியன் முகம் வெளிறியிருக்க விழிகள் அரைவாசி மூடியபடி தன்னுணர்வு அற்றவனாய்த் தரையில் சரிந்திருந்தான். கையில் ஒரு கொத்து வெண்மலர்கள். அவன் உதடுகளிலிருந்து புறப்பட்ட சொற்கள் அவள் காதில் தெளிவில்லாமல் விழுந்தன.

இன்னும் சற்றுக் குனிந்து அவன் வார்த்தைகளைப் புரிந்துகொள்ள முயன்றாள். வார்தைகளின் பொருள் புரிந்தபோது மேற்கொண்டு என்ன செய்வது என்பதனைச் சிந்திக்க முடியாமல் மயங்கி நின்றாள் சிசிலியா.

* * *

சியாரா, நிக்கலசுக்குப் பதிலளித்துக் கொண்டிருந்தவேளை காதுகளை நிரப்பிய அந்த நீண்ட சங்கேத ஒலிக்கு அங்கிருந்த அனைத்து விஞ்ஞானிகளும் விறைப்பாய் எழுந்து நின்றார்கள்.

அது அவர்களுக்குப் பரிச்சயமான ஒலி. மாளிகையின் கலந்துரையாடல் மண்டபத்துள் பிரவேசிப்பதற்கான அனுமதி வழங்கும் அடையாளச் சங்கீதம் அது. விஞ்ஞானிகள் தனித்தனியே மென்கதிர்முறைப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு உள்ளே அனுமதிக்கப்பட்டனர். மனிதத் தோலின் இரசாயனக் கட்டமைப்பை ஊடுருவ முடியாத அந்த மென்கதிர் தனிநபரின் மேலதிக உடைமைகள் பற்றிய இயல்புகளைத் தகவலாய்த் தருவதால் புதிய உலகக்கட்டமைப்பின் சோதனையிடும் காவலர்களால் இது மிகப் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றது.

பாதுகாப்பு நடவடிக்கைகள் முடிவடைந்த பின் பிரதான மண்டபத்துள் அனுமதிக்கப்பட்ட விஞ்ஞானிகள் அவர்களுக்கென அமைக்கப்பட்ட பிரத்தியேக ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர். அறிவார்ந்த அப்பிரதிநிதிகளின் நெஞ்சில் எப்போதும் குடிகொண்டுள்ள அமைதி - தம் கடமைக்காகத் தாம் தரவேண்டிய அதீத சன்மானம் தம் உயிர் என்பதையும் புரிந்துணர்ந்த அமைதி - நிலவியது. அதையும் மீறி அவர்கள் கண்களூடு வெளிப்பட்டுக் கொண்டிருந்த பரபரப்பான ஆர்வம் அவர்கள் இதயத்துடிப்பையும் அதிகரிக்கச் செய்திருந்தது.

ஒவ்வொரு மனமும் ஒவ்வொரு ஊகத்தில் ஆழ்ந்திருந்தது. அவர்கள் பெற்றிருந்த உயர் பயிற்சி அவர்களை மௌனத்தின் பிடியில் வைத்திருந்தாலும் அந்த அமைதியிலும் ஓர் ஆர்வமான சலனம் இழையோடியதை அவாகள் எல்லோருமே உணர்ந்திருந்தார்கள்.

குளிரூட்டப்பட்ட அந்த மண்டபத்தின் எல்லா வாயில்களும் மூடப்பட்டிருக்க அமைதியான மென்பச்சை ஒளி உமிழும் மின்குமிழ்கள் இருட்டை விரட்டியடித்து கொண்டிருந்தன. நீண்ட விசாலமான மண்டபத்தில் அவர்கள் அமர்ந்திருந்த ஒழுங்கு அங்கு ஓர் அழகினைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தது.

எந்த ஒரு விஞ்ஞானியும் முகமோ, முகவரியோ தெரிந்திராத அந்நிறுவனத்தின் தலைவரின் குரலை எதிர் பார்த்தபடி விஞ்ஞானிகள் அமர்ந்திருக்க நேரம் மெல்ல ஊர்ந்துகொண்டிருந்தது.

ஆயிற்று! எங்கிருந்து உருவாகின்றது என்பது தெரியாமல் ஓர் இனிய சங்கீதம் மண்டபமெங்கனும் மிதந்து நிறைந்தது. இதுவே அன்றைய நிகழ்வுகளுக்கான ஆரம்பம் என்று அங்கிருந்த அனைவரும் அனுபவ ரீதியாக உணர்ந்திருந்தார்கள். தவிர, அந்த இனிய சங்கீதம் தங்கள் எண்ணங்களைச் சலனமில்லாமல் தெளிவாக்க வல்ல தென்பதும் நினைவுகளை ஒரு முகப்படுத்த வல்லதென்பதும் அவர்கள் எவருக்கும் தெரிந்திராத உண்மை - எவருமறியாத தலைவரைத் தவிர அப்போது மண்டபத்திலுள்ள திரை வெளிர் நீலமாய்ப் பிரகாசிக்கத் தொடங்க அதில் 'அலை நிலம்' என்ற [illegible]

(தொடரும்)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.131

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | 5 | 6 | ■ |
| 7 | | | 8 | ■ | 9 | | 10 |
| | ■ | 11 | | 12 | | | |
| 13 | 14 | ■ | 15 | | | ■ | |
| 16 | | 17 | | | ■ | 18 | |
| ■ | 19 | | | ■ | 20 | | ■ |
| 21 | | | ■ | 22 | | | 23 |
| 24 | | ■ | 25 | | | | |

### சொற்சிலம்பம் இல. 131

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..................................................

விலாசம்: ..................................................

..................................................

..........................இங்கே வெட்டுக..........................

முடிவுத் திகதி:- 10. - 12 - 1999

### இடமிருந்து வலம்

1. தேர்ச்சியாக - நுண்ணியமாக. 4. முனிவர். ஒரு முருங்கையின் பெயரும்கூட. 7. முதல் பால். 9. மரத்துண்டு. 11. செத்தவீட்டில் செய்வது. 13. தந்தை. 15. வரமாட்டாது. 16. சாப்பாட்டின் பின் தரிப்பது. 18. தூக்கத்தில் வரும். 19. சங்கீதம் பாடிப் புகழ்வோர். 20. விழி. 21. இறத்தல். 22. கிறிஸ்தவ ஆயர்களின் பெயர்களின் பின்னால் போற்றுதல் கருதி சேர்க்கப்படும் சொல். 24. தான் என்பதன் பன்மை. 25. பக்கத்து நாட்டுத் தலைநகர்.

### மேலிருந்து கீழ்

1. மேயர். 2. வனம். 3. ஒன்றுமில்லாமல். 5. பிரித்து. 6. மன(ம்) அல்லது உள்ள(ம்). 8. அரசர் அல்லது கொடையாளர். 10. (நாட்டியத்தின்) தாளக் குறிப்பு. 12. அந்தக்காலத்தில் தலைநகரில் ஓடித்திரிந்த வண்டி இது. இன்று இல்லை. ஆனால் ஓடிய தடம் ஆங்காங்கே இன்னும் உண்டு. 14. தட்டையான பாத்திரம். 17. அணிதல். 18. அடிகாயத்தால் உடலில் ஏற்படுவது. 20. மலையக நகரம். 21. தாய். 22. ஆறாவது உருபு. 23. ஆடவர் அணியும் சாரத்தை இப்படியும் அழைப்பர்.

### சொற்சிலம்பம் 129 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1. உசிதம். 4. துவி. 6. பவனி. 7. மந்திகை. 9. காலைப்பொழுது. 11.பரு 12. பிசகு. 14. கடத்தி. 16. உடு. 17. தரிசு. 20. தகவல். 22. பசளி. 24. வில்லை. 25. அம்பிகை.

### மேலிருந்து கீழ்

1. உபகாரி. 2. சிவலை. 3. தனிப்பட. 4. துந்துபி. 5. விதி. 7. மழு. 8. கைலாகு. 10. பொருத்தல். 13. சளி. 14. கடுகல். 15. திரி. 16. உதவி. 18. சுபம். 19. மாளிகை. 21. வலை. 23. சபி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு:-** சிவகுருநாதன் பால்ராஜ்,
ஆண்டு 6,
சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி,
சண்டிலிப்பாய் மத்தி.

**இரண்டாம் பரிசு:-** க.கிரிஜா,
மதவடி லேன்,
கட்டுடை, மானிப்பாய்.

**மூன்றாம் பரிசு:-** ச.ஆனந்தராசா,
சங்கானை ப.நோ.கூ. சங்கம்,
சங்கானை.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 130 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொகுப்பு: நம்பி

# உழைக்காமலே.....!



'உழைக்காமலே பணம் சம்பாதிக்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!' என்று நினைப்பவன் ஆறுமுகம். அவனைத் திருத்த எண்ணிய கடவுள் அவன் முன் தோன்றினார்.

'இதோ நான் அணிந்திருக்கும் இந்த ஆபரணத்தைக் கீழேபோடுகிறேன். இதை ஒவ்வொருமுறை தாண்டும்போதும் உன்னிடமுள்ள பணம் இருமடங்காகும். ஆனால் ஒரு நிபந்தனை. நீ ஒவ்வொருமுறை தாண்டியவுடனும் எனக்கு 24 ரூபா தந்துவிடவேண்டும்' என்றார் கடவுள்.

உற்சாகமாக ஒப்புக்கொண்டான் ஆறுமுகம். தன் கையிலிருந்த பணத்துடன் முதல்முறை ஆபரணத்தைத் தாண்டினான். இருமடங்காக மாறிய தொகையிலிருந்து 24 ரூபாவைக் கடவுளிடம் கொடுத்தான். இரண்டாம் முறையும் அவ்வாறே செய்தான். ஆனால் மூன்றாம் முறை தாண்டியதும் அவனிடம் 24 ரூபா மட்டும்தான் இருந்தது. அதை அவன் கடவுளிடம் கொடுத்ததும் அவர் மறைந்துவிட்டார்.

உழைக்காமல் சம்பாதிக்க நினைத்த ஆறுமுகம் தன் கையிலிருந்த பணத்தையும் இழந்து நின்றான். அவன் ஆரம்பத்தில் தன்னிடம் வைத்திருந்த பணம் எவ்வளவு?

(விடை XV ஆம் பக்கத்தில்)

# இணைவு!

அன்பும் பண்பும் சேர்ந்தால்
அடக்கம் அங்கே உண்டாகும்

சமுத்திரத்துடன் நதி சேர்ந்தால்
சங்கமம் அங்கே உண்டாகும்

மலரொடு மலரும் சேர்ந்தால்
மாலை அங்கே உருவாகும்

கையுடன் கையும் இணைந்தால்
கனிவுடன் வணக்கம் உருவாகும்

பகலும் இரவும் சேர்ந்தால்
புதிய நாளும் உருவாகும்

பாசமும் அன்பும் இணைந்தால்
போற்றிடும் பக்தி தோன்றிடும்

பொருளும் கல்வியும் இணைந்தால்
பாரில் பெருமை நிலையாகும்!

- இளங்கோ -

# இரு கேள்விகள் ஒரு விடை

1 புத்தகத்தின் ஆடை எது?
இரத்தம் உறிஞ்சும் பூச்சி எது?

2 மலரால் தொடுக்கப்படுவது எது?
சூரியன் மறையும் நேரம் எது?

3 படித்து முடித்துப் பெறுவது எது?
பாலர்கள் வானில் பறக்க விடுவது எது?

4 வக்கீல் எடுத்துக் கூறுவது எது?
கதவுக்குப் போடுவது எது?

- ந.சர்மிளா.

**விடைகள்:**

1) அட்டை 2) மாலை
3) பட்டம் 4) சட்டம்

# குருவி அக்கா

தத்தித் தத்தி குருவி அக்கா
முற்றத்திலே வருகிறாள்
தனது சொண்டால் இறகைக் கோதி
சரிப்படுத்தி விடுகிறாள்

கொத்திக் கொத்தி கொஞ்ச நெல்லை
எடுத்து மெல்லத் தின்கிறாள்
குஞ்சுத் தம்பி பிடிக்கப் போக
கொஞ்சம் தத்தி இருக்கிறாள்.

த.சயந்தா
(தரம்3,காசிப்பிள்ளை வித்தியாலயம், நல்லூர்.)

# எண் எது?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 21 | 51 | 81 | 12 | 42 | ? |

மேல் வரிசை எண்களுக்கும் கீழ் வரிசை எண்களுக்குமிடையில் உள்ள தொடர்பைச் சரியாகக் கண்டுபிடிப்பதன் மூலம் வினாக்குறி இடப்பட்ட கட்டத்தில் வரவேண்டிய எண்ணைக் கண்டுபிடியுங்கள்!

(விடை XV ஆம் பக்கத்தில்)

# சகலகலாவல்லவர்


ஒருவர் ஒரு துறையில் திறமையானவராக இருப்பதே அரிதான விடயம். அப்படியிருக்க ஒருவரே பல துறைகளில் நிபுணராக இருப்பது அபூர்வம்.

அத்தகைய அபூர்வ மனிதர்களுள் இத்தாலியில் வாழ்ந்த லியனாடோ டாவின்சியும் ஒருவர்.

அவர் சிறந்த ஓவியர்; சிறந்த சிற்பி; அற்புதமான கட்டடக்கலைஞர். அவர் மனித உடற்கூறுகளைப்பற்றி ஆராய்ந்து மருத்துவத் துறையினருக்கு வழிகாட்டியாக விளங்கினார். வானவியலில் நிபுணத்துவம் பெற்றிருந்தார். இயற்கையைப் பற்றிய அவரது ஆய்வுகள் விஞ்ஞானத்துறைக்குப் பேருதவி புரிந்துள்ளன. இவர் வரைந்த 'மோனாலிசா' என்னும் ஓவியமே இவரை உலகின் மூலைமுடுக்குகளிலும் பிரபலமாக்கியது. விமானங்களை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமைந்தவை இவர் அந்நாளில் வரைந்த பறக்கும் இயந்திரங்கள் பற்றிய வரைபடங்களே!

ஓவியராகத் தன் கலைவாழ்வை ஆரம்பித்த இவர் சகலகலாவல்லவராக, உலகிற்கு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார்.

# பந்து எங்கே?




கென்யா அணிவீரர் வீசிய பந்தை டெண்டுல்கரின் கையிலிருக்கும் மட்டை பதம்பார்க்கிறது.

ஆனால், பந்து எங்கே என்று உங்களால் கண்டுபிடிக்க முடிகிறதா? குறித்துக் காட்டப்பட்டுள்ள ஆறு இடங்களில் எந்த இடத்தில் பந்து உள்ளது என்று சரியாக ஊகித்துக் கூறுங்கள் பார்க்கலாம்!

# சிரிப்புக் கொத்துக்கள்

பைத்தியம் 1: இந்த ஆஸ்பத்ததிரியில் நீ எப்போது சேர்ந்தாய்?
பைத்தியம் 2: ஏப்ரல் 38ஆம் திகதி.
பைத்தியம் 1: பைத்தியம்! ஏப்ரல் மாதத்திற்கு 38 நாள் கிடையாது. 35 நாள்கள் மட்டும்தான்!

* * *

பேரன் : ஏன் பாட்டி இந்த வயதில் ஐஸ்கிறீம் சாப்பிடுகிறாய்?
பாட்டி : சின்ன வயதில் ஐஸ்கிறீம் சாப்பிட்டால் பல்கெட்டுப்போகும் என்று தாத்தா சொல்வார். அதனால்தான் இப்போது சாப்பிடுகின்றேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நி.மரிஜ்ஜினி
(தரம் 7,சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.)

# கழுதை வாங்கிய முல்லா!



ஒரு சமயம் முல்லா கழுதை ஒன்று வாங்க நினைத்தார். சந்தைக்குச் சென்று நல்ல ஒரு கழுதையாகப் பார்த்து வாங்கிக் கொண்டார்.

கழுதையை விற்றவன் ஒரு மோசடிக்காரன். கழுதையை விற்றபின்னர் தனது நண்பன் ஒருவனை அழைத்துக்கொண்டு முல்லாவைப் பின்தொடர்ந்து சென்றான்.

தனிமையான ஒரு பாதையில் கழுதையை நீண்ட கயிற்றில் கட்டி இழுத்தவாறு முல்லா போய்க்கொண்டிருந்தார். மோசடிக்கார வியாபாரி கழுதையை அவிழ்த்துவிட்டு அந்தக் கயிற்றில் தன் நண்பனைக் கட்டிவிட்டுக் கழுதையை இழுத்துக்கொண்டு போய்விட்டான்.

வீட்டை அடைந்த முல்லா திரும்பிப் பார்த்தார். கயிற்றின் முனையில் கழுதைக்குப் பதிலாக மனிதன் ஒருவன் இருப்பதைக் கண்டு ஆச்சரியத்துடன், 'நீ எப்படி வந்தாய்?' என்று கேட்டார்.

அதற்கு அவன், 'ஐயா! நான் எனது தாயாரிடம் கடுமையாக நடந்து கொண்டேன். அதனால் அவர் என்னைச் சபித்துவிடவே கழுதையாக மாறிவிட்டேன். புண்ணியவானாகிய நீங்கள் என்னை வாங்கியதால், என் சாபம் நீங்கிப் பழைய உருவை அடைந்து விட்டேன்' என்றான்.

அவன் கூறிய கட்டுக்கதையை உண்மை என்று நம்பிய முல்லா அவனிடம், 'அன்பனே! இனியாவது உன் தாயிடம் அன்பாக நடந்துகொள்' என்று புத்திமதி கூறி அனுப்பிவைத்தார்.

மறுநாள் மீண்டும் கழுதை வாங்கக் கடைத்தெருவுக்குச் சென்ற முல்லா, அங்கே தன்னிடம் முதல் நாள் கழுதையை விற்ற வியாபாரி அன்றும் அதே கழுதையை விற்பனை செய்வதற்காக வைத்திருப்பதைக் கண்டார்.

உடனே வேகவேகமாக நடந்து கழுதையிடம் போய் அதனைப் பார்த்து, 'ஏய் மூடா! நேற்றுத்தானே உனக்குப் புத்திகூறி அனுப்பிவைத்தேன்! அதைக் கேளாது உன் அம்மாவிடம் மறுபடியும் ஏன் கடுமையாக நடந்துகொண்டாய்?' என்று கோபமாகக் கத்தத்தொடங்கினார்.

# அறிந்துகொள்ளுங்கள்



வானவில் தோன்றுவதை மழை தூறிக் கொண்டிருக்கும் நேரங்களில் அவதானித்திருப்பீர்கள். அது அரைவட்டமாகவே எமது கண்களுக்குத் தோன்றினாலும் வானவில்லின் முழு உருவம் வட்ட வடிவமானதுதான். நமது கண்களுக்குத்தான் அரைவட்டமாகத் தோற்றமளிக்கின்றது. இதன் முழு உருவத்தையும் மிக உயரத்திலிருந்து - உதாரணமாக - விமானத்திலிருந்து நாம் காணலாம்!

* *

ஜெட் போன்ற விமானங்கள் பறக்கும்போது அவற்றினால் காற்றில் ஏற்படுத்தப்படும் அதிர்வு அலைகளால் கட்டடங்கள் பாதிக்கப்படுகின்றன. இவ்விளைவு 'சோனிக் பூம்' என அழைக்கப்படுகின்றது.

இதனால்தான் உலகப் புகழ்பெற்ற பைசா நகரத்து சாய்ந்த கோபுரத்துக்கு மேலே விமானங்கள் பறப்பதற்கு இத்தாலிய அரசு தடை விதித்திருக்கிறது.

ஏற்கனவே சரிந்த நிலையிலிருக்கும் பைசா கோபுரத்தை 'சோனிக் பூம்' மேலும் பாதித்துவிடும் என்ற அச்சம்தான் காரணம்.